# இளவேனில்



கேசி தமிழ் மன்றம்

இதழ் 15 - ஜனவரி 2019
Ilavenil - Casey Tamil Manram Inc
ISSN 2200-789X

Lyca TV

# உலகின் மிகப் பிரமாண்டமான தொலைக்காட்சி நிலையம்

**NOW AVAILABLE ON LYCATV**

TENT KOTTA

EROS NOW

SUN NXT

ஒருவருட இணைப்புச் சந்தா **$159**

புதுப்பித்தல் **$129**

SET TOP BOX INCLUDED



SALES
0470 030 300 | 0470 216 619
CUSTOMER SERVICE
02 8072 7002

70க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்



*FREE MEASURE & QUOTE*

**LACKMAA Blinds & Curtains**

*Specialists in Custom made Blinds & Curtains*

99, Clifton Grove, Carrum Downs, VIC 3201
Shankar: 0432 722 722, 1800 522 562







| | |
|---|---|
| Curtains & Pelmets | Roller Blinds |
| Plantation Shutters | Roman Blinds |
| Venetian Blinds | Zebra Blinds |
| Vertical & Panel Blinds | Awnings & More....... |

Email: sales@lackmaablinds.com.au
Website: http://www.lackmaablinds.com.au

Find us on f

*பார்வைக்கு...*


சஞ்சிகை : இளவேனில் ~15
வெளியீடு : 20 தை 2019
வெளியிடுவோர் : கேசி தமிழ் மன்றம்
ஆசிரியர் குழு : ச.சத்தியன் & சத்தியா
வடிவமைப்பு : க.பார்த்தீபன்
அட்டைப்படம் : சமுத்திரா பத்மசிறி


தொடர்புகட்கு : கேசி தமிழ் மன்றம்
PO Box 2516,
Fountain Gate, VIC 3805
Australia


## பொருளடக்கம்


- ஆசிரியரின் உள்ளத்திலிருந்து *1*
- தலைவர் உள்ளத்திலிருந்து *2*
- தமிழ் அவமானம் அல்ல அடையாளம் *3*
- கவிதை *4*
- எனது கிராமத்தின் சாபம் *5*
- குறிஞ்சி நிலம் *6*
- நானுமா.......? *7*
- பூ - ஓவியம் *8*
- கற்க கசடற *9*
- நான் மரம் பேசுகிறேன் *11*
- கூட்டுக் குடும்ப வாழ்க்கைமுறையின்
- நன்மைகளும் தீமைகளும் *12*
- முயற்சி திருவினையாக்கும் *13*
- அம்மா *14*
- மங்களம்தரும் பொங்கலோ பொங்கல் ! *15*
- தைப் பொங்கல் - ஓவியம் *17*
- இலங்கை - *17*
- சிறு கதை *19*
- அவர்களும் என்னைப் போன்றவர்களே! *20*
- பருத்தித்துறை வடை செய்வது - *20*
- ஊக்கம் *21*
- தமிழரின் கலாச்சார உடைகள் - ஓவியம் *22*
- உடல் நலம் குறைவின் போது அல்லது ஒரு துன்பத்தின் போது எமக்கு உதவுவது *23*
- உணவும் நலமும் *24*
- இலட்சியத்தை நோக்கி பறந்த பறவைகள் *25*
- ஓவியம் *25*
- ஐம்பெரும் காப்பியங்களும் ஆபரணங்களும் *26*
- "தமிழுக்கு அமுதென்று பெயர் - அந்த தமிழ் எங்கள் உயிருக்கு மேல்" *27*
- மகிழ்ச்சிக்கான வழியை பார் *27*
- பெஸ்கி *28*
- நம்பிக்கை தான் வெற்றியின் இரகசியம் *29*
- எனது பூனை *30*
- அவுஸ்திரேலியாவில் தமிழும் தமிழர் கலாசாரமும் *31*
- இயல் இசை நாடகம் *32*
- ஒரு வீட்டு தோட்டம் *33*
- தொலைக்காட்சியின் நன்மைகளும் தீமைகளும் *34*
- வானவில் கவிதை *35*
- உண்மை அன்பு *36*
- என் அப்பப்பாவும் அப்பம்மாவும் *36*
- உலக அதிசயம் ஈபிள் கோபுரம் *37*
- ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு *37*
- நான் கண் விழித்தெழுந்து *38*
- இலங்கையின் மாகாணங்கள் *38*
- கேசி தமிழ் மூத்த பிரசைகள் ஒன்றுகூடல் *39*
- "பக்தி வலையில் படுவோன் காண்க"திருவாசகம் *40*
- எனது குடும்பம் *41*
- இலக்கிய கட்டுரை - இன்ப கீதம் *42*
- மரம் *45*
- ஊருக்குப் போகலாமே....... *46*
- குடும்பம் ஒன்று சேர்ந்து வரும் எப்போதும் *49*
- தமிழ் பாடசாலைகள் - விக்டோரியா *50*
- தாய் மண்ணே நீ நலமா? *51*

# இளவேனில்

## ஆசிரியரின் உள்ளத்திலிருந்து

தமிழ் புலவன் பாரதியார் காலம் தொட்டு தாய்த் தமிழ் அழிந்து போகும் என்ற பெரும் ஏக்க எதிரொலி காலம் காலமாக ஒலித்துக் கொண்டு தான் இருக்கிறது. இது ஒவ்வொரு தமிழன் மனதிலும் ஆழமாக இழையோடி இருந்தாலும் தமிழை வளர்க்க எதிர் கொள்ளும் முறைகளை இலகுவாக்கி எமது இளைய தலை முறைக்குப் பதிய வைக்க ஒவ்வொரு நாட்டிலும் தமிழர்கள் பல முயற்சிகளை செய்து கொண்டிருக்கிறார்கள்.

அந்த வகையில் அவுஸ்ரேலியாவிலும் மிகத் திறமையாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். பாராட்டவேண்டும். நாம் வசிக்கும் விக்ரோறிய மாநிலத்தில் கேசி தமிழ் மன்றமும் ராமர் பாலம் கட்ட உதவிய அணிலின் அளவில் தமது நேரங்களையும் காலங்களையும் அர்ப்பணிக்கின்றார்கள்.

தமிழ் எழுத்துத் திறமையுள்ள பிள்ளைகள் ஆக்கத்திறமை உள்ளவர்களாகக் கொண்டு வரவேண்டும் என்ற ஆவலுடன் உழைக்கின்றோம். அவர்களுக்காக இளவேனில் களம் அமைத்துக் கொடுக்கின்றது.

இதில் மாணவர்கள், பெற்றோர்கள் தொழில் சார்ந்தவர்கள் தங்களின் அனுபவங்களை எழுத வேண்டும் என்ற எமது ஆலோசனையை தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

இளவேனிலுக்கு ஆதரவு தருவோர், எழுதுவோர் மிகச் சிறிய வட்டத்திற்குள் நிற்கிறது. இந்த நிலை மாறவேண்டும். மாற்றத்துக்கு நாமும் உழைப்போம். தமிழால் உயர்வோம். அரை ஆண்டுக்கு ஒன்று என்று வெளிவரும் சஞ்சிகையை காலாண்டுக்கு ஒன்று என்று வெளியீடும் நிலைக்கு கொண்டு வரவேண்டியது இளவேனில் சஞ்சிகையை வாசிக்கும் வாசகர்களாகிய உங்களிடம் விட்டு விடுகிறோம், இந்த தார்மீகப் பொறுப்பு இலகுவானதல்ல! இந்தச் சுமையை ஒவ்வொருவரும் சுமப்போமானால் இளவேனில் சஞ்சிகை சிறப்பான வெளியீடாக வெளிவரும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் கிடையாது. ''தமிழ் எங்கள் மொழி! உரக்கச் சொல்வோம். தமிழ் எங்கள் அடையாளம்! நிலைக்கச் செய்வோம்''

**நன்றி!**

**ஆசிரியர் குழு.**

# தலைவரின் உள்ளத்திலிருந்து ......

இன்று ஒன்பதாவது ஆண்டில் நடைபோடுகின்ற கேசி தமிழ் மன்றம், மீண்டும் ஒரு புத்துணர்ச்சி நிறைந்த காலைவேளையில், விக்டோரியா வாழ் தமிழர்களை ஓரிடத்தில் ஒன்றிணைக்கும் தமிழர் திருநாளை வழமை போன்று ஒழுங்கு செய்து, அந்நன்னாளில் உங்கள் அனைவரையும் இளவேனில் இதழ் வழியாக சந்திப்பது மட்டற்ற மகிழ்ச்சி. மனதுக்கு நெகிழ்ச்சி.

இளையோரைத் தமிழில் எழுதத் தூண்டவேண்டும் என்ற எண்ணக்கருவை மனதிற்கொண்டு 2011ம் ஆண்டில் முதற்சஞ்சிகை வெளிவருவதற்கான ஆரம்பம், இதழைத் தொடர்ந்து வெளியிட முடியுமாவென்று மன்றம் யோசனை செய்ததும், எல்லாமே நேற்று நடந்தவை போல இருக்கின்றன. ஆனாலும் உங்கள் ஏகோபித்த ஆதரவுடன் இளவேனிலின் பயணமும் தொடர்கிறது. மன்றமும் முன்னேற்றப் பாதையில் நடைபோடுகிறது.

இந்த மகிழ்ச்சியான தருணத்தில், தமிழர் திருநாளின் வெற்றிக்குத் தோள் கொடுத்த செயற்குழு உறுப்பினர்களுக்கும், மன்ற அங்கத்தவர்களுக்கும், நண்பர்களுக்கும், நலன்விரும்பிகளுக்கும் என் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இந்த அன்பும், ஆதரவும் என்றும் நிலைக்கவேண்டும் என்று வணங்கி மகிழ்கிறேன்.

க. மணிவண்ணன்
தலைவர்
கேசி தமிழ் மன்றம்

# தமிழ் அவமானம் அல்ல அடையாளம்

-தனுஷ்-

ஆங்கில மோகத்தில் தமிழ் மரபுகளையும் பண்பாட்டையும் மறந்துபோன இன்றைய குழந்தைகளுக்கு தமிழனின் பெருமையை பற்றி தெரியுமா? உலகில் முதன் முதலாக தோன்றிய மொழி தமிழ் உலகில் சில மாதங்கள், மொழிகள், கலாச்சாரங்கள் நாகரீகங்கள் தோன்றியே இரண்டாயிரம் ஆண்டுகள்தான் ஆகின்ற நிலையில், சுமார் இருபதாயிரம் வருடங்கள் முன்பே தோன்றிய மொழி நம் தமிழ் மொழி. காராப்பா மொகஞ்சதாரோ சுமேரிய நாகரீகங்களை விட பல்லாயிரம் வருடங்கள் முன்பே தோன்றியது தமிழ் என்கிறார்கள் ஆராச்சியாளர்கள் ஆம் சுமேரிய நாகரீகத்தின் முதல் ஊரின் பெயரே ஊர்.

உலகின் முதல் மனிதன் தமிழனாகத்தான் இருந்திருக்க வேண்டும் என சொல்லும் DNA ஆய்வுகள் 49 நாடுகளைக் கொண்ட குமரிக்கண்டம் எனும் மாபெரும் தமிழ் ராச்சியம் கடலுக்குள் மூழ்கிப் போனதால் அதன் உண்மை உலகிற்கு தெரியாமல் போய்விட்டது. இரண்டு இலச்சத்திட்டக்கும் மேற்பட்ட ஓலைச் சுவடிகளில் வெறும் பாதிகூட மொழிபெயற்கப்படாத நிலையில் திருக்குறள் அகநானூறு புறநானூறு ஆகிய ஒப்பற்ற நூல்கள் கிடைத்திருக்கின்றன அப்போது முழுவதும் மொழிபெயர்க்கப்பட்டால்?

உலகிலேயே மிகப்பெரிய இன்றளவும் அசைக்க முடியாத கோவில் என்றால் அது கம்போடியா நாட்டில் உள்ள அங்கோர் வாட் கோயில் ஆகும். சுமார் 9 நூற்றாண்டுகளுக்குமுன் சோழவம்சத்தின் வழி தோன்றலில் வந்த இரண்டாம் சூர்யவர்மன் என்கிற பல்லவ அரசன் கம்போடியாவை கைப்பற்றி அங்கே இந்துக்கோவிலை நிருபியவர். அங்கோர் வாட் ஒரு கலைப்பொக்கிஷம் என்றே கூறலாம் ஏனென்றால் கோவிலைச் சுற்றி மிகப்பெரிய அகழி பிரமாண்டமான மதில்ச்சுவர் உயர்ந்து நிற்கும் கோபுரங்கள் திரும்பியதிசையெல்லாம் சிற்பங்கள் என அங்கோர் வாட் ஒரு உலக அதிசயமாக காட்சி அளிக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி காட்டினால் கூட சுமார் 300 ஆண்டுகளாவது ஆகும் என்று பொறியியலாளர்கள் கூறுகின்ற நிலையில் எந்தவொரு தொழில்நுட்பமும் இல்லாத அந்த காலகட்டத்தில் வெறும் 27 ஆண்டுகளில் இது கட்டிமுடிக்கப்பட்டுள்ளது என்பதை நினைக்கும் போதே மிரளவிக்கிறது தமிழனின் திறமை.

தஞ்சை பெரியகோவில் 11 நூற்றாண்டில் சோழ மன்னனான முதலாம் ராஜராஜ சோழனால் கட்டப்பட்ட மற்றோரு உலக அதிசயம். தஞ்சை பெரியகோவிலின் கோபுரம் சுமார் 80 டன் எடை கொண்ட ஒரே கல்லின் செதுக்கப்பட்டது ஆகும். கோபுரத்தின் நிழல் நிலத்தில் சாயாதவாறு கட்டமைத்துள்ளனர் எப்படி?.இக் கோவிலுக்கும் தமிழ் மொழிக்கும் உள்ள தொடர்பு என்ன என்று தெரியுமா? இக் கோவிலில் உள்ள சிவலிங்கத்தின் உயரம் 12 அடி இது தமிழில் உள்ள உயிர் எழுத்துக்களின் எண்ணிக்கை, சிவலிங்க பீடத்தின் உயரம் 18 அடி இது தமிழில் உள்ள மெய்யெழுத்துக்களின் எண்ணிக்கை, ஆலய கோபுரத்தின் உயரம் 216 அடி இது தமிழில் உள்ள உயிர்மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை, சிவலிங்கத்திற்கும் நந்திக்குமிடையிலான தூரம் 247 அடி இரு தமிழில் உள்ள மொத்த எழுத்துக்களின் எண்ணிக்கை இவ்வளவு அதிசயங்களை தன்னகத்தே கொண்டுள்ள தஞ்சை பெரிய கோவில் ஏன் இன்றளவும் உலகம் அதிசயமாக அடிவிக்கப் படவில்லை.

இது மட்டுமல்ல தமிழனால் உருவாக்கப்பட்ட உலக அதிசங்கள் இன்னும்பல தமிழ் நாட்டின் நெல்லையப்பர் கோவிலில் உள்ள தூண்களை தட்டினால் ஷ,ரி,க,ம,ப,த,நி என்ற ஏழு இசைசப்தஸ்வரங்கள் ஒலிக்கும் இது உலக அதிசயம் தானே. சில பழங்கால கோவில்களில் உள்ள யாழி சிலையின் வாயில் ஒரு உருண்டை இருக்கும் அந்த உருண்டை யை நாம் உருட்டலாம் ஆனால் ஆயிரம்

வீரர்கள் ஒன்று சேர்ந்து முயற்சித்தாலும் அந்த உருண்டையை வெளியே உருவமுடியாது.

திருநல்லாற்றில் உள்ள சனீஸ்வரர் கோவில் எந்தவொரு செயற்கைக்கோளும் இக் கோவிலைக் கடக்கும் பொழுது சிலவினாடிகள் செயலிழந்து விடுகின்றன அதேநேரத்தில் செயற்கைக்கோளுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுவதில்லை இதற்குக்காரணம் அந்த கோவிலின் மேல் விழுகின்ற கருநீலக்கதிர்கள் இதை அந்தக் காலத்தில் கண்டுபிடித்து அந்த இடத்தில கோவிலை கட்டினார்களே அது உலக அதிசயம் தானே.

உலகிற்க்கு நாகரீகம், கலாச்சாரம், கலை, அறிவியல், மருத்துவம் என அனைத்தையும் கற்றுக்கொடுத்த நம் தமிழர்களின் இன்றைய நிலைதான் என்ன. தமிழனின் பெருமை அழியவும் மறையவும் காரணமாக தமிழர்களே இருக்கிறார்கள் வருத்தத்திற்குரிய விடையம். இதற்கு தீர்வுதான் என்ன? சுலபம் ஒவ்வொருவரும் தமிழில் பேசுவோம் தமிழ் மேல் வெறி செந்தமிழில்தான் பேசவேண்டும் வேறுமொழிகள் பேசக்கூடாது என்றல்லாம் கூட இல்லை தெரிந்த தமிழில் தலைநிமிந்து பேசினால் போதும்.

## *கவிதை*

*கனவில் அவள் பூக்கள்*
*சொல்லும் இனிய சொற்கள்*
*நடந்து போகும் போது அவள் வாசனை தூக்கல்*

*கனவு கலைந்து,*
*சேவல் கூவும் சத்ததிற்க்கு நான் எழும்பி*
*முதுகெலும்பு முறிய கை நீட்டி*
*காப்பிதண்ணி குடிப்பேன் நான் விரும்பி*

*காலை எழுந்தவுடன் படிப்பு*
*என்று பாரதி சொன்ன காலம் போய்*
*இப்போ தொலைபேசியில் யார் என்னை அழைத்தார் என்ற நோய்*

*படி படியாக நான் நடந்து*
*மொட்ட மாடிக்கு நான் போவேன்*
*சூரியன் உதித்து, காகம் பறந்து,*
*கோவில் மணி அடித்து, காபி ருசித்து*
*பார்த்து ரசிப்பேன் என் யாழ்(ப்பாணம்)*

**-துவாரகன்-**

# எனது கிராமத்தின் சாபம்

- பிரியங்கா கெங்காசுதன், ஆண்டு *9* -

காலையில் கதிரவன் தனது ஒளியை பிராகாசித்தான். குருவிகள் சந்தோசத்துடன் ரீங்காரமிட்டு பறந்தன. தென்னஞ்சோலைகளும் மாந்தோப்புகளும் நிறைந்த இடம். இங்கு இருக்கும் ஏராளமான கோவில்களின் மணிச்சத்தம் எப்போதும் காதில் அடித்துக்கொண்டிருக்கும். அருகில் இருக்கும் கடற்க்கரையில் வேக கடல் அலைகள் பரதம் அடிக்கும். வெள்ளை சீருடைகளை அணிந்து சிறுவர்கள் பட்டாம்பூச்சிகள் தம் சிறகை விரித்து பறப்பது போலவே பாடசாலைக்கு செல்வார்கள். இங்கு பல வசதிகள் இல்லை. ஒழுங்கான உணவு, கல்வி, மருத்துவ வசதிகள் இல்லை. ஆனால், பூவோடு நார் சேர்ந்து மணம் பரப்புவது போல, இந்த ஊரின் அழகு இங்கு வாழும் மக்களின் மனதில் இருந்தது. இதுதான் நான் வசித்த ஊர். இப்படித்தான் நான் வரும்போது இருந்தது. ஆனால், இப்போது தனி மரமாக எனது ஊர் நிற்கின்றது.

அன்று வெள்ளிக்கிழமை. இங்கு இருக்கும் எண்ணற்ற கோவில்களின் மணிச்சத்தம் அடித்துக்கொண்டு இருந்தது. கோவிலில் இருக்கும் மின்சார ஒலி பெருக்கியில் இருந்து வரும் பக்திப் பாடல்கள் ஊரை நிரப்பியது. ஊர் மக்கள் எல்லோரும் தலைகுளித்து பக்தி பரவசத்துடன் கோவிலுக்கு தரிசனம் செய்ய சென்றார்கள். குழந்தைகள் ஆர்வத்துடன் பாடசாலைக்கு தம் நண்பர்களுடன் சென்றார்கள். நான், எனது நண்பியுடன் பேசிக்கொண்டு பாடசாலைக்குச் சென்றேன்.

முதலில், எனக்கு கணக்குப் பாடம் இருந்தது. பின்பு, விஞ்ஞானம். இந்த இரண்டு பாடமும் எனக்கு நன்றாகக் பிடிக்கும். நான் உன்னிப்பாக எனது வாத்தியார்கள் கற்பிப்பதை கேட்டு எனது புத்தகத்தில் குறிப்புகளை எழுதினேன். திடீரென ஒரு சத்தம். வானத்தில் இருந்து பெரிய இடி வீழ்ந்த மாதிரி ஒரு ஒளி. பயத்தில் நான் நகரவில்லை. ஆனால், எனக்கு வியர்வை பெரும் அளவில் கொட்டியது. பயத்தின் மீதியால் எனது மனம் பட படவென அடித்தது. வகுப்பறையில் இருந்த அனைத்து மாணவர்கள் வெளியே ஓடினார்கள். அப்போதுதான் பெருவாரியான குண்டுகள் வானில் இருந்து மழையென பூமியை நோக்கி பெரும் சத்தத்துடன் பொழிந்தன.

எங்களுக்கு கற்றுகைகொடுத்து ஆசிரியர்கள் 'ஓட வேண்டாம், ஓட வேண்டாம்' என்று தொடர்ச்சியாக கூறினாலும் அல்லோல கல்லோலப் பட்டு எத்திசை ஓடுவது என்று தெரியாமல் கால்போன போக்கில் ஓடினார்கள். அந்த ஒரு நொடி, எனது வாழ்க்கையை தலைகீழாக திருப்பியது. வெடிகள் விழ, எனது முகத்தில் இரத்தக்கறை பட்டது. அதை துடைத்துப் பார்த்தால், எனது நண்பர்களின் கால் துண்டாக வெட்டிக்கிடந்தது. எனது வகுப்பில் இருக்கும் மாணவர்கள் பெருங்காயங்களுடன் வேதனையில் அலறிக் கொண்டு இருந்தனர். அந்த பச்சிளங் குழந்தைகளின் அலறல் மரண ஓலம் இந்த கிராமத்தின் மூலை முடுக்கெங்கும் எதிரொலித்துக் கொண்டிருந்தது. பால் போல வெண்மையாக திகழ்ந்து இருந்த மணல், இரத்ததில் மூழ்கியிருந்தது. மாணவர்களின் சீருடைகள் செம்பரத்தி பூப்போல சிவப்பு வர்ணத்துடன் இருந்தது. துடித்து கொண்டிருந்த அந்த பிஞ்சு குழந்தைகளின் தசைகள் மரங்கள் மற்றும் கோயில் மீதும் ஒட்டிக் கொண்டு இருந்தன.

உற்றார், உறவினர்கள் அலறித் துடித்துக்கொண்டே பாடசாலையை நோக்கி ஓடி வந்தார்கள். மாணவர்களின் உடல்களை தேடி எல்லோரும் தூக்கிக் கொண்டு திக்குத் திசை தெரியாமல் ஓடினார்கள். அந்த கிராமத்தின் ஒப்பாரிகள் அந்த மண்ணையே அதிர வைத்தது. தலையைப் பிய்த்துக் கொண்டு மரங்களில் தலையை மோதிக் கொண்டு கதறி அழும் பெற்றோர்களின் மரண ஓலம் அந்த கிராமத்தின் காதில் ஒலித்தது.

காலையில் எழும்பினால் பறவைகளின் சங்கீதம், கடல் அலைகள், கோவில் மணிகள், அனைத்தும் அந்த நாளில் இருந்து கேட்பது

இல்லை. எங்கும் மக்களின் மரண ஓலம் தான் காதில் கேட்டுக்கொண்டிருக்கும். நான் அதிஷ்டவசமாக தப்பினேன். எனது அம்மாவுடன் புலம்பெயர்ந்து வந்து விட்டேன். ஆனால், அந்த பிஞ்சு குழந்தைகளின் படுகொலைகள் எத்தனை வருடம் ஆனாலும் எனது மனதை விட்டுப் போகாது.

## குறிஞ்சிநிலம்

பழந்தமிழர் வாழ்ந்த நிலப்பகுதிகள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களாகப் பிரிக்கப்பட்டன. இதில் மலையும் மலை சார்ந்த நிலத்தையே குறிஞ்சி என்று அழைப்பர்.

குறிஞ்சி நில மக்கள் முருகனை குல தெய்வமாக வழிபட்டனர். இம்மக்களை குறவர் குறத்தியர் என்பர். இவர்களின் பிரதான தொழில் வேட்டையாடல் கிழங்கு அகழ்தல் மற்றும் தேன் எடுத்தலாகும். இவர்கள் விருந்தோம்பலிலும் சிறந்து விளங்கினர்.



அங்கயன் மயூரன் Angayan Mayooran

# நானுமா.......?

**- சரணியா சத்தியன் -**

அனல் காற்று வீசும் அந்த மாலை பொழுதினிலே, பறவைகள் யாவும் இரை தேடிய பின்னர் தங்கள் கூட்டை நோக்கி செல்வதைப் போலவே, மெல்போன் மாநகரின் வர்த்தக மையமான கொலின் வீதியில் பலதரப்பட்ட மக்கள் தங்கள் கடமைகளை முடித்து வீடு நோக்கி செல்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் ஹுசைன் போல்ட்டையும் மிஞ்சும் வேகத்துடனும் எங்கே தங்கள் புகையிரதத்தினை தவர விட்டு விடுவோமோ என்று முகமெங்கும் பரபரப்புடனும் ஒருவரை ஒருவர் முண்டியடித்த வண்ணம் சதர்ன்குரஸ் புகையிரத நிலையத்தை நோக்கி சென்றவண்ணம் இருக்கின்றனர். இந்த பரபரப்பான உலகத்திலே நிதானம் எனும் சொல்லுக்குத்தான் இடமுண்டோ என்பதை உறுதிப்படுத்தியது அந்த கொலின் வீதி.

அந்த மக்கள் எனும் வெள்ளத்தில் நீந்தி புகையிரத நிலையம் எனும் கரையை அடைந்தனர். சாத்விகாவும், தர்ஷியும். புகையிரத நிலையத்தை அடைந்த போதும் அவர்கள் ஓட்டம் இன்னும் நிறைவடையவில்லை. இளைப்பாற நேரமின்றி தங்களது கிரான்பேர்ண் ரயில் நிற்கும் 12ம் இலக்க தரிப்பிடத்தை நோக்கி ஓடிவந்து மூச்சுவாங்க நிற்கின்றனர்.

புலம்பெயர் நாட்டிலே வேலை கிடைப்பதே அதிஷ்டம் என்றால், நம் இனத்தவர் ஒருவருடனாவது வேலை செய்ய கிடைப்பது பேரதிஷ்டம், அதிலும் அவரும் நம் புகையிரதத்திலேயே பயணம் செய்வாராயின் பெரும் பாக்கியம் என்றே கூறலாம். அப்படிப்பட்ட பெரும் பாக்கியசாலிகள் தான் சாத்விகாவும், தர்ஷியும்.

"அப்பாடி.... இன்னும் ரயில் வர்ரத்துக்கு 3நிமிஷம் இருக்கு தர்ஷி."

" ஓமோம் சாத்வி. நான் இன்னிக்கு 5:20 ரயில விட்டுடுவோம் எண்டு தான் நினைத்தேன்." நல்ல வேளை. இல்லனா 20 நிமிஷம் காத்திருக்கனும் அடுத்த ரயிலுக்காக.

"ம்.... எல்லாம். அந்த சொட்ட மண்டையால் வந்தது. அவனுக்கு ஜோக் சொல்ல நேரம் காலமே இல்லாம போச்சு. வீட்டுக்கு கிளம்பின எங்கள் கேட்டாத்தான் விடுவேன்கிற மாதிரி பிடிச்சு வச்சுட்டான்"

"பொய் சொல்லக் கூடாது சாத்விகா......" என்று பாடிய தர்ஷி, " சாத்வி உன் மனசாட்சிய தொட்டுச் சொல்லு, அவன் சொன்னதுக்கு பேர் ஜோக்கா.? எனக் கேட்க இருவரும் கலகலத்துச் சிரித்தனர்.

இருவரது சிரிப்பும், ஒலிபெருக்கியில் வந்த செய்தியான " அடுத்ததாக கரன்போன் புகையிரதமானது 1 நிமிடத்தில் தரிப்பிடம் 12ஐ அடையும்" என்பதில் மறைந்து பரபரப்பாகினர்.

புகையிரதம் வந்தடைந்ததும் ஒருவாறு புகையிரதத்தினுள் ஏறி ஜன்னல் கரையோரமாக இரு இருக்கைகளில் அமர்ந்து தங்களை ஆசுவாசப்படுத்திக் கொண்டனர்.

பணி முடிந்து களைப்புடன் வந்த தனது பிள்ளைகளை மடி தாங்கிய புகையிரதமானது தனது

பயணத்தை ஆரம்பித்த அதே வேளையில் நண்பிகளும் தங்களது அளவளாவளை ஆரம்பித்தனர்.

"கொலின் ச்டீரீட்ல வேலை செய்ரதிலையும் ஒரு நல்லது இருக்கு சாத்வி. கொஞ்சம் முந்தி ஏறிட்டா கட்டாயம் இருக்க இடம் கிடைக்கும். பாரு இப்பவே இடம் எல்லாம் காலி. இனி போக போக சன நெருக்கம் வேற கூடிடும்."

அதுவும் சரி தான் என்றால் சாத்வி.

அப்பொழுது புகையிரதமானது பார்லிமண்ட் புகையிரத நிலையத்தினை வந்தடைந்தது. அதில் ஏறிய மக்களுடன் ஒரு கர்ப்பிணிப் பெண்ணும் ஏறினாள். புகையிரதத்தில் மாற்றுத்திறனாளிகளுக்காகவும், முதியோருக்காகவும், கர்ப்பிணிகளுக்காகவும் கதவுடன் கூடியதாக எட்டு இருக்கைகள் ஒதுக்கப்பட்டிருக்கும். அவர் ஏறிய போதே அந்த எட்டு இருக்கைகளிலும் ஆறு ஆண்களும் இரு

பெண்களும் அமர்ந்திருந்தனர். அவர்களில் சிலர் அவரைப் பாராதது போல இருக்கவும், அலட்சியப் படுத்தவும் முனைந்தனரே தவிர ஒருவரும் எழுந்து இடமளிக்க முன்வரவில்லை. ஒரு மூன்று நிமிடங்களின் பின்னரே அதிலிருந்த ஒரு பெண் எழுந்து அவருக்கு இடம் வழங்கினார்.

இதனைப் பார்த்துக் கொண்டிருந்த தர்ஷி, " பாத்தியா சாத்வி நிலமையை, ஒரு கர்ப்பிணிப் பொன்னு வந்து நிக்கும் போது ஒருத்தனும் எழும்பல. அதுவும் முக்கால்வாசி பேர் ஆம்பிலைங்க. ஏன் அந்த பொன்னு கூட கொஞ்ச நேரம் கழிச்சு தான் எழும்பினது. இப்பல்லாம் உலகத்துல ஒருத்தொருக்கு ஒருத்தர் உதவி செய்ரது என்கிரதே இல்லாம போச்சு. காலக் கொடுமை"

ஏன் தர்ஷி உனக்கேன் தோணல எனக் கேட்டாள் சாத்வி.

தர்ஷி குழப்பத்துடன் என்ன தோணல எனக் கேட்டாள்.

அது தான் அந்த பொண்ணுக்கு உன்னோட சீட்ட கொடுத்து உதவனும் எண்டு.

அதில்ல சாத்வி, அது தான் ஸ்பெசல் சீட் இருக்கே. அவங்க எழுந்து இடம் கொடுப்பாங்க எண்டு நினைச்சன். ஆனாலும் அவங்க எழும்பாத போது நானே எழும்பலாம் எண்டு தான் நினைச்சன். பட் அதுக்குள்ள அந்த பொண்ணு எழும்பிட்டா.

"பாத்தியா தர்ஷி. அவங்ககிட்ட மட்டும் இல்ல உன்கிட்டயும் உதவி மனப்பான்மை இல்ல. உன்ன தாண்டித்தானே அந்த பொன்னு போச்சு. உண்மையிலேயே உன்கிட்ட உதவி மனப்பான்மை இருந்திருந்தால், அந்த பொன்ன பாத்த உடனையே எழுந்திருந்திருக்கனும். நாங்க அப்படி செய்யலயே. அப்புறம் எப்படி அவங்கல மட்டும் தப்பு சொல்ல முடியும். உன் மானச தொட்டு சொல்லு அவங்க எழும்பல எண்டு நீ எழும்ப போகும் போது, உன் மனசுல "ஐயோ நான் இப்ப எழும்பனுமா " எண்டு சலிப்பு வரல.. அவங்க கிட்ட மட்டும் இல்ல. எங்க கிட்டயும் உதவுர குணம் இல்ல தான் தர்ஷி .

இதனைக் கேட்ட தர்ஷியின் மனம் அவளிடம் கேட்ட ஒரே கேள்வி, " நானுமா...?"



# கற்க கசடற

- கீர்த்திகன் சீவராஜா மெல்பேர்ன் -

அவுஸ்திரேலியாவில் வாழும் எம் போன்ற மாணவர்களுக்கு வேலை அனுபவ கல்விமுறை ஒன்று நடைமுறையில் இருப்பது எல்லோருக்கும் தெரிந்ததே. கடந்த கால மூத்த சந்ததியில், ஒரு சில பெற்றோர்கள், கல்வியில் கவனம் செலுத்தாமல் இருந்திருக்கிறார்கள் என்று நாம் அறிந்திருக்கிறோம். அந்த பெற்றோர்கள் தாம் செய்யும் தோட்ட வேலைகளிலோ அல்லது வீட்டு வேலைகளிலோ தங்களின் பிள்ளைகளை ஈடுபடுத்தி, வாழ்க்கை செலவை சமாளித்தார்கள்.

ஆனால், 20ம் நூற்றாண்டின் முற் பகுதியில், ஒரு சில பெற்றோர்கள் படிப்பு அவசியம் என்று உணர்ந்து தங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி, அவர்களை கல்வி அறிவு பெறச் செய்தார்கள். அத்துடன், அவர்கள் பாடசாலை விட்டு வந்ததும், தொடர்ந்து தமது பெற்றோர்களுக்கு, உதவியாக அந்த வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டு வந்தார்கள். ஆனால், 20ம் நூற்றாண்டு பிற் பகுதியில், கூடிய அளவில் பெற்றோர்கள் படிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அவர்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி முழு நேரக் கல்வி கற்பதற்கு முழு ஊக்கத்தைக் கொடுத்தார்கள். அதே நேரம், அவர்களை வீட்டு வேலைகளில் அல்லது தமது சொந்த வேலைகளில் ஈடுபடுத்தாமல் பிள்ளைகளின் கல்வியில் முழு கவனத்தை செலுத்தினார்கள்.

ஆனால், நாம் வாழும் இந்த 21ம் நூற்றாண்டு காலத்தில், எல்லோரும் 'படிக்கவேண்டும்' என்று முழு கவனத்தையும் படிப்பில் செலுத்தி வருகிறார்கள். சில பெற்றோர்கள் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அவர்களின் பிள்ளைகளை படிப்பதற்காக வெளி நாடுகளுக்கும் அனுப்புவார்கள்.

ஆனால் இப்போதைய பாட திட்டத்தின் படி கல்லூரி செல்லும் மாணவர்களுக்கு, வேலை அனுபவம் பெறுவதற்கான, கல்வி முறை ஒன்றை பாடசாலை மூலம் செயற்படுத்தி மாணவர்களை அனுப்புவார்கள். ஆனால், பதினைந்தும் இருபது வயதுக்குள் உட்பட்ட சில மாணவர்கள், அனுபவ கல்வி திட்டம் என்று . ஆரம்பித்து பகுதி நேர வேலைக்கு செல்கின்றார்கள். அதே நேரம், சில மாணவர்கள், பாடசாலை நேரத்தில் படிக்காமல், பகுதி நேர வேலையில் முழு கவனத்தை செலுத்துகிறார்கள். இந்த வயதில், பகுதி நேர வேலைக்கு செல்லாமல், வேறு பல நடவடிக்கைகளில் செலுத்தலாம். அது மட்டுமல்ல, இந்த வயதில் படிப்பு மிக முக்கியமானது, அதனால் நேரத்தை படிப்பில் செலுத்தலாம். மேலும், இந்த நேரத்தை, குடும்பத்தோடு மற்றும் நண்பர்களோடு செலுத்தினால், சந்தோசமாக இருக்க முடியும்.

நாம் வாழும் இந்த 21ம் நூற்றாண்டு காலத்தில், படிப்பறிவு இருப்பவர்கள் எதிர்காலத்தில் நல்ல வாழ்க்கை வாழ முடியும். படிப்பறிவுடன் நாம் எதையும் சாதிக்கலாம். சிறிய வயதில் பகுதி நேர வேலைக்கு போவது பிழை என்பதை விட, படிப்பில் கூடின கவனத்தை வைத்து, வேலை அனுபவம் பெறுவதற்காக பாடசாலை முலம் செயற்பாடுகளுக்கு போகலாம். ஆனால், சில மாணவர்கள், வருமானத்தில் ஆசைப்பட்டு, வேலை அனுபவத்திலிருந்து, படிப்பில் கவனத்தை செலுத்தாமல், பகுதிநேரவேலைக்குப் போக தொடங்குவார்கள். சாதாரணமாக மாணவர்களுக்கு, நேரத்தை படிப்பில் செலுத்துவதே கடினமாக இருக்கும். அதே நேரம், பகுதி நேர வேலைக்கு சென்றால், கல்வி கற்பதில் மிக மிகக் கடினமாக இருக்கும். அதே வேளை இந்த வயதில், பல அனுபவங்கள் பெற்றுக்கொள்ளலாம். இந்த அனுபவங்கள் எமது எதிர்கால வாழ்க்கைக்கு நிச்சயமாக உதவும். எப்படியன்றால் நிதி நிர்வாகம், நேரத்தை நிர்வகித்தல், வேலை சூழல் அனுபவம் மற்றும் மற்றவர்களுடன் வேலை

செய்வதின் முழு அனுப்பவங்கள் போன்ற வாழ்க்கைக்கு முக்கியமான அறிவினை கற்றுக்கொள்ளலாம். இந்த வயதில் பகுதி நேர வேலைக்கு செல்லாமல், வேலை அனுபவ செயற்ப்பாடுகளுக்கு போய், படிப்பில் முழு கவனத்தை செலுத்தவதே மிகச்சிறந்தது. அதே நேரம், பகுதி நேர வேலைக்குப் போவதை விட, வேறு பல நடவடிக்கைகளில் கூட பங்குப்பற்றலாம். அதாவது, இந்த இளம் வயதில், விளையாட்டு, இசை, நடனம், பாடல், போன்ற செயற்பாடுகள் செய்யமுடியும்.

காலம் கடந்தபிறகு, இம்மாதிரியான செயற்பாடு செய்கின்ற உடல்வலிமை, மன வலிமை மற்றும் நேரமும் இருக்கமுடியாது. ஒருவர் இவற்றினை கற்பதில் மிக ஆர்வம் இருந்தால், பகுதிநேரவேலையில் நேரத்தை செலுத்துவதைக் காட்டிலும், ஒரு விளையாட்டு, இசை, நடன பாடசாலைக்கு போகலாம். இந்த மாதிரி செயல்களில் நேரத்தை செலுத்தினால், அவற்றை கற்பதுடன், உடலும் மனமும் மிக ஆரோக்கியமாக இருக்கும்.

அத்துடன், குடும்பத்தோடும், நல்ல நண்பர்களோடும் சேர்ந்து இருப்பதற்கு நேரம் அதிகளவு இருக்கும், மற்றும் குடும்பம், நட்புத்தொடர்பு பலமாக வளரும். நாம் குடும்பத்துடனும் மற்றும் வேறு செயற்பாடுகளிலும் நேரத்தை சரியாக பராமரிக்க வேண்டும். சிலர் இந்த நேரத்தை கற்பதில் கவனத்தை செலுத்துவதைக் கூட கடினமாக காண்டார்கள். இதற்கு காரணம், பாடசாலை, விட்டுப் பாடங்கள், விளையாட்டு குழுவில் விளையாடுவது, இசை, நடனம், பாடல் பயிற்சி செய்வது. இதற்கு மேலே பகுதிநேரவேலைக்கு போனால், குடும்பத்துடன் மற்றும் நண்பர்களுடன் நேரத்தை செலுத்துவது மிகவும் கடினமாக இருக்கும். நாம் குடும்பத்தோடு இருக்காமல் வேலைக்குப் போனால், மனதுக்கு நல்லது அல்ல. எல்லாதிற்கும் மேலாக, பகுதிநேரவேலைக்கு போவதற்கும் பாடசாலை பாடத்தின் வீட்டு வேலையை கவனிப்பதற்கும் நேரம் போதாமையால், மன அழுத்தம் உருவாக காரணமாகிவிடும். அதனால் இந்த மன அழுத்தம் உருவாவதை தவிர்ப்பதற்கு ஒரே ஒரு வழி, குடும்பத்துடன் சந்தோசமாக இருந்து, எல்லா பிரச்சனைகளையும் அவர்களுடன் கதைத்து தீர்த்து, பாடசாலை பாடத்தின் வீட்டு வேலைகளில் முழு கவனத்தை செலுத்தி இருக்கவேண்டும். அதனால், பிள்ளைகளாகிய நாம், பகுதி நேர வேலைக்குப் போகாமல் குடும்பத்துடன் மற்றும் நண்பர்களுடன் நேரத்தை செலவழிக்கலாம்.

பகுதி நேர வேலைக்கு சென்றால், படிப்பில் கவனம் செலுத்த நேரம் இருக்க முடியாது, வேறு பல நடவடிக்கைகளில் பங்குபற்ற முடியாது, மற்றும் குடும்பத்துடன், நண்பர்களுடன் நேரத்தை செலவழிக்க முடியாது. இதனால், இளம் வயதில், பகுதி நேர வேலைக்கு செல்வது முக்கிமல்ல. இந்த வயதில், பல விடயங்களை அறிவதற்கு உடல் மற்றும் மன பலம், ஊக்கம் இருக்கும். நாம் கற்கும் கல்வி பசுமரத்து ஆணி போல் எம் மனதில் பதியும். இன்றைய கால கட்டத்தில் மட்டுமல்ல, எப்போதும் எமது வாழ்க்கைக்கு கல்வி என்பது மிக மிக முக்கியமான ஒன்றாகும்.

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப் புடைத்து" அதாவது, ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வியானது அப்பிறபிற்பு மட்டுமல்லாமல் ஏழுபிறவிகளிலும் உதவும் தன்மை உடையது.

என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவரின் திருக்குறள் வரிகளுக்கு ஏற்றாற் போல என்றுமே அழியாத கல்வி அறிவை, நாம் கல்வி கற்கும் நேரத்தில், முழுமையாக கவனத்தை செலுத்தி, கல்வியை கற்று, நல்ல அறிவினை பெற்று, நாமும், நம்மைச் சார்ந்தோரும், நாடும், நாட்டு மக்களும், உலகமும், உலகின் உயிரினங்களும், வளமும் நலமும் பெற்று, பன்னெடுங்காலம் வாழ வழி அமைப்போம்.

நான்

மா [redacted] மரம்
பேசுகிறேன்

எனது பூர்வீகம் ஈழமணித் திருநாடு. நான் இப்போது அவுஸ்திரேலியாவில் வசிக்கின்றேன். நானும் ஓர் புலம் பெயர்ந்தவள் தான். எனது ஊரிலிருந்து வந்த ஒரு பாட்டி, எனது இனிய சுவையில் மயங்கி, என்னை இங்கு கொண்டுவந்தார். தனது பிள்ளைகளைப் போலவே, என்னையும் வளர்த்து வருகிறார். குளிர் காலத்தில், அவர்களைப் போலவே நானும் வீட்டிற்குள் வாழ்கிறேன். வெய்யில் காலத்தில், நான் வெளியில் வாழ்கிறேன். என்னாலும் அவர்களைப் போலவே, குளிரை தாங்க முடியவில்லைத் தான். அவர்களும் என்னைப்போல் வேருடன் பிடுங்கி இங்கு நாட்டப் பட்டவர்கள் தானே. அதனால் நான் அவர்களுக்கும் குளிர் ஒத்துவரவில்லைப் போலும். எனது பெற்றோர்கள், இயற்கையாகவே வளர்ந்து மக்களுக்கு, நிழலையும், பழங்களையும் கொடுத்தார்கள். இலைகளாலும், வேர்களாலும், மண்ணுக்கு வளத்தை கொடுத்தார்கள். நானும், பாட்டிக்கு இயற்கையான இனிமையான பழத்தை கொடுக்க விரும்புகிறேன், எனது கிளைகளை விரித்து இலைகளைப் பரப்பி நான் வாழும் அவுஸ்திரேலிய மண்ணிற்கு உரமாக விரும்புகிறேன்.

## திருக்குறள்

ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்.

பொருள்: பசியைப் பொறுத்துக் கொள்ளும் நோன்பைக் கடைப் பிடிப்பதைவிடப் பசித்திருக்கும் ஒருவருக்கு உணவு அளிப்பதே சிறந்ததாகும்.

# கூட்டுக் குடும்ப வாழ்க்கைமுறையின் நன்மைகளும் தீமைகளும்

*- வைஷ்ணவி சிவஞானசுந்தரம் -*

தொன்று தொட்டு, வாழையடி வாழையாகப் பேணி வந்த குடும்ப முறை இன்று பல காரணங்களினால் மாற்றம் கண்டுள்ளது. அதாவது கல்வி, பொருளாதாரம், வேலை வாய்ப்பு, போர்ச் சூழல் போன்ற காரணிகள் மக்களை தாய்நாட்டிலிருந்து புலம்பெயரவைத்துள்ளன. குடும்ப அமைப்பு கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் என இருவகைப்படும். கூட்டுக்குடும்பம் என்பது பெற்றோர் பிள்ளைகளுடன் உறவுகளும் சேர்ந்த பெரிய குடும்பம் ஒரே வீட்டில் ஒன்றாக வாழ்வது. தனிக்குடும்பம் என்பது பெற்றோர்களும் பிள்ளைகளும் மட்டும் கொண்ட சிறிய குருவிக் கூடு போன்றது. இது குடும்பங்களிலும் சகிப்புத் தன்மை, அன்பு, ஆதரவு, சுதந்திரம், பணச்செலவு, குடும்பப் பிணைப்பு போன்றவை மாறுபட்ட அளவுகளில் காணப்படும்.

கூட்டுக் குடும்பங்களை பொறுத்தவரையில், தாத்தா பாட்டி மாமாமார்கள் போன்ற பெரியவர்கள் இருப்பதனால், பிள்ளைகளுக்கு அன்பும் ஆதரவும் கிடைக்கின்றன. ஆனால் தனிக்குடும்பத்தில் ஆதரவும் அன்பும் குறைவான அளவில் பார்க்கமுடியும் ஏன் என்றால் தனிக்குடும்பங்களில் நிறைய பெரியவர்கள் வீட்டில் இருக்கமாட்டார்கள். ஆனால் தனிக்குடும்பங்களில் வாழ்வதனால் வீட்டில் சுதந்திரம் இருக்கும். தனிக்குடும்பத்தில் வாழ்ந்தால் தனிமை இருக்கும். எமக்கு செய்யவேண்டிய வேலையை எமக்கு வேண்டிய நேரத்திலையே செய்யலாம். கூட்டுக்குடும்பங்களில் நிறைய ஆட்கள் இருப்பதால் தனிமை இருக்காது.

கூட்டுக் குடும்பங்களில் இருக்கும்போது, ஒருவருக்கு உதவி தேவைப்படும்போது, அவருக்கு உதவி கொடுக்க வீட்டில் நிறைய குடும்ப உறுப்பினர்கள் இருப்பார்கள். தனிக்குடும்பங்களில் பெற்றோர்களும் பிள்ளைகளும் மட்டும் வீட்டில் வாழ்வதால் மற்றவர்களிடம் உதவி கேட்க கடினமாக இருக்கும். ஆனால் இப்போது தொலைபேசி போன்ற தொடர்பு தொழில்நுட்பம் இருப்பதால், ஒரு பெரிய குடும்பம் ஒரே வீட்டில் வாழ தேவையில்லை. இரண்டு தனி வீடுகளில் வாழ்ந்தாலும் ஒருவர் மற்ற வீட்டில் இருப்பவருக்கு தொலைபேசியால் இல்லாவிடில் மற்றவரின் வீட்டிற்கு போய் உதவி கேட்கலாம்.

கூட்டுக்குடும்பத்தில் வாழ்வதால் குடும்பத்திக்கிடையே பிணைப்பு இருக்கும் ஏன் என்றால் கூட்டுக்குடும்பத்தில் வாழ்தல் அனைத்து வேலைகளையும் நடவடிக்கைகளையும் குடும்பமாக செய்து முடியக்கப்படும். கூட்டுக்குடும்பத்தில் வாழும்போது, சகிப்புத் தன்மை மற்றும் பிணைப்பை தூண்டுகிறது. தனிக்குடும்பங்களாக வாழும்போது, வேறு வீடுகளில் இருக்கிறபடியால் இந்த அளவிற்கு பிணைப்பு இருக்கமாட்டாது. ஆனால், அந்த குடும்பங்கள் எவ்வளவு நெருக்கமாக இருக்கின்றன என்பதைப் பொறுத்து, அவர்கள் ஒன்றாக சுற்றுலாக்களுக்கும் பயணங்களுக்கு போய் மற்றும் நிகழ்வுகளை (உதாரணமாக பிறந்தநாள்கள்) கொண்டாடி பிணைப்பை உண்டுபடுத்துவார்கள்.

கூட்டுக் குடும்பம் தனிக் குடும்பம் என்பவற்றில் பொருளாதாரம், தனிப்பட்ட விருப்பம், வீட்டு வேலை, பிணைப்பு போன்றவை வேறுபட்ட அளவில் இருந்தாலும் இன்றும் கிராமங்களில் கூட்டுக் குடும்பமுறை நிலைத்திருக்கிறது என்பது மறுக்கமுடியாது. அதே வேளையில் நகரங்களிலும் மேற்கத்திய நாடுகளிலும் தனிக்குடும்பமுறை மேற்கூறப்பட்ட காரணங்களால் மேலோங்கிக் காணப்படும். இவ்விரு குடும்ப வாழ்க்கைமுறை நன்மை தீமைகள் பல்வேறு வகையாக காணப்படுகின்றன.

# முயற்சி திருவினையாக்கும்

- அம்ரித்தா ராமச்சந்திரன் ,8-ம் வகுப்பு -

ஒரு நகரத்தில் ஒரு ஏழைக்குடும்பம் வசித்து வந்தார்கள். அவர்களுக்கு சூர்யா மற்றும் ரவி என்ற இரண்டு மகன்கள் இருந்தார்கள். அவர்களின் அம்மா ஒரு வீட்டுவேலைக்காரி. அவரின் வருமானம் மிகவும் குறைவு, அதனால் தன் பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பமுடியாத நிலைமை, ஆனால் சூர்யாவுக்கும்,ரவிக்கும் படிப்பின் மீது மிகுந்த ஆர்வம் இருந்தது,இதனால் அவர்கள் நூலகத்திலிருந்து புத்தகத்தை எடுத்து வீட்டில் இருந்தே படித்தார்கள்.

சில வருடங்களுக்குப் பின் இருவரும் சிறு வேலைகள் செய்து, தங்களது பள்ளிப்படிப்பை 7–ம் வகுப்பிலிருந்து தொடங்க ஆரம்பித்தனர்.அதுமட்டுமல்லாமல் பள்ளி முடிந்தவுடன் அம்மாவிற்கு வீட்டு வேலைகளிலும் உதவி செய்தனர். ஆனால் படிப்பதற்காக எப்பொழுதும் நேரம் ஒதுக்கி படித்து வந்தனர். பள்ளியின் ஆண்டு இறுதி தேர்வில் முதல் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றனர். ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினர்.

இவ்வாறாக இவர்களுடைய வாழ்க்கை 12–ம் வகுப்பு வரை சென்று கொண்டிருந்தது.அப்போது திடீரென அவர்களின் அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது.அவரால் வீட்டுவேலைக்கு செல்ல முடியவில்லை. ஆகவே சூர்யாவும்,ரவியும் அம்மாவின் “**வேலைக்காரி**” வேலையையும் சேர்த்து செய்ய ஆரம்பித்தனர்.இதனால் பள்ளியில் சக மாணவர்கள் கிண்டலும்,கேலியிம் செய்தனர். அதைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல் தங்களின் வேலையிலும்,படிப்பிலும் அவர்கள் கவனம் செலுத்தினர். பள்ளியின் இறுதி ஆண்டு தேர்வு நெருங்கிக் கொண்டிருந்தது,ஆனால் அம்மாவின் உடல்நிலையில் எந்த முன்னேற்றமும் இல்லை.

பிள்ளைகள் படும் துன்பத்தை நினைத்து மனம் வருந்தினார் அம்மா. தானும் மற்றவர்கள் போல நன்றாகா படித்து, நல்ல வேலைக்கு சென்று பணம் சேமித்து வைத்திருந்தால் தன் பிள்ளைகள் இவ்வளவு துன்பப்பட்டிருக்கமாட்டார்கள் என எண்ணி மனம்நொந்தாள். இதைப்பார்த்த சூர்யாவும்,ரவியும், “கவலைப்படாதீர்கள் அம்மா எந்த சூழ்நிலையிலும் எங்களால் தேர்வை சிறப்பாக செய்யமுடியும்,” என அம்மாவிற்கு ஆறுதல் கூறினர். இதைக்கேட்ட அம்மா மனமகிழ்ச்சி அடைந்தார்கள்.

இறுதியாக 12–ம் வகுப்பின் பள்ளி இறுதித்தேர்வு தொடங்க ஆரம்பித்தது. சூர்யாவும்,ரவியும் தேர்விற்கு நன்றாக தயார் செய்து,அனைத்து தேர்வுகளையும் அவர்களால் முடிந்தளவு சிறப்பாக செய்தனர்.

ஒரு மாதத்திற்கு பின்பு தேர்வு முடிவுகள் வெளியானது. இருவரும் ஒருவித பதட்டத்துடன் தங்களின் தேர்வு முடிவுகளைப் பார்ப்பதற்கு பள்ளிக்குச் சென்றார்கள். மாணவர்களின் கூட்டத்திற்கு இடையே புகுந்துச் சென்று தேர்வு முடிவைக் கண்டவுடன் அதிர்ந்து நின்றனர்.காரணம் மாநிலத்திலேயே முதலாவதாக தேர்ச்சி பெற்று இருந்தனர். இருவரும் கட்டிப்பிடித்து மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தனர். இதைக்கண்ட சக மாணவர்கள் வெட்கி தலைக்குனிந்தனர் . சூர்யாவும்,ரவியும் தாங்கள் தான் மாநிலத்திலேயே முதலாவதாக தேர்ச்சி பெற்றுள்ளோம் என்ற செய்தியை தன் அம்மாவிடம் கூறி ஆசிப்பெற்றனர். அம்மாவும் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள்.

ஆகவே ஒருவரின் தோற்றத்தையும், நிலையையும் வைத்து அவர்களால் வாழ்வில் வெற்றி அடையமுடியாது என்று மதிப்பிடக்கூடாது. முயற்சியும், ஆர்வமும் தான் வெற்றிக்கு வழிவகுக்கும்.

# அம்மா



அம்மா, தாய், அன்பான மாதா!

உன்னாலேதான் நடக்க கற்றேன்! பேசக் கற்றேன்!

உன் பாட்டு கேட்டுத்தான் நான் தூங்குவேன்.

உன் பாச இல்லத்தில் என்றும் நான் வாழுவேன்!

உன் கடனை நான் எப்படி திருப்பி கொடுப்பேன்?

அம்மா என் வாழ்க்கையில் நீ தானே என் குரு.

அம்மா நீ தானே என் பாதுகாப்பு !

அம்மா நீ தானே என்றும் எனக்கு உதவும் கை!

அம்மா நீ தானே இந்த உலகில் சிறந்தஅன்னை!

என்னைத் தூக்கிக்கொண்டு பாட்டுப் பாடும் அன்பு அன்னையே !

இந்த உலகில் உன்னைப்போல யாரும் இல்லையே!

நான் உங்களின் வாழ்வில் வந்த சிட்டு குருவியே!

நானும் பறக்க சிறகு தந்த கடவுள் நீங்களே!

ஓவியம்: சுவாதி தர்மசீலன்

வரிகள்: சுவேத்தா தர்மசீலன், சுருதி தர்மசீலன், சுரபி தர்மசீலன், சுவாதி தர்மசீலன்

# மங்களம்தரும் பொங்கலோ பொங்கல் !

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா *M. A. M.Phil , SLEAS* முன்னாள் தமிழ்மொழி

கல்வி இயக்குநர் - மெல்பேண்

" தைபிறந்தால் வழிபிறக்கும் " என்று தமிழர்கள் சொல்லுவது வழக்கமாகும். புலம் பெயர்ந்த நாட்டினில் வாழுகின்ற எங்களின் பிள்ளை களுக்கு இந்த மொழியின் அர்த்தம் என்னவென்று தெரியவே மாட்டாது. அவர்கள் தையைப் பற்றியோ அல்லது தையில் வருகின்ற பொங்கலைப் பற்றியே எண்ணியே பார்ப்பதும் இல்லை. வயது வந்தவர்களான நாங்கள்தான் வருஷா வருஷம் தவறாமல் பொங்கலை பொங்கி வருகின்றோம்.நாங்கள் பொங்கலைப் பொங்கி மகிழ்வது முக்கியம்தான். அதே வேளை எங்களின் பிள்ளைகளுக்கும் பொங்கலைப் பற்றி நாங்கள் தெளிவு படுத்துதலும் முக்கிய மானது என்பதை நாங்கள் அனைவரும் மனதில் இருத்துவது மிகவும் அவசிய மானதே.

புலம் பெயர்ந்த நாட்டில் வாழுகின்ற பிள்ளைகள் அங்குள்ள சூழலுக்கு ஏற்பவே தங்களை மாற்றிக் கொள்ளுகிறார்கள். அவ்வாறு மாறும் வேளை என்பது மிகவும் முக்கியமானதாகும். உணவில் மாறலாம். உடையில் மாற லாம். உழைப்பில் மாறலாம். ஆனால் உள்ளத்தில் தங்களின் பண்பாடு, கலா சாரம் பற்றிய எண்ணங்களை மட்டும் மாற்றாமல் அவர்கள் இருப்பதுதான் மிகவும் முக்கியமாகும்.

பண்பாடு, கலாசாரம், இவற்றினை உணர்த்துவதுதான் எங்களின் விழாக்களும், கொண்டாட்டங்களுமாகும். பண்பாட்டினை நிலை நிறுத்தும் மிகவும் முக்கிய நிகழ்வாக அமைவதுதான் " தைப்பொங்கல் " எனலாம். எங்கள் பிள்ளைகளை உணரச் செய்தாலே பொங்கல் விழாவானது பூரிப்பான தாகிவிடும்.

தைமாதத்தின் தொடக்கத்தில் இந்த விழா ஏன் கொண்டாடப் படுகிறது ?இந்தவிழாவினை யாரை மையப்படுத்திக் கொண்டாடுகிறோம் ? இந்த விழாவின் அடிப்படை எதனை உணர்த்துகிறது ? இந்த விழாவில் தமிழரின் எத்தகைய பண்பாட்டு அம்சங்கள் நிறைந்திருக்கின்றன ? இவை யெல்லாம் புலம் பெயர்ந்த நாட்டில் வாழுகின்ற எங்கள் பிள்ளைகளுக்குச் சரிவரத் தெரியாது. நாங்களும் அதைப்பற்றி விளக்கிச் சொல்லுவதும் கிடையாது. பொங் கல் என்றால் புது உடைகள் வாங்குவோம். பொங்குவோம். தொலைக்காட்சி யில் நடக்கும் பொங்கல் கொண்டாட்ட நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசிப்போம். அத்துடன் பொங்கல் விழா நின்றுவிடும்.

உழைப்பு என்பதுதான் சமுதாயத்தின் அடிப்படை. அந்த உழைப்பில் பங்கு கொள்ளும் அனைவரும் வாழ்த்தப்பட வேண்டியவர்களே. உழைப்புக்கு உதவும் மனிதர்கள், உழைப்புக்கு உதவிடும் விலங்குகள்,உழைப்புக்கு உதவிடும் கரு விகள் கவனத்தில் கொள்ளபடுவதுதான் சமூதாய அறமாகும். அப்படியான ஒரு அறத்தினை வலியுறுத்தத்தான் தைப் பொங்கலைக் கொண்டாடுகிறோம் என்று எங்கள் பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

உலகிலே உயிர்வாழ்வதற்கு வெப்பம் முக்கியமானது. காற்று முக்கியமானது நீர் முக்கியமானது. உணவு முக்கியமானது. இவற்றுக்கெல்லாம் இறை அம்சம் கொடுத்து அவற்றை சமூகத்தின் உயர் நிலையில் வைக்கும் வழக்கம் நெடுங் காலமாக இருந்து வருகிறது என்பதை எங்கள் பிள்ளைகளின் மனதில் இருத்துவதும் முக்கியமான பொறுப்பாகும். இவையாவும் தைப்பொங்கலுடன் இணை கின்றன என்பதுதான் இங்கு சுட்டப்பட வேண்டிய அவசியமான அம்சம் எனலாம்.

விவசாயம் என்பதுதான் சமூக வாழ்வுக்கு முதுகெலும்பாகும். விவசாயம் கொண்டு வருகின்ற

பொருட்களால்த்தான் சமூகத்தில் மக்களின் அன்றாட வாழ்வே சிறப்பாகிறது. அந்த விவசாயத்தைச் செய்பவன் இந்தப் பொங்கலில் போற்றப் படுகின்றான். அந்த விவசாயிக்கு உதவும் மாடுகள் பூசிக்கப் படுகின்றன. விவசாயத்தை செழிப்பாக்கும் சூரியன் வணங்கப்படுகிறது.விவசாயத்துக்கு உதவும் கருவிகள் மதிக்கப் படுகின்றன.இதனால் தைப்பொங்கல் என்பது நன்றியினை நவில்கின்ற பெருவிழா, என்பதை நாங்கள் எங்களின் பிள்ளைகளுக்கு விளங்கப் படுத்த வேண்டும்.

நகரத்தில், புலம்பெயர்ந்த நாட்டில் இருக்கும் பிள்ளைகளுக்கு இந்தியா இலங்கை போன்ற நாடுகளில் செய்யப்படும் விவசாயமோ அதன் முறைகளோ அங்கு விலங்குகள் விவசாயத்துக்கு உதவும் விதமோ விவசாயத்துக்குப் பயன் படுத்தப்படும் ஏர் போன்ற கருவிகளோ பற்றியெல்லாம் தெரிவதற்கு உரிய வாய்ப்பு இல்லைத்தான். அவர்களுக்கு அவற்றினைப் பற்றியும் அதன் பயன் பாடுகள் பற்றியும் விளக்கும் பொழுதான் தைப்பொங்கலின் போது செய்யப்படும் மரபார்ந்த விஷயங்களை அவர்களின் மனதில் பதியச் செய்யக் கூடிய தாக இருக்கும்.

தையில் அறுவடை செய்த புத்தரிசி கொண்டு புதுப்பானையில் பாலும் சர்க்கரையும் சேர்த்து மண்பானையில் பொங்கி மகிழும்பொழுது பொங்கி வரும் பாலினைப் பார்த்து குடும்பத்தில் உள்ளார்கள் " பொங்கலோ பொங்கல் என்று மகிழ்ந்து நிற்கும் நிலையினை எங்கள் பிள்ளைகளின் உள்ளத்தில் இருக்கச் செய்வது மிக இன்றியமை யாததாகும்.

கலப்படம் இல்லாமல் யாவுமே உழைப்பின் பயனாக வந்த அரிசி, பால், சர்கரை, கரும்பு, இஞ்சி, மஞ்சள், வாழை, மாவிலை, இவையெல்லாம் மகிழ்ச்சியின் அடையாளங்கள். மனித சமூகத்தின் மாண்பின் அடையாளங்கள் எங்களின் பண்பாட்டின் அடையாளங்கள்.இவைகள் தைப்பொங்கலில் பயன் படுத்தும் பொழுது ஏற்படும் மனநிறைவுக்கு ஈடு இல்லை என்பதை எங்களின் பிள்ளைகளை உணரச் செய்யவேண்டும்.

கூட்டுறவின் மகத்துவம் தைப்பொங்கலின் சிறப்பாகும். மனிதனும் விலங்குகளும் கூடி உழைத்து அதன் பயனாக வெளிப்படும் ஒரு கூட்டுறவுத் திருநாள் என்றுகூட தைப்பொங்கலை எடுத்துக் கொள்ளலாம். வருடத்தின் தொடக்க மாய்வரும் தையினை மங்களகரமாக வரவேற்க வேண்டுமென்று எண்ணி பொங்கல் திருநாளினை ஏற்படுத்திய எங்களின் முன்னோர்களை நாங்கள் வாழ்த்தாமல் இருந்திட முடியுமா? வருடத் தொடக்கத்தில் மனதில் ஏற்படும் எண்ணங்கள்தான் அந்த வருடம் முழுவதையும் மகிழ்வுடன் வாழ வைக்கும் என்று எண்ணிய உளவியல் சிந்தனையை உவந்தேற்ற வேண்டாமா ?

பொங்கலின் முதலில் மார்கழியின் நிறைவில் போகி என்றொரு பண்டிகை கொண்டாடப் படுகிறது. போகி என்றால் பழைய விஷயங்களை பழைய பொருட்களைக் களைந்து விடுவதாகும். அடுத்து பொங்கல் வருகிறது. பழைய பொருட்களை எரித்து விடுவதைத்தான் போகியில் காண்கிறோம், உண்மையில் இதன் அர்த்தம் அதுவன்று. எங்கள் மனதிலுள்ள பொறாமை வஞ்சகம்.
பொய், கபடு, சூது, வாது, இவற்றையெல்லாம் ஞானம் என்னு. தீயில் பொசுக்கி மனதைத் தூய்மை ஆக்கி புத்தாடை உடுத்து புதுப்பொங்கலை சுவையாக உண்டு புத்துணர்வு பெற்று நிற்கவேண்டும் என்பதுதான் இதன் தாற்பரியம் எனலாம்.

பொங்கலுக்கு அடுத்து மாட்டுப் பொங்கல் வருகிறது. விவசாயத்துக்கு உதவிய மாடுகளுக்கும், பால் தந்து எம்மை வாழ்வித்த பசுக்களுக்கும் நன்றி நவிலும் நாளாக இது அமைகிறது. அடுத்த நாள் காணும் பொங்கல் அமைகிறது. உற்றார் உறவினரை , பெரியவர்களைக் கண்டு அவர்களின் வாழ்த் தினை ஆசியினைப் பெற்றுக் கொள்ளும் நாளாக இந்த நாளை அமைத்து மகிழ்கின்றார்கள்.


மாட்டுப்பொங்கல், போகித்திருநாள், காணும்பொங்கல் இவைபற்றி எல்லாம் நகரித்தில் வாழ்கின்றவர்களுக்கோ. புலம்பெயர் பகுதிகளில் வாழ்கின்றவர்களுக்கோ தெரியவருவது குறைவாகும். பொங்கலைக் கூட குக்கரில் பொங்கி தாங்கள் இருக்கும் வீட்டின் அடுப்படியில் வைத்து கரண்டியால் இரண்டு கரண்டி அவசர அவசரமாக வாயில் போட்டுவிட்டு வேலைக்கு ஓடும் நிலையினைதான் பொங்கல் நன்னாளில் காண்கின்றோம்.மாடிக் குடி இருப்புகளில் வாழ்கின்றவர்களின் பொங்கலை நினைத்துப் பார்க்கவே பரிதாப மாகவே இருக்கும்.

உழைப்பினை மையமாக்கி, தொழிலினை மையமாக்கி, அந்தஸ்த்தினை மையமாக்கி அன்னிய நாட்டினில் வாழும் எங்கள் தமிழர்களின் தைப்பொங்கல் சற்று சறுக்கிய தைப்பொங்கலாகவே அமைவது தவிர்க்க முடியாத ஒன்றாகி விடுகிறது. சொந்த ஊரினில் தைப்பொங்கல் கொண்டாடுவதற்கும் குடியேறிய அன்னிய நாட்டில் தைப்பொங்கல் கொண்டாடுவதற்கும் வித்தியாசங்கள் காணப்பட்ட போதிலும் தைப்பொங்கலைக் கொண்டாடி மகிழ்வதில் தமிழர்கள் பின்னிற்கவில்லை என நினைக்கையில் பெருமிதம் கொள்ளத்தான் வேண்டும்.

சமயம் கடந்த விழாவாக தமிழர் விழாவாக தைப்பொங்கல் விளங்குகிறது என்பதுதான் இந்த விழாவின் மிகச் சிறப்பு எனலாம். உலகில் வாழுகின்ற தமிழர்கள் – கிறீஸ்தவராயினும், இந்துக்களாயினும் , தைப் பொங்கலை மகிழ்வுடன் " பொங்கலோ பொங்கல் " என்று பொங்கும் மனத்துடன் கொண்டாடி மகிழ்கிறார்கள். சமயச்சாயம் பூசப்படாத தமிழர் திருநாளாய் தைப்பொங்கல் திகழ்கிறது என்பது தமிழருக்கெல்லம் மிகவும் பெருமையான விஷயம் அல்லவா !

நன்றி நவிலும் விழா ! உழைப்பாளரின் உன்னத விழா ! கூட்டுறவின் விழா ! மதபேதமற்ற மகோன்னத விழா ! எல்லோரும் ஓரினம் எல்லோரும் ஓர் நிறை என்னும் விழா ! எனவே பொங்கலோ பொங்கல் என்று ஆனந்தமாய் கொண்டாடி அகமகிழ்வோம் வாருங்கள் !




இலங்கை - அட்சரன் மயூரன்
இலங்கை என்
தாய் நாடு. இலங்கை ஒரு
அழகான சிறிய தீவு. இது
ஆசியாக் கண்டத்தில் அமைந்துள்ளது.
இலங்கையை இந்துசமுத்திரத்தின் முத்து
என்றும் அழைப்பர். இது அழகான கடற்-
-கரைகள், வயல்வெளிகள், மலைத்தொடர்கள்
மற்றும் நீர்வீழ்ச்சிகளையும் கொண்ட
வளமான நாடு.
இலங்கை உங்களை
அன்புடன் வரவேற்கிறது

## சிறு கதை

காலையில் கதிரவன் தனது ஒளியை பிரகாசித்தான். குருவிகள் சந்தோசத்துடன் ரீங்காரமிட்டு பறந்தன. தென்னஞ் சோலைகளும் மாந்தோப்புகளும் நிறைந்த இடம். இங்கு இருக்கும் ஏராளமான கோவில்களில் மணிச்சத்தம் எப்போதும் காதில் அடித்துக் கொண்டிருக்கும். அருகில் இருக்கும் கடற்கரையில் வேக கடல் அலைகள் பரதம் அடிக்கும். வெள்ளை சீருடைகளை அணிந்து சிறுவர்கள் பட்டாம்பூச்சிகள் தம் சிறகை விரித்துப் பறப்பது போலவே பாடசாலைக்குச் செல்வார்கள். இங்கு பல வசதிகள் இல்லை. ஒழுங்கான உணவு, கல்வி, மருத்துவ வசதிகள் இல்லை. ஆனால் பூவோடு நார் சேர்ந்து மணம் பரப்புவது போல இந்த ஊரின் அழகு இங்கு வாழும் மக்களின் மனதில் இருந்தது. இதுதான் நான் வசித்த ஊர் சாலியம். இப்படித்தான் நான் வரும் போது இருந்தது. ஆனால் இப்போது தனி மரமாக எனது ஊர் நிற்கின்றது.

அன்று வெள்ளிக்கிழமை. இங்கு இருக்கும் எண்ணற்ற கோவில்களில் மணிச்சத்தம்அடித்துக்கொண்டிருந்தது.
கோவிலில் இருக்கும் மின்சார ஒலி பெருக்கியில் இருந்து வரும் பக்திப் பாடல்கள் ஊரை நிரப்பியது. ஊர் மக்கள் எல்லோரும் தலைகுளித்து பக்தி பரவசத்துடன் கோவிலுக்கு தரிசனம் செய்ய சென்றார்கள். குழந்தைகள் ஆர்வத்துடன் பாடசாலைக்கு தம் நண்பர்களுடன் சென்றார்கள். நான் எனது நண்பியுடன் பேசிக்கொண்டு பாடசாலைக்குச் சென்றேன்.

முதலில் எனக்கு கணக்குப் பாடம் இருந்தது. பின்பு விஞ்ஞானம். இந்த இரண்டு பாடமும் எனக்கு நன்றாகப் பிடிக்கும். நான் உன்னிப்பாக எனது வாத்தியார்கள் கற்பிப்பதை கேட்டு எனது புத்தகத்தில் குறிப்புகளை எழுதினேன். திடீரென ஒரு சத்தம் வானத்தில் இருந்து பெரிய இடி வீழ்ந்த மாதிரி ஓர் ஒலி. பயத்தில் நான் நகரவில்லை. ஆனால் எனக்கு வியர்வை பெரும் அளவில் கொட்டியது. பயத்தின் மீதியால் எனது மனம் பட படவென அடித்தது. வகுப்பறையில் இருந்த அனைத்து மாணவர்கள் வெளியே ஓடினார்கள். அப்போதுதான் பெருவாரி குண்டுகள் வானில் இருந்து மழையென பூமியை நோக்கி பெரும் சத்தத்துடன் வெடித்தன.

எங்களுக்கு கற்றுக்கொடுத்த ஆசிரியர்கள் ஓட வேண்டாம், ஓட வேண்டாம் என்று தொடர்ச்சியாக கூறினாலும் மாணவர்கள் அல்லோல கல்லோலப் பட்டுஎத்திசை ஓடுவது என்று தெரியாமல் கால் போன போக்கில் ஓடினார்கள். அந்த ஒரு நொடி எனது வாழ்க்கையை தலைகீழாக திருப்பியது. வெடிகள் விழ எனது முகத்தில் இரத்தக் கரை பட்டது. அதைத் துடைத்துப் பார்த்தால் எனது நண்பனின் கால் துண்டாக வெட்டிக் கிடந்தது. எனது வகுப்பில் இருக்கும் மாணவர்கள் பெருங்காயங்களுடன் வேதனையில் அலறிக்கொண்டு இருந்தனர். அந்த பச்சிளம் குழந்தைகளின் அலறல் மரண ஓலம் சாலியம் கிராமத்தின் மூலை முடுக்கெங்கும் எதிரொலித்துக் கொண்டிருந்தது. பால் போல வெண்மையாக திகழ்ந்து இருந்த மணல் இரத்தத்தில் மூழ்கியிருந்தது. மாணவர்களின் சீருடைகள் செம்பரத்தி பூப்போல சிவப்பு வர்ணத்துடன் இருந்தது. துடித்துக் கொண்டிருந்த அந்த பிஞ்சு குழந்தைகளின் தசைகள் மரங்கள் மற்றும் கோயில் மீதும் ஒட்டிக் கொண்டிருந்தன.

உற்றார் உறவினர்கள் அலறித் துடித்துக் கொண்டே பாடசாலையை நோக்கி வந்தார்கள். மாணவர்களின் உடல்களை தேடித் தேடி எல்லோரும் தூக்கிக்கொண்டு திக்குத் திசை செரியாமல் ஓடினாரிகள். அந்த கிராமத்தின் ஒப்பாரிகள் அந்த மண்ணையே அதிர வைத்தது. தலையைப் பிய்த்துக் கொண்டு மரங்களில் தலையை மோதிக் கொண்டு கதறி அழும் உற்றார் உறவினர்களின் மரண ஓலம் சாலியம் கிராமத்தின் காதில் ஒலித்தது.

காலையில் எழும்பினால் பறவைகளின் சங்கீதம், கடல் அலைகள், கோவில் மணிகள் அனைத்தும் அந்த நாளிலிருந்து கேட்பது இல்லை. எங்கும் மக்களின் மரண ஓலம் தான் காதில் கேட்டுக்கொண்டிருக்கும். நான் தப்பினேன். எனது அம்மாவுடன் புலம் பெயர்ந்து வந்துவிட்டேன். ஆனால் அந்த பிஞ்சு குழந்தைகளின் படு கொலைகள் எத்தனை வருடம் ஆனாலும் எனது மனதை விட்டுப் போகாது..

## அவர்களும் என்னைப் போன்றவர்களே!

- சமுத்திரா பத்மசிறி -

நாங்கள் விடுமுறைக்கு செல்லும் போது பல இடங்களிற்கு செல்வோம். நாம் போனமுறை இலங்கைக்கு சென்ற போது போன ஒரு இடம் என்னால் மறக்க முடியாதது. அத்தோடு, எனக்கு தமிழில் பேசத் தெரிந்ததன் நன்மையையும் தெளிவாக்கியது,

நாம் போன இடம், இலங்கையில் நடந்த போரில் தம் தாயையோ, தந்தையையோ, அல்லது இருவரையுமோ இழந்த பிள்ளைகள் இருக்கும் ஒரு அனாதை இல்லம், எமது குடும்பமும், எமது சித்தியின் குடும்பமும், அவர்களுடன் ஒரு முழு நாளை, அந்தப் பிள்ளைகளுடன் கழிப்பதாகத் திட்டமிட்டிருந்தோம். அங்கு நாங்கள் சென்று, அந்தப் பிள்ளைகளை கண்ட போது, எனக்கு கவலையாக இருந்தது. எமக்கு இரண்டு பெற்றோர்கள் இருந்தும், கேட்பதெல்லாம் கிடைத்தும், நாம் சில வேளைகளில் திருப்தி அடைவதில்லை. ஆனால், அந்தப் பிள்ளைகளோ பெற்றோர்கள் இல்லாமல், விரும்புவது கிடைக்காமல் விட்டாலும், எவ்வளவு சந்தோசமாக எங்களை வரவேற்று எங்களுடன் பேசினார்கள்.

அவர்கள் எங்களிடம் எங்கள் படிப்பை பற்றியும், அவுஸ்திரேலியாவை பற்றியும், எங்கள் பொழுதுபோக்கு பற்றியும் விசாரித்து அறிந்தார்கள். நாங்களும் அவர்களின் குடும்பத்தை பற்றியும், என்ன படிக்க விரும்புகிறார்கள், வளர்ந்து என்னவாக வர விரும்புகிறார்கள் என்று கேட்டு உரையாடினோம், அவர்களில் சிலர் மருத்துவராகவும், வக்கீலாகவும், ஆசிரியராகவும் வரவேண்டும் என்று ஆசைப்படுவதாக கூறினார்கள். அவர்களுடன் பேசியபடி நாம் அவர்களுடன் மதிய உணவை உண்டு மகிழ்ந்தோம், பின் நாம் எல்லோரும் தமிழ் பாட்டுக்கள் பாடி, எமது பொழுதை போக்கினோம். சில சிறு பிள்ளைகள் எனது அம்மாவையும், சித்தியையும் கட்டி அணைத்து திரும்பவும் வரச் சொல்லி கேட்டபோது, அம்மாவிற்கு அழுகையே வந்துவிட்டது. எப்படி அந்த நாள் முழுவதும் போனதோ தெரியவில்லை, ஆனால் என்னைப் போல் இருக்கும் அப்பிள்ளைகளுடன் அந்த நாளை செலவிட்டது, எனக்கு திருப்தியாக இருந்தது,

அவர்களும் என்னைப் போன்றவர்களே. எனக்கும் என் சகோதரர்களுக்கும் தமிழ் தெரிந்ததால், நாம் அவர்களுடன் இலகுவாக உரையாட முடிந்தது. அவர்களும், எந்த வித தடையும் இல்லாது, எம்முடன் பழக முடிந்தது. நாம் விடைபெறும் போது, திரும்பவும் வருவோம் என்று கூறிவிட்டு விடைபெற்றோம். அடுத்த முறை போகும் போதும் அவர்களுடன் திரும்பவும் நேரத்தை கழிக்க விரும்புகிறேன்,

## பருத்தித்துறை வடை செய்வது.

- ஜனகன் சிவஞானசுந்தரம் -

கூடுகள்:

- பிரிச்ச உளுந்து – 1 கப்
- கோதுமை மாவு – 1 கப் அவித்தது, 1 கப் பச்சை
- நொறுக்கிய மிளகாய் – 1 அல்லது 2 மேசைக் கரண்டி
- வெங்காயம் – 1 , சிறு சிறு துண்டுகளாக நறுக்கிய
- கறிவேப்பிலை – சிறு சிறு துண்டுகளாக வெட்டுப்பட்ட
- பெருஞ்சீரகம் – 1 மேசைக் கரண்டி
- உப்பு – சுவைக்கு

- நீர்
- எண்ணெய்

**தயாரிப்பு முறை**

1. உளுந்தை 6 மணித்தியாலத்திற்கு ஊற வைக்கவேண்டும் பின் உளுந்தை வடித்து எடுக்கவேண்டும் பின் உளுந்தின் கோதுகளே நீக்க வேண்டும் .

2. ஒரு பாத்திரத்தில் கோது நீக்கிய உளுந்து , அவிச்ச கோதுமை மாவு , பச்சை கோதுமை மாவு , நொருக்கிய மிளகாய் , வெங்காயம் , வெட்டப்பட்ட கறி வேப்பிலை , பெருஞ்சிரகம் , உப்பு , சிறிது நீரை ஊற்றி குலைத்து இறுக்கமான பதத்தில் வடை மாவு தயாராக செய்ய வேண்டும் .

3. வடை மாவை சிறு சிறு உருண்டைகளாக பிடித்து எடுக்க வேண்டும் பின் ஓவரு பிடி வடை மாவையும் வட்டமாக மிகவும் தட்டையாக தட்டி எடுக்க வேண்டும் . இலங்கையில் புவரசமிலையில் வடை மாவு தட்டுவார்கள் .

4.தட்டிய வடை மாவை கொதிக்கும் எண்ணெயில் பொன் நிறம் ஆகவும் மொறு மொறு பாகவும் வரும் வரையில் பொரித்து எடுக்கவும் .

5.பொரித்து எடுத்த வடையை ஆறிய பின் காற்று புகாத பாத்திரத்தில் பாதுகாப்பாக வைக்கவும் இது நீண்டநாட்கள் கேட்டு போகாமல் இருக்கும். பண்டிகை நாட்களில் உறவினர்கள் நண்பர்களுடன் உண்டு மகிழ்க்கலாம் .மற்றும் இந்த வடை ஒரு சத்தான உணவு. என் நேரமும் உட் கொள்ள குடிய சிறு உணவு.

## ஊக்கம்

**- விதுஸ் விஜயகுமார் -**

*மகன் :- "அப்பா, அப்பா!"*

*அப்பா :- "என்ன…?"*

*மகன்: "பாடசாலையில் எதிர்காலத்தில் என்ன ஆக விரும்புகின்றீர்கள் என்று ஆசிரியர் கேட்டார்"*

*அப்பா-: "நீ என்ன சொன்னாய்?"*

*மகன் : "நான் எதிர் காலத்தில் ஒரு விமான ஓட்டியாக வர ஆசைப்படுகின்றேன் என்று கூறினேன்."*

*அப்பா-: " என்ன! ஒரு விமான ஓட்டி ஆகவா?"*

*மகன்-: " ஆம் ஆம்"*

*அப்பா-: " அது ஒரு மிகவும் ஆபத்தான வேலையே?"*

*மகன்-:*

*" முறையாக கற்றுக் கொன்டு சரியான பயிற்சிகளை எடுத்துக் கொண்டால் இது எல்லாம் ஒரு இல குவான காரியமே அப்பா."*

அப்பா-:

“ அண்மையில் பல விமானங்களையும் விமானிகளையும் தீவிரவாதிகள் கடத்தி வருகின்றார்கள் நீயும் இந்தப் பணியில் இறங்கினால் உனக்கும் அது ஒரு நாள் நடக்கலாம் அல்வா?”

மகன்-:

“ இப்படி எல்லோரும் பயந்து விட்டிருந்தால் நாங்கள் எல்லோரும் இவ்வளவு இலகுவாக நாடுகளை விமானத்தில் கடக்க முடியாது”

அப்பா-:

“ கிட்ட தட்ட 1970ம் ஆண்டில் இருந்து இன்று வரை தீவிரவாதிகள் கடத்தி வருகின்றார்கள்.”

மகன்-:

“ இனி வரும் காலங்களில் புதிய நவீன கண்டு படிப்புகளால் இவைகள் யாவும் முறியடிக்கப் படும் இதை விட பல நன்னமகளும் உள்ளன.”

அப்பா :-“ அது என்ன நன்னமகள்?”

மகன்-:

“ நான் பல நாடுகளை சென்று பார்க்கலாம். பன்முகப்பட்டகலாச்சார பட்ட மனிதர்களை சந்தித்து பேசுவதற்கு வாய்ப்புகள் கிடைக்கும், பல சலுகைகள் தருவார்கள் பன் முக பட்ட கலாச்சாரங்களை காணலாம். இதைவிட புதிய நண்பர்கள் பலர் உருவாகும். அணைத்திற்கு மேலான ஒரு தமிழன் விமானி என்ற பெருமை உண்டாகும்.”

அப்பா-:

“ அக, இவ்வளவு உறுதியாக உள்ளாய் நி, அப்படி ஆனால் நி உன் முயற்சியில் இரங்கு நான் உனக்கு உறுதுணையாக இருப்பேன்.”

மகன்-: “ நன்றி அப்பா.”



# உடல் நலம் குறைவின் போது அல்லது ஒரு துன்பத்தின் போது எமக்கு உதவுவது நண்பர்களா அல்லது உறவினர்களா

**- ஹரிஜன் பசுபதிதாசன் -**

நாதன் : குமரன்! வந்துவிட்டாயா, வா! உன் உடல் நலம் எப்படி இருக்கின்றது?

குமரன் : இன்னும் காலில் சற்று வலி இருக்கின்றது, ஆனால் பரவாயில்லை.

நாதன் : வலி இன்னும் இருக்கின்றதென்றால் ஏன் இன்று பாடசாலைக்கு வந்தாய்? இன்னும் சற்று கூட நாள்கள் வீட்டில் இருந்திருக்கலாம்தானே?

குமரன் : ஏற்கெனவே ஒரு மாதத்திற்கு பாடசாலைக்கு வராமல் மருத்துவமனையில் இருந்தேன். இதற்கு மேலும் பாடசாலைக்கு வராமல் இருக்க முடியாது. ஆகவேதான் இன்றைக்கு வந்தேன்.

நாதன் : அப்படி என்றால் சரிதான்.

குமரன் : நாதன், இந்த ஒரு மாதமாக, நீ எனக்கு தந்த ஆதரவுக்கும் மற்றும் உதவிக்கும் நான் உனக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

நாதன் : இதற்கெல்லாம் ஏன் நன்றி? ஒரு நண்பனாக உனக்கு இதைச் செய்வது என் கடமை.

குமரன் : ஆனாலும், உன்னைப் போன்று வேறு யாரும் எனக்கு ஆதரவு தரவில்லை.

நாதன் : அப்படி கூறாதே குமரா, உன் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் உனக்கு செய்த உதவியுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், நான் செய்தது ஒன்றுமே இல்லை.

குமரன் : நாதன், என்ன சொல்கிறாய்? உன்னைப் போன்று யாரும் எனக்கு ஆதரவாக இருக்கவில்லை. மகிழூந்து விபத்திற்குப் பின்னர், என்னைப் பார்ப்பதற்காக நீ ஒவ்வொரு நாளும் மருத்துவமனைக்கு வருவாய். ஒவ்வொரு நாளும் நீ வரும்போது, எனக்கு மிகவும் உற்சாகமாக இருக்கும். நீ என்னுடன் கதைக்கும் போது, எனக்கு ஆறுதலாக இருக்கும். நீ எனக்குக் கொடுக்கும் ஊக்கத்தினால், நான் சக்தி பெற்று, நம்பிக்கையாக இருந்தேன். மற்றும் உன்னோடு மட்டும்தான் என்னால் தயக்கமில்லாமல் என் கவலைகள், வலிகள் எல்லாவற்றையும் கூற முடிகின்றது. ஒரு நண்பன் தரும் ஆதரவு போன்ற, வேறு யாராலும் தர முடியாது. அதனாலேதான், திருவள்ளுவர் "உடுக்கை இழந்தவன் கை போல், ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்று கூறியுள்ளார்.

நாதன் : நீ என்ன சொன்னாலும், உன் உறவினர்கள் போன்று வேறு எவராலும் உதவியாக இருக்க முடியாது. விபத்தில் இருந்து, இன்று வரையும், உன் பக்கத்தில் இருந்து, இருபத்தி நான்கு மணித்தியாலமும் உன் தேவைகளை பராமரித்தது உன் உறவினர்கள். இல்லை என்று சொல் பார்க்கலாம். உனக்கு எப்போதும் உதவியாக இருந்தவர்கள் யார், உன் உறவினர்கள் அல்லவா? நான் ஒரு நாளில் ஒரு தரம் மட்டும் தான் உன்னை பார்க்க வருவேன். ஆனால் உன் உறவினர்கள் மருத்துவமனையில், உன்னுடன் அதே அறையில் முழு நாளும் இருப்பார்கள். அதுவும் உன் பெற்றோர்கள் உன் மேல் எவ்வளவு பாசம் வைத்திருக்கிறார்கள். விபத்து அன்று நான் உன்னை பார்க்க வரும்போது உன் அம்மாவைக் கண்டேன். அவரின் முகம் கண்ணீரும் கம்பளையுமாக இருந்தது. அவர்களின் வேதனை அவரின் கண்ணில் தெரிந்தது. நீ என்ன சொன்னாலும், உறவினர்கள்தான், உதவியாகவும், ஆதரவாகவும் இருப்பார்கள்.

குமரன் : சரி, சரி நமக்கிடையில் ஏன் வாக்குவாதம்? நண்பர்கள் மட்டும் இல்லை, உறவினர்களும் நமக்கு ஒரு துன்பம் என்று வரும் போது உதவியாகவும், ஆதரவாகவும் இருப்பார்கள். ஆசிரியர் வந்துவிட்டார்கள். வா, பாடத்தை தொடங்குவோம்.

# உணவும் நலமும்

*- கிரிசிகன் சீவராஜா, மெல்பேர்ன் -*

உலகம் தோன்றிய காலத்திலிருந்து எல்லா உயிர்களுக்கும் உணவு மிக அத்தியவசியமான ஒன்றாகும். மனிதர்களுக்கு மட்டுமல்ல, மிருகங்கள் மற்றும் தாவரங்கள் போன்ற எல்லாவற்றிக்கும் சாப்பாடு மிக முக்கியமானது. உணவுகள் இல்லாமல், எல்லாவகையான உயிரினங்களும் இறந்துபோய்விடும். அதனால், உணவு ஒரு உயிரினத்திற்கான அடிப்படை தேவைகளில் ஒன்றாகும். அதனால், ஒரு உயிரினம் நீண்ட ஆயுளைக் கொண்டிருப்பதற்கு உணவும் ஒரு முக்கிய காரணி ஆகும்.

விசேடமாக மனிதர்களாகிய நாம் ஆரோக்கியமாக, நீண்ட ஆயுளுடன் வாழ, சிறந்த உணவு பழக்கவழக்கமுறை அத்தியவசிமானது. அதனால், ஒருவர் தனது அன்றாட உணவில் சத்துக்கள் நிறைந்த காய்கறிகள், பழங்கள் போன்ற உணவுகளைத் தான் சாப்பிடவேண்டும். இந்த உணவு வகைகளை நிறைவாக சாப்பிடுவது, ஒரு மனிதனின் உடலின் ஆரோக்கியதிற்கு மிகவும் நல்லது. அத்துடன் அவரது ஆயுட்காலம் நீண்டதாக இருக்கும்.

நாம் உண்ணும் உணவில் உள்ள காய்கறி, பழங்களில் உள்ள பலன்களை பார்ப்போமானால்

பாவற்காய்–இது நீரழிவு நோயிலிருந்து பாதுகாக்கும்.

கத்தரிக்காய்–இதை உண்டால் உடல் எடை குறையும்.

கீரை–இதை சாப்பிடுவதால் உடல் வளர்ச்சிக்கும், வலிமைக்கும் உதவும்.

'கேரட்'– எங்களின் கண் பார்வைக்கு உதவும்.

'ப்ரோக்கோலி'– இது எம் இரத்த அழுத்தத்திற்கு உதவும்.

வெள்ளரி– இது எம் தோல் நீரேற்றம் தங்க உதவுகிறது.

பருப்பு– இது எங்கள் இரத்த கொலெஸ்ரோலை குறைக்க உதவும்.

பயறு–இதில் இருக்கும் உணவு சத்து வகையால் ஒருவருக்கு மலச்சிக்கல் வருவது தடுக்கும்.

அவரை–இதை உண்பதால் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்புக்களை குறைக்கும்.

தோடம்பழம்–தோடம்பழம் உண்பதால் எமக்கு ஒரு ஆரோக்கியமான நோயெதிர்ப்பு சக்தி கிடைக்கும்.

வாழைப்பழம்–இதை சாப்பிடுவதால் ஆஸ்துமா மற்றும் செரிமான பிரச்சினைகளைத் தடுக்கும்.

மாதுளை–மாதுளை ஒவ்வொரு நாளைக்கு உண்டால், உங்கள் ஞயாபகச் சக்தி கூடும்.

இதை போன்ற மற்ற காய்கறிகள், பழங்களில் நிறைய சத்துக்கள் இருக்கின்றது. இதை உண்ணும் போது, கொஞ்ச கொஞ்சமாய் நமது உடல், ஆரோக்கியம் அடைந்து வரும்.

இப்படியான கனிகள், காய்கறிகளுடன், மீன், இறைச்சி, முட்டை, பால் போன்ற புரதச்சத்து மிக்க உணவுகளையும் உட்கொள்ளவேண்டும். ஒருவர் மீன் சாப்பிட்டால் அவரின் அறிவு வளரும். பால் குடித்தால் ஒருவரின் உடல் எலும்புகள் பலமடையும். இறைச்சி உங்கள் தசை மற்றும் எலும்பு வலிமை பெற உதவுகிறது. ஒரு முட்டை நுகர்ந்தால் அவை வைட்டமின் 'பி2' எனும் ஊட்டச்சத்தின் நன்மையை பெருக்கும்.

நாம் உண்ணும் பழங்களிலும், காய்கறிகளிலும் கனிமங்கள், விட்டமின்கள் மற்றும் நார்ச்சத்து போன்றவை எமது உடல் ஆரோக்கியத்தை பாதுகாக்கிறது. குறிப்பாக, இவ்வற்றில் உள்ள கனிமங்கள், ஒருவருக்கு ஒரு இதய நோய் ஏற்படுவதற்கு உரிய வாய்ப்பையும் சிருநீரகத்தில் கல் உருவாவதற்கு உரிய வாய்ப்பையும் குறைக்கும். காய்கறி பழங்களுடன், அவரை, உளுந்து, பயறு போன்ற தானிய வகைகளையும் உணவுடன் சேர்த்துக்கொள்ள வேண்டும். அது மட்டுமல்லாமல், பழங்களிலும், காய்கறிகளிலும் நிறைய சத்துக்கள் உள்ளமையால் அதை ஒவ்வொரு நாளும் சாப்பிட்டால், நமது உடல் மிக ஆரோக்கியமாக இருக்கும். ஒரு நாளில், ஒருவர் இரண்டு காய்கறிகள் மற்றும் ஐந்து பழங்கள் உண்ணவேண்டும். காய்கறிகள் தனியாகவோ அல்லது நாம் வழமையாக உண்பதுபோல் சோறு, இட்டலி, தோசை, புட்டு, இடியப்பம், றொட்டி (பாண்) போன்றவற்றுடன் சேர்த்து உண்ணலாம்.

உலகத்தில் சத்துள்ள உணவு மட்டும் அல்ல, எங்கள் உடல் ஆரோக்கியத்தை கெடுப்பதை போன்ற உணவுகளும் இருக்கின்றது. கெடுதல் மிக்க உணவை நாம் சாப்பிடுவது நல்லதல்ல. இவற்றை நிறைய

உண்பதால், அவர்களின் உடல் நலம் இழந்து பல உடற் பாகங்கள் கெட்டுப்போய் விடும். முக்கியமாக பிள்ளைகள் 'பிட்சா', 'பர்கர்', 'சிப்ஸ்' போன்ற உணவுகளை அதிகமாக உண்பார்கள். இவ்வுணவுகள் ஒரு பிள்ளையின் சுகாதாரத்தை பாதிக்கும். இதனால், இதைப்போன்ற சாப்பாடுகளை தவிர்த்துக்கொள்ள முயற்சி செய்யவேண்டும். பிள்ளைகள் மட்டுமல்லாமல் பெரியவர்களும் இப்படிப்பட்ட உணவுகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

சிறந்த உணவு வகைகளுக்கு தேவையான காய்கறி, பழங்கள், தானியங்கள், எமக்கு விவசாயத்திலிருந்து கிடைக்கின்றது. இந்த விவசாயத்தை செய்யும் விவசாயிகள் தமது வாழ்க்கையை இதற்காக அர்ப்பணித்துள்ளனர். விவசாயிகள் கடுமையாக உழைத்து எமக்காக சத்துள்ள உணவுகளை அறுவடைசெய்து தருகிறார்கள். அதனால் விவசாயிகள் இல்லாமல் இவ்வுலகத்தில் நாம் வாழுவது மிகவும் கடினமானது.

தமிழர் புதுவருடப் பிறப்பாகிய, தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் தினத்தை கொண்டாடும் இவ்வேளையில், சிறுவர்களாகிய நாம், நல்ல ஆரோக்கியமான உணவு பழக்கவழக்கங்களை பின்பற்றவேண்டும் என்று உறுதி எடுத்துக்கொண்டு அவ்வுணவுகளை பெறுவதற்கு உதவியாக இருக்கும் விவசாயித்தினை,

**"உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம்."**

என்ற பாரதியாரின் கவிவரிகளுக்கு ஏற்றாற்போல, பெருமைப்படுத்துவதுடன், விவசாயிகளையும் பெருமைப்படுத்தி அவர்களுக்கு நன்றியை செலுத்துவோம்.

## இலட்சியத்தை நோக்கி பறந்த பறவைகள்

தயக்கத்துடனும் பயத்துடனும் ஆரம்பித்த பயனம்
மெது மெதுவாக அசைந்த சிறகுகள்
தனி இலக்கு ஒன்றை நோக்கி சென்ரோம் நானும் எனது நண்பர்களும்
சிறகுகளை விரித்து பறக்க வைத்த எமது எஜமானர்கள்
அவர்களது கருமத்தையும் இலந்து உதவினர்
உதவிய கரன்கலுக்கு நன்றி
ஆனால் இனி அவர்கள் துனண இல்லாமல் செல்வோமே
எமது இலக்கை நோக்கி பறப்போமே

**-விசாகன் பசுபதிதாசன்-**



# ஐம்பெரும் காப்பியங்களும் ஆபரணங்களும்

**- அபிதாரணி சந்திரன் -**

எமது தமிழ் மொழியில் சுவரசியமான விடயங்கள் ஏராளமானது. தமிழ் இலக்கியங்களில் ஐம்பெரும் காப்பியங்கள் மிகவும் முக்கியமானவை. அவற்றை ஆபரணங்களுடன் தொடர்பு படுத்திப் பார்ப்பது சுவையானது.

**சிலப்பதிகாரம்**

சிலப்பதிகாரம் புலவர் இளங்கோ அடிகளால் ஏறத்தாள 5 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இக்காப்பியத்தில் கோவலன், கண்ணகி, மாதவி, சித்திரவதி போன்ற பாத்திரங்கள் உள்ளன. சிலம்பு என்பது காலில் அணியும் சலங்கையைக் குறிக்கின்றது. இக் கதையில் பற்பல காட்சிகளில் பரதநாட்டியம் உள்ளடக்கப் பட்டு இருக்கின்றது. அத்துடன் மனித வாழ்க்கைக்கு தேவையான அம்சங்களை இளங்கோ அடிகள் சேர்த்திருக்கிறார்.

**மணிமேகலை**

மணிமேகலை சீத்தலைச் சாத்தனாரால் 6 ஆம் நூற்ண்டில் எழுதப்பட்டது. மாதவியின் மகளான மணிமேகலையின் கதையைக் கூறும் நூலாகும். மணிமேகலை என்பது பெண்கள் அணியும் ஒட்டியாணமாகும். இக்காப்பியதில் சுவாரசியம் என்னவென்றால், மணிமேகலை பின்னர் புத்த மதத்திற்கு துறவியாகிவிடுவார்.

**சீவக சிந்தாமணி**

சீவக சிந்தாமணி புலவர் திருத்தக்கதேவரால் சோழர் காலத்தில் எழுதப்பட்டது. சீவகன் என்பவனின் அகவாழ்க்கையைப் பற்றிக்கூறுகிறது. ஒளி கெடாத மணி என்பது இதன் பொருளாகும். இக்காப்பியத்தில் பாத்திரங்ளாக சீவகன், சச்சந்தன், சச்சந்தனின் மனைவி, கட்டியங்கரன் ஆவர். சீவக சிந்தாமணி, கழுத்தில் அணியும் ஆரத்தைக் குறிக்கிறது.

**வளையாபதி**

வளையாபதி 10ஆம் நூற்றாண்டில் எழுதபட்டது. வளையல் என்பது கைகளில் அணியப்படும் ஆபரணமாகும். இக்காப்பியத்தில் பொதுவாக குடும்பத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிக் காணலாம். இங்கு நாராயணனுடைய குடும்ப வாழ்க்கை சந்திக்கும் சவால்களைக் கண்டு கொள்ளலாம். இக்காப்பியதிலும் மனித வாழ்க்கைக்கு தேவையான அம்சங்களைக் காணலாம்.

**குண்டலகேசி**

குண்டலகேசி நாதக்குத்தனாரால் எழுதப் பட்டது. குண்டலகேசி, சாதுவான் என்ற பாத்திரங்கள் இதில் முக்கியமானவை, இன்றுவரை குண்டலகேசிக்கு பெரு மதிப்பு உண்டு. காரணம் என்னவென்றால் குண்டலகேசியால் நீலகேசி என்ற கதை உருவகியது. குண்டலம் என்பது காதில் அணியும் தோடு. இதில் பற்பல வகைகள் உள்ளன. தோடு, ஓலை, பம்பரம் லோலாக்கு, ஜிமிக்கி போன்ற பலவகைகள்.

மேலே காட்டப்பட்ட ஐம்பெரும் காப்பியங்களும் தமிழ் அன்னையின் அணிகலன்களாகும்.

தமிழ் அன்னையின் காதுகளில் குண்டலங்களாக **குண்டலகேசியும்,** கைகளில் அணிந்திருக்கும் வளையல்களாக **வளையாபதியும்,** கழுத்தினில் அணிந்திருக்கும் ஆரம் **சீவக சிந்தாமணி**யாகவும், அனனையின் இடையில் **மனிமேகலை**யும், தனது திருவடிகளில் சிலம்பையும் (**சிலப்பதிகாரம்**) அணிந்து ஐம்பெரும் காப்பியத்தையே தன்னகத்துள் வைத்துள்ளாள்.

# "தமிழுக்கு அமுதென்று பெயர் - அந்த தமிழ் எங்கள் உயிருக்கு மேல்"

- டிவானா.சி -

தமிழ் மொழி ஒரு ஆதிகால மொழி என்பது வரலாற்று உண்மை. தமிழ் மொழியில் வேறு எந்த மொழிகளிலும் காண முடியாத அதி உன்னதமான கருத்துக்களையும், காரணங்களையும் தெளிவு படுத்தக்கூடிய சொல் வளங்கள் உண்டு.

தமிழ் மொழி, உலகில் எல்லாப் பகுதிகளிலும் பரந்து வாழும் தமிழர்களை ஒருங்கிணைக்கும் மொழியாகவும் காணப்படுகிறது.

தமிழ் மொழியில் உயிர் எழுத்துக்கள் 12. மெய் எழுத்துக்கள் 18. உயிர மெய் எழுத்துக்கள் எனப்படும் உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் சேர்ந்த 216 எழுத்துக்களும், ஆய்த எழுத்தாகிய ஃ எனப்படும் எழுத்தும் சேர்ந்து 247 எழுத்துக்கள் உண்டு.

வர்ணனை மிகுந்த தமிழ் மொழி பல வகையான சொற் தொடர்களையும் மற்றும் சிலேடை மொழிகளைக் கொண்ட தமிழ் மொழி உலகில் மிகவும் பெருமை வாய்ந்த மொழியாக உள்ளது.

தமிழ் மொழியை நாம் கற்பதனால் எமது தாய் மொழியை அழியாமல் வரும்கால சந்ததியினருக்கு கொண்டு செல்ல உதவியாக இருக்கும். அத்துடன் தமிழ் மொழிக்குரிய கலாசாரத்தினையும், பண்பாட்டினையும் நாம் கற்றுக்கொள்வதுடன் வரும்கால சந்ததியினருக்கும் எடுத்துச் செல்ல உதவியாகவும் உறுதுணையாகவும் இருக்கும்.

அதனால் எமது தாய் மொழியாகிய தமிழ் மொழியை மிகவும் விருப்புடனும், அக்கறையுடனும் கற்போம்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!!

# மகிழ்ச்சிக்கான வழியை பார்

வாழ்க்கையில் பயணித்துப் பார்!
துன்பத்தில் இன்பத்தைப் பார்!
பிச்சைக்காரனைக் கவனித்துப் பார்!
அவனின் வாழ்த்துக்களை பெற்று மகிழ்ந்து பார்!
மழலைக் கூச்சல் இசை கேட்டுப் பார்!
அதை நிறுத்த முயற்சி செய்து பார்!
கண்ணைப் பறிக்கும் பூஞ் சோலைகளைப் பார்!
உன்னில் மயங்கி நிற்பாய் பார்!
ஒருவர் மீது இரங்கிப் பார்!
மனம் களிகூறுவதை கண்ணில் பார்!
அயலார் பாரத்தை குறைத்து பார்!
பலன் எதிர்பார்க்காமல் செய்து பார்!
இன்பம் துலங்கும் சூழலைப் பார்!
இனியும் சுலங்கும் என்பதை நினைத்து பார்!
மனம் தளராமல் உழைத்துப் பார்!
உள்ளம் ஆனந்தத்தில் துள்ளும் பார்!

- மெர்சி -

# பெஸ்கி

**- பிரேம், 9- ஆம் வகுப்பு -**

முன்னுறு ஆண்டுகளுக்கு முன்பு இத்தாலியின் தலைநகரமான ரோமிலிருந்து இந்தியாவிலுள்ள தமிழகத்திற்கு கிறிஸ்துவ மதத்தைப் பரப்ப பெஸ்கி கப்பலில் வந்தார்.

கிறிஸ்துவ மதத்தை பரப்ப தமிழகம் வந்த அவர் அந்நிய மொழியான தம் மொழியில் கிறிஸ்துவ போதனையை செய்தால் தமிழ் மக்களுக்கு அப்படி புரியும்? ஆதலால் தாமே தமிழைப் பயின்று போதனை செய்தால்தான் தமிழக மக்களுக்கு புரியும். இத்தகையால் தாம் வந்த நோக்கமும் பலனளிக்கும் என்று நினைத்தார் பெஸ்கி.

ஆதலால், மக்களோடு மக்களாக எளிய முறையில் பழகி முதலில் பேச்சு மொழியை தெரிந்து கொண்டார். அத்துடன் தமிழ் எழுத்துக்களையும், எழுத்துச் சொற்களையும் பயின்றார்.

கிறிஸ்துவ மதத்தை பரப்பும் நோக்கத்துடன் தமிழ் மொழியைக் கற்ற பெஸ்கி தமிழ் மொழியின் இலக்கண இலக்கியங்களையும் கற்க தொடங்கினார்.

தமிழ் மொழியின் சிறப்புத்தன்மையால் தன்னை அடிமைப்படுத்திக்கொண்டதால் பெஸ்கி தன்னை ஒரு தமிழராகவே எண்ணி பெஸ்கி என்னும் தன்னுடைய இயர்பெயரைத் துறந்து 'தைரியநாதன' என்று பெயரை மாற்றிக்கொண்டார்.

தமிழ் மொழியைப் பயின்று தமிழராகவே மாறி விட்ட பெஸ்கி எனும் தைரியநாதன் தமிழ் மொழியினால் ஈர்க்கப்பட்டு தமிழ் மொழிக்கு சேவை செய்வதையே தம் கடமையாக கொண்டார்.

இவர் தமிழ் மொழிக்காக ஆற்றிய தொண்டிற்காக மதுரை தமிழ்ச் சங்கம் 'வீரமா முனிவர்' எனும் சிறப்பு பெயரை சூட்டி சிறப்புச் செய்தது. அன்று முதல் பெஸ்கி எனும் தைரியநாதன் "வீரமா முனிவர்" என்று தமிழ் மக்களால் அன்புடன் அழைக்கப்பட்டார்.

தமிழ்ழுக்காகவே வீரமாமுனிவர் செய்த சேவை கொஞ்சம் நஞ்சமில்லை. தமிழ் மொழியை வளம் படுத்தி வளர்ச்சியுறச் செய்த பெருமை அவரையே சேரும்.

முதன் முதலில் தமிழில் தோன்றிய "சதுரகராதி" வீரமாமுனிவர் தொகுத்தளித்ததுதார். அத்துடன் தமிழ் இலக்கணங்கள் ஐந்தினையும் "தொன்னூல்" எனப் பெயரிட்டு சூத்திரங்களாக்கி அதற்கு உரையும் எழுதியுள்ளார்.

தமிழ் மொழிக்கு மேலும் சிறப்பூட்டும் விதத்தில் ஏசு பிரானின் வரலாற்றுக் காப்பியமாக "தேம்பாவணி" எனும் தமிழ் மொழி களஞ்சியத்தை அளித்தவரும் வீரமாமுனிவர்.

தமிழ் இலக்கண இலக்கியங்களை கற்று பெரும் காப்பியங்களை படைத்த வீரமாமுனிவர் கிராம மக்களிடையே உலவும் நாட்டு புறக் கதைகள் போன்று எளிய காப்பியம் படைக்கவேண்டும் என்ற ஆவலில் உருவாக்கியது "பரமார்த்த குரு கதைகளாகும்".

இத்தாலியில் 1680–ஆம் ஆண்டு பிறந்து கிறிஸ்துவ மதத்தைப் பரப்ப தமிழகம் வந்த அவர் திருநெல்வேலி மாவாட்டுத்திலுள்ள மணப்பாடு கிராமத்தில் 1747–ஆம் ஆண்டு மறைந்தார்.

வீரமாமுனிவர் மறைந்து முந்நூறு ஆண்டுகளுக்கு மேல் ஆனாலும் தமிழுக்காக அவர் செய்த தொண்டு என்றும் போற்றப்படும்.

# நம்பிக்கை தான் வெற்றியின் இரகசியம்

**பொ.குலசிங்கம்**

ஒருவர் ஒரு செயலைத் தொடங்கும் முன்பு தான் அதில் வெற்றியடைவேன் என்ற முழு நம்பிக்கையுடன் அந்தக் செயலில் இறங்க வேண்டும் அப்போதுதான் அந்தச் செயலில் முழுமையான வெற்றியைப் பெறமுடியும். நம்பிக்கை என்பது தன்னுடைய செயலில் மட்டும் அல்ல இன்னுமொருவரிடம் நாங்கள் உதவி கேட்கும் பொழுது கூட அவரிடம் நாங்கள் முழுமையான நம்பிக்கையை வைக்கவேண்டும்.

மஹாபாரதத்தில் இதற்கு உதாரணமாகக் குருஷேத்திரப் போர் நடைபெற்றுக் கொணடிருந்த கூடாரத்தினுள்ளே சடுதியாகத் துரியோதனன் உள் நுழைந்தான். சற்றும் எதிர்பாராதவிதமாக அந்த நேரத்தில் வந்த துரியோதனனைக் கண்ட பீஷ்மர் அவனைப் பார்த்துக் கேட்டார் “ துரியோதனா நீ என்னை இந்த நேரத்தில் அவசரமாகக் காணவந்ததின் காரணம் என்னவாயிருக்குமோ” என வினவினார். அதற்குத் துரியோதனன் “போர் உக்கிரமாக நடந்து கொணடிருக்கின்றது, இதுவரையில் என் பக்கத்தில் கணிசமான வீரர்களைப் பறிகொடுத்துவிட்டேன் ஆனால் பாண்டவர் ஐவரில் ஒருவராவது கொல்லப்படவில்லையே, அது என் உள்ளே ஒரு கேள்வியை எழுப்பி அதற்கு விடைகாண முடியாமல், உங்களைத் தேடி வந்திருக்கிறேன்” என்றான். பீஷ்மர் அவனைப் பார்த்து அப்படியா! என்று சொல்லி “நீ என் மேல் வைத்த நம்பிக்கையை இழந்துவிட்டாய் என்பதையே உன்னுடைய கேள்வி எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றது” என்று சொன்னார். “எப்போது உன்னுடைய உள்ளத்திலே இந்த அவநம்பிக்கை என்ற நச்சு விதை விதைக்கப்பட்டுவிட்டதோ அதை உன்னுடைய உள்ளத்தினின்று பூரணமாக அகற்றவேண்டிய கடப்பாடு எனக்குண்டு” என்று சொல்லி ,அருகே கிடந்த அம்பரா தொனியிலிருந்து ஐந்து மூங்கிலிலான அம்புகளை கையிலெடுத்துக்கொண்டு அந்த இடத்தை விட்டகன்று வானத்தை நோக்கிப் பிராத்தனையில் ஈடுபட்டு , அந்த அம்புகளின் மேல் தான் அன்றளவும் தேக்கி வைத்திருந்த சக்திகள் அனைத்தையும் அதன் மேல் செலுத்த, அந்த அம்புகள் எல்லாம் தங்க அம்புகளாக மாற்றமடைந்தன. பீஷ்மர் அந்த தங்க அம்புகளைக் கையிலேந்தியபடி துரியோதனன் அருகில் நெருங்கி “நாளை நடைபெறவிருக்கும் போரில் நான் அந்தப் பாண்டவா் ஐவரையும் இந்த அம்புகளை ஏவிக் கொல்வேன்” என்று சொல்லி அவைகளை ஒரு பெட்டியில் வைத்து மூடிக் காலையில் தான் அதைப் போர்க்களத்திற்கு எடுத்து வருவதாகாக் கூறினார். துரியோதனன் பீஷ்மர் கூறிய வார்த்தைகளில் நம்பிக்கை வைக்காமல், அந்தப் பெட்டியைத் தான் காலையில் போர்களத்திற்குக் கொண்டு வருவதாகச் சொல்லித் தன்னிடம் தரும்படி கூறி அந்தப் பெட்டியைத் தன்னுடன் எடுத்துச் சென்றான்.

பீஷ்மருக்கும் துரியோதனனுக்கும் நடந்தேறிய விடயங்கள் அனைத்தையும் இரு கண்கள் இமை மூடாமல் நோட்டம் விட்டபடியே இருந்தது, அது வேறு யாருடைய கண்களுமல்ல சாட்சாத் கண்ணனுடைய கண்களே. பாண்டவர்களின் பாசறைக்குள் நுழைந்த கண்ணன் தான் கண்ட காட்சியைப் பாண்டவர்களுக்கு எடுத்துரைத்தான். கண்ணன் சொல்லிய எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த திரௌபதி பாண்டவர்கள் முன் வந்து, கண்ணன் தங்களுடன் இருக்கும் வரைக்கும் ஒன்றுக்கும் அஞ்சத் தேவையில்லை என்று சொன்னாள். அந்தச் சமயத்தில் பாண்டவர்களைப் பார்த்துக் கண்ணன் சொன்னான் “உங்களுக்கு ஞாபகமிருக்குதா, முன்பு நீங்கள் கானகத்திலிருந்த வேளையில் நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்று துரியோதனாதியர் வேவுபார்க்க வந்த வேளையில் அந்தக் கானகத்தில் உல்லாசமாகப் பொழுதைக் கழிக்க வந்திருந்த காந்தவர்களுடைய கோபத்திற்கு ஆளாகி அவர்களால் துரியோதனாதியர் சிறை பிடிக்கப்பட்ட சமயத்தில் தருமரின் அறிவுறைக்கு அமைய நீயும் பீமனும் அவர்களைச் சிறை மீடடீர்கள்”என்றான்.

அந்தச் சமயத்தில் துரியோதனன் தான் அவர்களுக்குக் கடமைப் பட்டவன் எனக் கூறித் தான் எந்த வேளையிலும் அவாகள் எதைக்கேட்டாலும் மறுக்காமல் அதைக் கொடுப்பேன் என்று சொன்னதைத் தற்போது ஞபகப்படுத்தி, அந்த அம்புகளைப் பெற்று வருமாறு அர்ச்சுனனை அனுப்பி வைத்தார்.அருச்சுனனும் கண்ணனின் வார்த்தைகளை ஏற்று துரியோதனனின்


கூடாரத்திற்குச் சென்றவனைக் கண்ட துரியோதனன் ஆச்சரியம் அடைந்தவனாய் தன்னை அந்த இரவு நேரத்தில் சந்திக்க வந்த காரணம் என்னவாய் இருக்கும் என வினவினான்.

அதற்கு அர்ச்சுனன் தனக்குக் காட்டில் துரியோதனன் கந்தவர்களால் சிறைப் பிடிக்கப்பட்ட வேளையில் அவனைத் தானும் அண்ணன் பீமனும் கந்தவர்களுடன் போரிட்டு மீட்டதையும், அவன் அதற்குப் பிரதியுபகாரமாக அவர்கள் எந்த நேரத்திலும் எந்த உதவி கேட்டாலும் மறுக்காமல் கொடுப்பேன் என்ற வாக்குறிதியை ஞாபகப்படுத்தி, அவனிடம் பீஷ்மரினால் கையளிக்கப்பட்ட அந்த ஐந்து தங்க அம்புளையும் தன்னிடம் தருமாறும் கேட்டான். சத்திரியனான அவன் அதை மறுக்கமாட்டான் என்ற நம்பிக்கையினால் தான் அதைக் கேட்பதாகவும் கூறினான். துரியோதனன் அதற்கு ஒன்றும் எதிர்ப்புத் தெரிவிக்காமல் தன் வசமிருந்த அந்த ஐந்து தங்க அம்புகளையும் அருச்சுனனிடம் கொடுத்தான்.

அதன் பின்பு துரியோதனன் பீஷ்மரிடம் சென்று தனக்கு நடந்ததைக் கூறித் தனக்கு மீண்டும் ஐந்து தங்க அம்புகளை வரவழைத்துத் தருமாறு கேட்டான்.அதற்கு பீஷ்மர் தன்னகத்தே தேக்கி வைத்திருந்த சக்திகள் அனைத்தையும் வெளிக்கொணர்ந்தே அந்தத் தங்க அம்புகளைப் படைத்ததாகவும் மீண்டும் அவைகளைப் படைப்பது சாத்தியமாகாது எனக் கூறி அவனை அனுப்பி வைத்தார்.

துரியோதனன் பீஷ்மரின் மேல் நம்பிக்கை வைக்காததே அவன் அந்த ஐந்து அம்புகளை இழப்பதற்கும் அத்துடன் கூடவே குருஷேத்திர போரில தோல்வியை சந்தித்ததிற்கும் காரணமாக அமைந்தது.

நான் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கேட்டது.



# அவுஸ்திரேலியாவில் தமிழும் தமிழர் கலாசாரமும்

- கி. லக்ஷிராம் -

ஓர் இனத்தின் அடையாளம் மொழியாகும். அதனை தக்கவைப்பதற்கு புழக்கத்தில் இருந்தால் மட்டுமே சாத்தியமாகும் என மொழி அறிஞர்கள் கருதுகின்றார்கள். இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் தமிழ் மொழி தோற்றம் பெற்றிருந்தாலும், அது இன்றும் நிலைத்திருப்பதற்கு அதன் தனித்துவமே காரணமாகும். தமிழர்கள் புலம் பெயர்ந்து கனடா, ஜேரமனி, அவுஸ்திரேலியா, இலண்டன் போன்ற மேலைத்தேய நாடுகளுக்குவேலை வாய்ப்பு, கல்வி, போர்ச்சூழல் போன்ற பல காரணங்களால் சென்றிருக்கிறார்கள். இருப்பினும், ''தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்'' என்ற பாரதியாரின் கூற்றுக்கு இணங்க தமிழை வளர்ப்பதில் புலம் பெயர்ந்தவர்கள் பேரார்வம் கொண்டிருக்கிறார்கள். அதே போல், வாழையடி வாழையாக தமிழர் கலாசாரத்தைத் தமது பிள்ளைகளுக்கு ஊட்டி வளர்க்கிறார்கள் என்பதில் எவ்வகை மாற்றுக் கருத்தும் இல்லை.

பல்லினக் கலாசாரங்கள் கொண்ட அவுஸ்திரேலிய நாட்டில் அரசாங்கம் சமூக மொழிக்கும் கலாசாரத்திற்கும் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதனால் அந்நிய நாட்டில் தமிழர்கள் பண்டிகைகளைக் கொண்டாடுதல், தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகளை நடாத்துதல், தமிழ்ப் பள்ளிகளை இயக்குதல் போன்ற அரிய பணிகளை ஆற்றுகிறார்கள்.

விழாக்கள் மடிந்துபோன மனதிற்கு புத்துணர்ச்சியையும், நல்லின்பத்தையும் தருகின்றன. தமிழர்கள் கடல் கடந்து எங்கு சென்றிருந்தாலும், தமக்குரிய பண்டிகைகளைக் கொண்டாட மறப்பதில்லை. அவுஸ்திரேலியாவில் வேலைப்பழு காரணமாகவும், பொது விடுமுறை தமிழர் பண்டிகைக்கு இல்லாமையாலும் இலங்கை, இந்தியாவில் கொண்டாடுவது போன்று, வீட்டில் சிறப்பாகச் செய்ய முடியாவிட்டாலும், அந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்கு தமிழ் அமைப்புக்களான கேசி தமிழ் மன்றம், விக்டோரியா தமிழ்க் கலாசார மன்றம் போன்றவை தைப்பொங்கல், புத்தாண்டு விழா, ஆடிப்பிறப்பு, தீபாவளி, தமிழ் முதியோர் விழா ஆகியவற்றை முன்னெடுக்கின்றனர். இவ் விழாக்கள் தனித் தனியாக வார இறுதி நாளில் ஒரு பொது இடத்தில் ஒழுங்கு செய்யப்பட்டு பெருந்திரளான தமிழர்கள் ஒன்று கூடி களிக்கின்றார்கள். பெரியவர்களும் சிறியவர்களும் கலாசார உடை அணிந்து வருவதுடன் பாரம்பரிய விளையாட்டுகளான கபடி, கிளித்தட்டு, பட்டம் விடுதல், கயிறு இழுத்தல் போன்றவற்றில் பங்குபற்றி மகிழ்கின்றார்கள்.

அவுஸ்திரேலியாவில் இரண்டாம் தலைமுறைப் பிள்ளைகள் அந்நிய மொழியான ஆங்கிலத்தைப் பயின்றாலும் அவர்களுக்குத் தமிழை ஊக்குவிக்க வேண்டும் என்ற சீரிய நோக்குடன் அவுஸ்திரேலிய – இலங்கை தமிழர் பட்டதாரிகள் சங்கமும் ஈழத் தமிழ் சங்கமும் தமிழ் போட்டிகளை நடத்துகின்றன. இதில் பேச்சு, வாய் மொழித் தொடர்பாடல், நாடகம், பாடல், எழுத்து என்பன அடங்கும். தமிழ் ஊக்குவிப்பு போட்டிகள் மாநில, தேசிய மட்டங்களில் நடைபெற்று வெற்றியாளர்களுக்கு கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. இதில் பலர் தொண்டு மனப்பான்மையுடன் சேவை ஆற்றுகின்றார்கள்.

ஒரு சமூகமாக வாழும் தமிழர்கள் தமிழை வளர்க்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் பேருள்ளம் கொண்ட தமிழர்கள் அர்ப்பணிப்புடன் தமிழ்ப் பள்ளிகளைத் தொடங்கியிருக்கின்றார்கள். பெற்றோர் தமது பிள்ளைகள் தாய் மொழியான தமிழைக் கற்க வேண்டும் என்ற அவாவினால் சிறுவர்களை இங்கு அனுப்புகின்றார்கள். தமிழை எழுதவும, பேசவும், வாசிக்கவும் ஆசிரியர்களின் உதவியுடன் கற்கின்றார்கள். அவுஸ்திரேலியாவில் தமிழ் VCE ஓர் அங்கம் வகிப்பது மேலும் ஒரு வரப்பிரசாதமாகும்.

தமிழர்கள் தாய் நாட்டை விட்டுக் குடி பெயர்ந்து வாழ்ந்தாலும் தமது மொழியில் பற்றுக் கொண்டு சமூக உணர்வோடு ''தமிழன் என்று

சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா'' என்பது போல் தமிழ் பள்ளிகள், ஊக்குவிப்பு போட்டிகள், குடும்பமாக சமூகமாக மரபுவழிப் பண்டிகைகளைக் கொண்டாடுதல் போன்றவற்றில் பிரதி பலன் எதிர் பாராது ஈடுபடுகின்றனர்.

# இயல் இசை நாடகம்

- மெர்சி -

தமிழ் மொழியானது இயல், இசை, நாடகம் என மூன்று வகைப்படும். இவை என்ன என்பதை தெரிந்து கொள்வோம்.

**இயல்**

இயல் என்றால் தமிழ் மொழியும் அதன் இலக்கியமும் ஆகும். தமிழில் இருந்த பெரும் காப்பியங்கள் எல்லாம் இந்த வகையில் சேரும். பழங்காலத்தில் சங்க இலக்கியம், நீதி இலக்கியம் ஆகியன இருந்தன. இடைக்காலத்தில், புலவர்கள் பக்தி காப்பியம், உரை நூல்கள், புராணங்கள் ஆகியவற்றில் இலக்கியங்கள் இருந்தன. தற்போதைய காலத்தில் கட்டுரைகள், சிறுகதை, புதுக்கவிதை, ஆராச்சி கட்டுரைகள் ஆகியன எழுதப்படுகின்றன. நீதி இலக்கியங்கள் எழுதிய காலத்திலிருந்து கதைகள் எழுதும் காலத்திற்கு வந்துவிட்டோம். இயல் இவ்வாறு மாற்றம் அடைந்திருக்கிறது.

**இசை**

தமிழர்களின் முக்கிய கலை இசை என்றே சொல்லலாம். பண்டய காலத்தில் புத்தகத்திலிருந்த கவிதைகள் இசையோடு சேர்ந்து பாடல்களாகத் தொகுக்கப்பட்டன. அவ்வாறு பத்துப்பாட்டு எட்டுத்தொகை ஆகிய நூல்கள் தோன்றின. சங்க காலத்தில் யாழ், புல்லாங்குழல் ஆகிய இசைக் கருவிகளைப் பயன்படுத்தினார்கள். ஆனால் இன்று 5 விதமான இசைக் கருவிகள் இருக்கின்றன. தோல் கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, மிடற்றுக் கருவி மற்றும் கஞ்சக்கருவி ஆகும். இசை காலத்திற்கு தகுந்தவாறு மாறியிருக்கிறது.. அக்காலத்திலிருந்த இராகங்கள் தற்காலத்தில் இல்லை. இசை மனிதர்களுக்காக மாற்றம் அடைந்துவிட்டது.

**நாடகம்**

தமிழ் நாடகம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இருந்திருக்கிறது. தெருக்கூத்து ஆகியன மேடையில் அரங்கேற்றப்பட்டன. பழங்காலத்தில் பொழுது போக்குவதற்காக நாடகங்கள் உருவாக்கப்பட்டன. திருவிழாக்கள், சோக நிகழ்வுகள் ஆகியன நாடகம் மூலம் வெளிப்படுத்தப்பட்டன. இன்று நாடகங்கள் திரைப்படங்களாக மாறிவிட்டன. தமிழ் உலகில் திரைப்படங்கள் தோன்றிய நாள் நாடகங்களுக்கு அழிவின் ஆரம்பமானது.

இவ்வாறு முத்தமிழ் எனப்படும் இயல், இசை, நாடகம் ஆகியன தமிழை வளர்ப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன. தமிழில் அளவில்லா மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றும் இல்லையேல் தமிழ் மொழியே இல்லை.

***இளவேனில் சஞ்சிகைக்கான ஆக்கங்களை***
***அனுப்பி வைக்க வேண்டிய முகவரி :***

Casey Tamil Manram
PO Box 2516,
Fountain Gate,
Vic 3805
**மின்னஞ்சல்:** editor@caseytamilmanram.org.au

# ஒரு வீட்டு தோட்டம்

வீட்டுத் தோட்டத்தால், பல நன்மைகள் உண்டு. பின் வீட்டு தோட்டம், ஒரு குழந்தை மாதிரி. அதை ஒவ்வொரு நாளும் பராமரிக்க வேண்டும். அல்லாவிட்டால், அது அழிந்து போய்விடும். அதனால், தோட்டத்தின் உரிமையாளர்கள், அவர்களது நேரத்தை உரிய முறையில் செலவழிக்க வேண்டும். மேலும், வீட்டு தோட்டம் ஒவ்வொரு நாளும் குடும்ப உறுப்பினர்களுடன் நேரத்தை செலவழிக்க உதவும். ஏனென்றால், தோட்டத்தில் எல்லோரும் சேர்ந்து வேலை செய்யும் போது, ஒருவருடன் ஒருவர் நெருக்கமாக பழகுவார்கள். கடைசியாக, தோட்டத்திலிருந்து ஆரோக்கியமான சத்துள்ள உணவுப் பொருக்களையும் பெற்றுக்கொள்ளலாம். ஆகவே, ஒரு வீட்டு தோட்டத்தை வைத்திருப்பது பயன் தரும்.

முதலாவதாக, தோட்டத்தில் வேலை செய்வதன் மூலம், எப்படி நேரத்தை பிரயோசனமாக செலவழிக்க வேண்டும் என்று அறிந்து கொள்ளலாம். ஒவ்வொரு நாளும் எமது அன்றாட வேலைகளை முடித்து விட்டு தோட்டத்திலும் எமது நேரத்தை செலவழிக்க வேண்டும். இது, எல்லா வயதினருக்கும் பிரயோசனமாக இருக்கும். ஏனென்றால், எப்படி நேரத்தை சேமிக்க வேண்டும், மற்றும் எப்படி நேரத்தை நோக்கத்திற்காக பாவிக்க வேண்டும் என்ற வாழ்க்கைப் பாடத்தை இது எல்லோருக்கும் கற்றுக் கொடுக்கும்.

அடுத்ததாக, பின் வீட்டு தோட்டம் ஒரு குடும்பத்தை நெருக்கமாக கொண்டு வரும். ஒவ்வொரு நாளும் தோட்டத்தை பராமரிக்க வேண்டும். ஆகவே, குடும்ப உறுப்பினர்களுடன் சேர்ந்து வேலை செய்யும் போது, அவர்களுடன் பேச வேண்டிய அவசியம் வரும். சிறிய வயதில் குடும்பத்தில், பெற்றோர்கள், பிள்ளைகளும் நேசமாகவும் பாசத்துடனும் இருப்பார்கள். ஆனால் எல்லோரும் வளர்ந்து வரும் போது, தமது தனிப்பட்ட விடயங்களில் ஆர்வம் காட்டுவதால், குடும்ப உறுப்பினர்களிடையே நெருக்கம் குறையும். அதனால், எல்லோரும் ஒவ்வொரு நாளும், ஒன்றாக சேர்ந்து வேலை செய்யும் போது, மீண்டும் நெருக்கமாக பழகுவார்கள். அதனால், தோட்டத்தில் வேலை செய்வதன் மூலம், குடும்பத்தினர்கள் நேசமாகவும் நெருக்கமாகவும் இருப்பார்கள்.

கடைசியாக, பின் வீட்டு தோட்டம் வைப்பதனால், அருமையான காய் கறிகளை பெற்றுக் கொள்ளலாம். கடைகளில் காய் கறிகளை பெறும் போது, காய் கறிகள் எங்கே இருந்து வருகின்றன என்று தெரியாது. மேலும், விவசாயிகள் எந்த இரசாயனங்களை பாவிக்கிறார்கள் என்றும் தெரியாது. ஆனால் பின் வீட்டு தோட்டத்தில் இருந்து காய் கறிகளை பெறும் போது, இந்த கேள்விகளுக்கான விடைகள் எமக்குத் தெரியும்.

முடிவாக, பின் வீட்டு தோட்டம் பல நன்மைகளைக் கொடுக்கும். இதில் இருந்து எப்படி நேரத்தை சேமிக்கலாம், மற்றும் எப்படி நேரத்தை பிரயோசனமாகப் பாவிக்கலாம் என்பதை பழகிக் கொள்ளலாம். மேலும், குடும்ப உறுப்பினர்கள் ஒரே இடத்தில் ஒன்றாக நேரத்தை செலவழிக்கும் போது, அவர்களிடையே ஒற்றுமை அதிகரிக்கும். கடைசியாக, தோட்டத்திலிருந்து, இலவசமாகவும் மற்றும் அருமையான காய் கறிகளையும் பெறலாம். இரசாயன கலவைகள் அதிகம் பாவித்த காய் கறிகளை உண்ண வேண்டிய தேவை இல்லை. ஆகவே ஒரு வீட்டு தோட்டம் வைப்பது மிகவும் நன்மை தரும் ஒரு விடயம்.

# தொலைக்காட்சியின் நன்மைகளும் தீமைகளும்

- மதுசூதனன் -

மக்கள் தொலைக்காட்சியை பார்ப்பதில் பல நேரம் செலவழிக்கின்றார்கள். அது மனிதர்களின் வாழ்வில் பிரதானமான இடத்தைப் பெறுகின்றது. தொலைக்காட்சி பார்ப்பது நன்மையானதா அல்லது தீமையானதா என்று சொல்வது கடினம். ஏனென்றால், தொலைக்காட்சி பார்ப்பதில் பல நன்மைகளும் உள்ளது. தீமைகளும் உள்ளது. அதை நாம் இப்போது பார்ப்போம்.

முதலில், தொலைக்காட்சியின் நன்மைகளைப் பற்றிப் பார்ப்போம். தொலைக்காட்சியானது உலகில் உள்ள செய்திகளை அறிய உதவும் ஒரு மிகவும் முக்கியமான சாதனம் ஆகும். மேலும், தொலைக்காட்சி மூலம் நாம் விளையாட்டுச் செய்திகள், பொது அறிவு, விஞ்ஞான பூர்வமான தகவல்கள், சமயம் தொடர்பான தகவல்கள் மற்றும் சமையல் குறிப்புகள் போன்றவற்றை இலகுவாக வீட்டிலிருந்த கொண்டே அறிந்து கொள்ளலாம். தொலைக்காட்சி மிகவும் சிறந்த பொழுதுபோக்கு சாதனமாக உள்ளது. இதன் மூலம் நாம் எமது விருப்பமான படங்களையும் பாட்டுக்களையும் கண்டு களிக்கலாம். இன்றைய குழந்தைகள் தொலைக்காட்சியின் நகைச்சுவை கேலிச்சித்திர படங்களை விரும்பிப் பார்ப்பார்கள். அது குழந்தைகளுக்கு மிகவும் இலகுவான முறையில் பல முக்கியமான தகவல்களை சொல்லித் தருகின்றது. தொலைக்காட்சியானது வியாபாரிகள் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்கு மிக முக்கியமான சாதனம் ஆகும். தொலைக்காட்சியின் மூலம் நாம் ஒரு பொருளை விளம்பரப்படுத்தினால் அது மக்களை மிகவும் வேகமாக சென்றடைகின்றது. அதனால் அந்த பொருளின் விற்பனை அதிகரிக்கின்றது.

இப்பொழுது, தொலைக்காட்சியின் தீமைகளைப் பற்றிப் பார்ப்போம். தொலைக்காட்சி ஒரு விலை கூடிய பொருள் ஆகும். அதனை வாங்குவதற்கு நாங்கள் பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும். மற்றும், தொலைக்காட்சியில் நிறைய நேரம் செலவு செய்கின்றேம். அதனால் நாங்கள் படிப்பு மற்றும் வீட்டு வேலைகளை செய்வதற்கு நேரம் கிடைப்பதில்லை. மேலும், தொலைக்காட்சியில் நாங்கள் கவலையான படங்கள், சண்டை படங்கள் மற்றும் பயத்தை ஏற்படுத்தும் பேய் படங்கள் போன்றவற்றை பார்ப்பதனால் நாங்கள் உளரீதியாக பாதிக்கப்படுகிறோம். அத்துடன், அதிக அளவில் தொலைக்காட்சி பார்ப்பதால் அதிலிருந்து வரும் கதிர்கள் கண்ணைப் பாதிப்பதுடன் களைப்படையச் செய்கின்றன. மற்றும், நாங்கள் தொடர் நாடகங்கள் மற்றும் படங்கள் என்பவற்றை பார்ப்பதனால் நாங்கள் நித்திரை கொள்ளும் நேரம் குறைவடைகிறது. இதனால் எமது உடல் நலம் பாதிப்படைகிறது. தொலைக்காட்சியை சத்தமாக கேட்பதனால் எமது காதுகள் பாதிப்படைவதுடன் சூழலும் மாசடைகிறது.

ஆகையினால், அன்னப் பறவை எப்படி பாலையும் நீரும் சேர்த்து வைத்தால் பாலை மட்டும் அருந்துமோ அது மாதிரி தொலைக்காட்சியின் நன்மைகளை மட்டும் நாம் அனுபவிக்க வேண்டும். இவ்வாறு கட்டுக்கோப்பான முறையில் நாம் தொலைக்காட்சியினை பாவித்தோமானால் நிச்சியமாக எமக்கு நன்மையே விளையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.



# வானவில் கவிதை

வானம் கறுத்தது
மின்னல் மின்னியது
மழை பெய்தது
மழை தூறியது
சூரியன் வந்தது
சூரியன் சிரித்தது
வானவில் வந்தது
அழகாக இருந்தது
ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள்,
செம்மஞ்சள், சிவப்பு! பல வர்ண வானவில்
அழகாக வந்தது.

ஆக்கம்:
சாயினா ஞானாளன்

## உண்மை அன்பு

**நித்தியா பத்மசிறி**

அன்று காலை 10:30 மணி போல், ஒரு எண்பது வயதுக்கு கிட்டிய வயதானவர், தனது வருமான வரி படிவங்களை நிரப்ப என்னிடம் வந்தார். தான் சீக்கிரமாக போக வேண்டும், 12:00 மணி போல் வேறு இடம் செல்ல வேண்டும் என்றும் கூறினார்.

நான் அவரின் முக்கியமான விபரங்களை பதிவு செய்து, அவரை உட்காரும்படி கூறினேன். அந்த வயதானவர் தன் கைக்கடிகாரத்தை திரும்பத் திரும்பப் பார்ப்பதை அவதானித்து, படிவங்களை எவ்வளவு சீக்கிரமாக முடிக்க முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக முடிக்க முயற்சி செய்தேன். படிவங்களை நிரப்பும் போது, நான் அவருடன் பேசத்தொடங்கினேன்.

அவர் அடுத்ததாக எங்கு அவசரமாகப் போகவேண்டும் என்று கேட்ட போது, அவர் வயோதிபர் இல்லத்திற்கு சென்று, தன் மனைவியுடன் மதிய உணவு உண்ண வேண்டும் என்று கூறினார். அப்போது, நான் அவரின் மனைவியின் சுகங்களை பற்றி விசாரித்தேன். அவர், தன் மனைவிக்கு அல்சைமர் நோய் [Alzheimer's] என்று பதில் அளித்தார். உங்கள் மனைவி சிறிது நேரம் பிந்தினால் கவலைப் படுவாரோ என்று கேட்டேன்.

"என் மனைவிக்கு நான் யார் என்று தெரியாது, இந்த நிலையில் ஐந்து வருடங்களாக இப்படித்தான் இருக்கிறார்'', என்று கூறினார்.

நான் ஆச்சரியத்துடன் "ஏன் அப்போ அவரை ஒவ்வொரு நாளும் போய் பார்க்கிறீர்கள்'', என்று கேட்டேன்.

சிரிப்புடன், என் கையைப் பிடித்துக்கொண்டு, அந்த வயதானவர் கூறினார், "அவருக்கு என்னைத் தெரியாது, ஆனால் எனக்கு அவர் யார் என்று தெரியுமே".

என் கண்ணீரை அடக்கியபடி, அவர் வெளிக்கிட்ட பின், நான் நினைத்துக் கொண்டேன், ‘‘இப்படியான அன்பு தான் என் வாழ்க்கையில் எனக்குத் தேவை. உண்மையான அன்பு இருந்ததையும், இருக்கின்றதையும், இருக்கப்போவதையும், இல்லாததையும் ஏற்றுக்கொள்ளக்கூடியது".

## என் அப்பப்பாவும் அப்பம்மாவும்

**- காவியன் பத்மசிறி -**

நீண்ட விமான பயணத்தின் பின், எனக்கு களைப்பாக இருந்தது. ஆகாய விமானத்தில் ஏறி, ஏழு மணித்தியாலங்கள் ஆகிவிட்டது. அந்த சிறிய தொலைக்காட்சியில் அனைத்து திரைப்படங்களையும் பார்த்துவிட்டேன். எனக்கு பயணம் அலுத்துவிட்டது. காலை நீட்டி சோம்பல் முறித்தேன்.

எமது சித்தப்பாவின் கல்யாண வீட்டிற்காக எமது குடும்பம் இந்தியாவிற்கு சென்று கொண்டிருந்தோம். எனது சித்தப்பா முதலே அங்கு சென்றுவிட்டார். எனது அப்பப்பாவும் அப்பம்மாவும் இலங்கையில் இருந்து அங்கு போய்விட்டார்கள். இது தான், எனக்கு ஞாபகம் இருக்கும் வயதில் அவர்களை முதல் முறை சந்திக்கப் போகிறேன்,

விமானம் தரை இறங்கியது, சனங்கள் நிறைந்த விமான நிலயத்தில் இருந்து வெளியில் வருவதிலே களைத்துவிட்டோம். ஒரு பழைய taxiயை மறித்து, எமது பொதிகளை ஏற்றி, நாமும் இடித்துக்கொண்டு ஏறி அமர்ந்தோம். எமது வாகனம், எமது சித்தப்பா தங்கியிருந்த வீட்டை நோக்கி புறப்பட்டது. சாலையில் செல்லும் போது, சாலை ஓரமாக தமிழ் பாட்டுக்களும், இந்திப் பாட்டுக்களும் கேட்டுக்கொண்டு சென்றோம். சுவையான உணவின் மணம் மூக்கைத் துளைத்து, பசியைத் தூண்டியது. இரவு நேர வீடுகளின் மின் விளக்குகள், நத்தார் பண்டிகையை நினைவூட்டியது. கோவில்களையும், வீடுகளையும், சேரிகளையும் தாண்டி, எமது வாகனம் சென்றது. சாலையில்

படுத்திருக்கும் நாய்களையும், மாடுகளையும் தவிர்த்து வாகனத்தை ஓட்டிய சாரதியின் கெட்டித்தனத்தை மெச்ச வேண்டும்.

வீடு சென்றடைந்த போது, ஒரு யுகமே முடிந்து விட்டது போல் இருந்தது. Taxiயில் இருந்து வெளியில் வந்த போது மழை தூறிக்கொண்டு இருந்தது. நாங்கள் எங்கள் பொதிகளை தூக்கிக்கொண்டு, நீர் தேங்கியிருக்கும் பள்ளங்களை தாண்டி, சிறிய சந்து வழியாக நாம் இருக்கப்போகும் வீட்டிற்கு நடந்தோம். வீட்டின் படிகளில் ஏறும் போது வீட்டு வாசலில், வெள்ளை முடியுடன் ஒரு தாத்தாவும், அவருக்குப் பின்னால் சுருள் தலைமுடியுடன் ஒரு பாட்டியும் சிரித்துக்கொண்டு நின்றார்கள். இவர்கள் தான் என் அப்பப்பாவும் அப்பம்மாவும், அவர்கள் என்னைத் தூக்கி முத்தமிட்டார்கள். இது தான் எனது ஞாபகம் இருக்கும் வயதில் அவர்களை நான் முதலில் கண்ட அனுபவம்.

## உலக அதிசயம் ஈபிள் கோபுரம்

**- வைஸ்ணவி கிரிதரன் -**

ஈபிள் கோபுரம் உலக அதிசயங்களில் ஒன்று. இது ஒரு அழகான அமைப்பு, மற்றும் பல ஆண்டுகளுக்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

ஈபிள் கோபுரம் ஒரு இரும்பு அமைப்பு. இது பாரிஸ், பிரான்சில் அமைந்துள்ளது. ஈபிள் கோபுரம் Gustav Eiffel என்பவரின் பெயரால் பெயரிடப்பட்டது. பொறியியலாளர் மற்றும் Stephen Savestre வடிவமைக்கப்பட்டது. இது ஆயிரத்து எண்ணூற்றி எண்பத்தேழாம் ஆண்டில் கட்டப்பட்டது. ஈபிள் கோபுரத்தை உருவாக்க இரண்டு ஆண்டுகள் ஆனது. இது முன்னூற்றி இருபத்தி நான்கு மீட்டர் உயரம் மற்றும் பார்வையாளர்கள் பார்ப்பதற்கு மூன்று நிலைகள் உள்ளன. ஈபிள் கோபுரத்திலும் பல உணவகங்கள் உள்ளன. இங்கே பார்வையாளர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் பாரம்பரிய பிரஞ்சு உணவு அனுபவிக்க முடியும். மேல் மாடியில் ஒரு கவனிப்பு தளம் பயன்படுத்தப்படுகிறது. பல வருடங்களுக்கு பின் ஈபிள் கோபுரம் மிகுந்த உயரமான மனிதரால் கட்டப்பட்ட கட்டடம்.

ஈபிள் கோபுரம் இப்பொழுதும் நிலைத்திருப்பது மற்றும் ஒரு உலக அதிசயம் ஆகும். அதை நாங்கள் பாராட்டி கவனிக்க வேண்டும்.

## ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - சிங்கமும் மாடுகளும்

**- விதுஜா விஜயகுமார் -**

ஒரு அடர்ந்த காட்டில், பல மாடுகள் இருந்தன. அவை நல்ல நண்பர்கள். அவை எப்போதும் ஒன்றாகத்தான் புல் மேய செல்லும்.

இதனை ஒரு சிங்கம் பல நாட்கள் கண்காணித்துக்கொண்டு வந்து, எப்படியாவது அவற்றை வேட்டையாடி சாப்பிட வேண்டும் என எண்ணியது.மாடுகள் எல்லாம் கொழு கொழு கொழு என இருக்கின்றன. இவற்றைச் சாப்பிட்டால் எவ்வளவு சுவையாக இருக்கும். எப்படியாவது இவற்றை சாப்பிட வேண்டும் என எண்ணியது.

நாட்கள் பல கடந்தன. ஒரு நாள் சிங்கத்திற்கு ஒரு யோசனை தோன்றியது. மாடுகளுடன் நண்பர்களாக பழகியது. ஒரு நாள் ஒரு மாட்டை தனியாக கூட்டி சென்று அதற்கு சில பொய் கதை கூறியது. மற்றவை உன்னைப் பற்றி கூடாமல் கூறுகின்றன. ஏளனம் செய்கின்றன என அதற்கு கூறியது. அந்த மாடு, சிங்கம், கூறியதை நம்பியது. நண்பர்களை விட்டு விலகி தனியாக புல் மேய தொடங்கியது.

இந்த நல்ல சந்தர்ப்பத்தை அந்த சிங்கம் பயன்படுத்தியது. சிங்கம் ஏளனமாக சிரித்தது. தனியாக மேய்ந்த மாடு மீது பாய்ந்து வேட்டையாடி சுவைத்தது.

# நான் கண் விழித்தெழுந்து


- சுவேத்தா -

நான் கண் விழித்தெழுந்து சுற்றுப்புறம் எங்கும் பார்த்தேன். என் கண் முன்னே ஒரு விநோதமான இடம் தென்பட்டது. பார்க்கும் இடம் எல்லாம் வறண்ட மணல் நிலம், எல்லை இல்லாத நீளத்திற்கு பரந்து கிடந்தது. மரம், செடி, புல் ஒன்றும் கண்ணிற்குத் தெரியவில்லை. சூரியன் தக தக வென்று சுட்டெரித்ததால் சுற்றும் முற்றும் வறண்டு கிடந்தது. மணல் எனது காலை சுட்டது. என் உடம்பிலிருந்து வியர்வை கொட்டியது. என் உறவினர்களையும் நண்பர்களையும் தேடினேன். ஆனால் ஒருவரையும் காணவில்லை.

கவனமாக எழும்பி பாதையில் நடக்க துவங்கினேன். சிறிது தூரம் சென்ற பின், மனிதர்களை கண்டேன். எனது மனம் நிம்மதி அடைந்தது. நான் சென்று ஒருவரிடம் கதைத்தேன். ஆனால் நான் சொல்வதொன்றும் அவருக்கு விளங்கவில்லை. அவரின் குரல் வித்தியாசமாக இருந்தது. அத்தோடு, அவர் மரம் போல் உயரமாக இருந்தார்.

திடீரென, அவர் ஒரு புதுவிதமான ஆயுதத்தை கையில் எடுத்தார். என்னை தாக்க முயன்றார். நான் விரைவாக ஓடத் தொடங்கினேன். அவர் என்னை துரத்திக்கொண்டு பின்னால் ஓடி வந்தார். எனக்கு மிகவும் களைப்பாக இருந்தது. பின்னால் திரும்பிப் பார்த்தேன். எனக்கு உடம்பெல்லாம் வியர்த்தது. அவர் எனக்குப் பின்னே கூட்டத்துடன் என்னைத் துரத்திக்கொண்டு ஓடி வந்தார். நான் வர்களிடமிருந்து தப்புவதற்காக மிகவும் வேகமாக ஓடினேன். வழியிலிருந்த கல்லில் தடக்கி விழுந்தேன். அவர்கள் மிகவும் அருகில் ஆயுதங்களுடன் வந்தனர். எனது இருதயம் மிகவும் வேகமாக துடிக்கத் தொடங்கியது. எனது முழுப் பலத்தையும் பாவித்து எழும்பி ஓட முயற்சித்தேன். அவர்கள் ஆயுதத்தை ஓங்கி என்னை தாக்கத் தொடங்கினார்கள். நான் செய்வதறியாது சத்தமாகக் கத்தினேன்.

திடீரென்று நான் கண் விழித்தேன். இது கனவென்று அறிந்ததும், எனது மனம் ஆறுதல் அடைந்தது.



# கேசி தமிழ் மூத்த பிரசைகள் ஒன்றுகூடல் - *2019*

கேசி நகர் அடங்கிய இடங்களிலும், மற்றும் அதை அண்டிய டண்டணங் மற்றும் றோவில் போன்ற பகுதிகளில் வாழும் தமிழ் மூத்த பிரசைகள் ஒன்றிணைந்து ஓர் சமுகமாக கலந்து கூடி. மகிழும்விதமாக கடந்த பல வருடங்களாக மாதாமாதம் பெரிக் நகரில் நடந்துவரும் கூட்ட நிகழ்வுகள் வழமைபோல இந்தவருடமும் கீழே தரப்பட்டிருக்கும் தினங்களில் நடைபெற இருக்கின்றன என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம். புதிய அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொள்ள விரும்புபவர்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் இலக்கங்களில் காணப்படுபவர்களைத் தொடர்பு கொண்டு சேர்ந்து கொள்ளலாம்.

தவிர தம்பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் தற்காலிகமாக வந்து தங்கி இருப்பவர்களும் வந்து கலந்து கொள்ளலாம். அவர்கள்

அங்கத்தவர்களாகச் சேரவேண்டுமென்பது கட்டாயமில்லை. அவர்கள் இங்கு தங்கியுள்ள காலங்களில் வந்து கலந்து கொள்ளலாம். அங்கத்தவர்களுக்குரிய சலுகைகள் அவர்களுக்கும் கிடைக்கும். கூட்டத்திற்கு வந்து போவதற்குரிய வசதிக்குறைவுள்ளவரகள் டண்டணங், மற்றும் கேசி எல்லைக்குள் வாழ்பவர்களாயின் அவர்களுக்குரிய பிரயாண வசதிகள் ஒரு சிறு தொகை கட்டணத்துடன் அவர்கள் தங்கியுள்ள வீட்டிலிருந்து வந்துபோவதற்குரியவிதமாகச் செய்து கொடுக்கப்படும். எதுவாக இருந்தாலும் எவ்வித தயக்கமுமின்றி குறிப்பிடப்பட்டிருக்கும் தொடர்பாடர்களிடம் தொடர்புகொண்டு உங்களையும் இணைத்துக்கொள்ளவும்.

மாதாந்தக்கூட்டமென்பது விரும்பியோ விரும்பாமலோ புலம்பெயர்ந்ததனால் மதில்மேல் பூனைபோல அலைபாய்ந்த உள்ளத்துடன் வீட்டிலுள்ள பிள்ளைகள் வெளியே வேலைக்குப் போனவுடன் தனிமைச் சிறையில் அவதியுறும் முதியவர்களுக்கு ஓர் ஆறுதல் தரும் சந்திப்பாக, தம்வயதையொத்த

புதிய நண்பர்களை அறிமுகம் செய்து அவர்கள்மூலம் பல விசயங்களையும் அறிந்து தம் எஞ்சிய வாழ்நாட்களை மகிழ்ச்சியாகக் கழிப்பதற்கு உரிய ஓர் கட்டமைப்பாகும். இங்கு இதயத்திற்கு நிறைவுதரும் நடனங்கள், பாட்டுக்கள், நாடகங்கள், மற்றும் நம் உடல் நோய் மருத்துவம் போன்ற விபரங்கள் பற்றிய கலந்துரையாடல்கள், அரசாங்க நடைமுறைகள், சலுகைகள் பற்றிய பல விடயங்களைத் தெரிந்துகொள்ளலாம்.

கூட.டம் நடைபெறும் இடம் Berwick Senior citizen Hall, 112, High Street, Berwick.

| | | | |
|---|---|---|---|
| காலம். | 23-02-2019. | Saturday. | 10:00 -14:00 |
| | 23-03-2019. | Saturday. | 10:00- 14:00 |
| | 27-04-2019. | Saturday. | 10:00- 14:00 |
| | 25-05-2019. | Saturday. | 10:00- 14:00 |
| | 22-06-2019. | Saturday. | 10:00- 14:00 |
| | 27-07-2019. | Saturday. | 10:00- 14:00 |
| | 24-08-2019. | Saturday. | 10:00- 14:00 |
| | 28-09-2919. | Saturday. | 10:00- 14:00 |
| | 26-10-2019. | Saturday. | 10:00- 14:00 |
| | 23-11-2019. | Saturday. | 10:00- 14:00 |
| | 21-12-2019. | Saturday. | 10:00- 14:00 |

தொடர்புகொள்ளவும்: சிவா. 0491 149 113. நவா. 0469 615 043 .

கூட்டத்திற்கு பங்குபற்ற விரும்பும் அங்கத்தவர்கள் கூட்டதினத்திற்கு ஒருவாரத்திற்கு முன்பதாக அறியத்தந்தால் அவர்களுக்குரிய மதிய உணவு ஏற்பாடுகள் செய்வதற்கும், பிரயாண ஒழுங்குகள் செய்வதற்கும் உதவியாக இருக்கும்.

# "பக்தி வலையில் படுவோன் காண்க" திருவாசகம்

**- தி. கணேஸ்வரன் -**

மார்கழி மாதத்தில் பக்தர்கள் திருவாசகம் பாடுவது வழக்கம். திருவாசகத்தில் திருவண்டப் பகுதியில் வரும் ஒரு அடி கட்டுரையின் கருப்பொருளாக அமையும், இக் கருத்தை வற்புறுத்தும் இலக்கியச் சுவை நிரம்பிய மகா பாரத, இராமாயணப் பாடல்கள் இங்கு தரப்படும்.

**மகா பாரதம்**

மகா பாரதத்தில் கிருஷ்ணன் தூது ஒரு முக்கிய சம்பவம். அரவுக் கொடியோனான துரியோதனன் அஸ்தினாபுரியில் ஆட்சி நடத்துகிறான். வழவாசமும், அஞ்ஞாத வாசமும் முடித்த பாண்டவர், தாம் சூதாட்டத்தில் இழந்த நாட்டை மீண்டும் பெற முற்படுகின்றனர். ''துரியோதனன் தனது வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்'' என்று கோரித் தூது செல்ல முன், கிருஷ்ணர் பாண்டவரிடம், அவரவர் கருத்துக்களை வேண்டுகிறார்.

சமதானத்தை விரும்பி போரைத் தவிர்க்க முற்படும் தருமர்

**"நாடொன்று நல்கானாகில் ஐந்து ஊர் வேண்டு,**

**அவை இல் எனின் ஐந்து இலம் வேண்டு,**

**அவை மறுத்தால் அடு போர் வேண்டு"**

**என்று கூற வீமன் கோபங் கொண்டு**

**"அரவுயர்த்தோன் கொடுமையினும்,**

**முரசுயர்த்தோய் உனது அருளுக்கு அஞ்சினேன்"**

என்றான்அருச்சுனன்.

**"அக்காலம் பொறுதவெலாம் அமையாமல்**

**இன்னம் இருந்து அறமே சொன்னால்**

**எக் காலம் பகை முடித்துத்**

**திரௌபதியும் குழல் முடிக்க இருக்கின்றாளே"**

எனக் கூறி தூது பயன்படாது என்றான். நகுலன் கோபமும் சோகமும் கலந்த வார்த்தைகளில்

**"ஆண்மைக்கு இடம் இல்லையோ**

**ஐவர் பார் ஆள்வது பொய் ஆகுமோ"**

என்று வினவினான். இறுதியில் கண்ணன் சகாதேவனை நோக்கி ''புகல் நீ'' என, சகாதேவன் பதிலாக,

**"ஒருவருக்கும் தெரியாது இங்கு உன் மாயை**

**யானறிவன் உண்மையாக திருவுள கருத்தெதுவோ**

**அது எனக்கும் கருத்து"** என்றான்.

இந்த தந்திரமான பதிலைக் கேட்ட கண்ணன் புன் சிரிப்புடன் சகாதேவனை தனியே அழைத்துச் சென்று

**"பாரதப் போர் பயிலா வண்ணம்**

**உய்வண்ணம் சொல்லுக நீ உபாயம்"** என்றதும்,

சகாதேவன் கண்ணனை வணங்கி

**"பாராளக் கண்ணன் இகல் பார்த்தனை கொன்றணங்கின்**

**காரார் குழல் களைந்து காலில் தளை பூட்டி**

**நேராகக் கை பிடித்து நின்னையும் யான் கட்டுவனேல்**

**வராமல் காக்கலாம் மா பாரதம்"** என்றான்.

மேலே கூறியவை எல்லாம் செய்து முடித்தாலும் என்னைக் கட்ட இயலுமோ என்ற கண்ணனுக்கு சகாதேவன்

**"ஐயனே நீ உன்னை உணரவில்லை**

**காட்டுக உன் வடிவத்தை கட்டுவன் யான்"** என்றான்.

பகவான் தனது மங்கள சொரூபங்கள் பதினாயிரம் காட்டி அதனுள் தனது மூல வடிவத்தை மறைத்தார். சகாதேவன் மூல வடிவத்தை ஞானத்தால் உணர்ந்து பக்தியினால் பாதங்களைப் பிணித்தான்.

பாசம் – அன்பு, கயிறு என இரு பொருள்படும். பற்றிய பாதத்தை விடுக என்று பகவான் கேட்க

**"வன் பாரதப் போரில் வந்து அடைந்தோம் ஐவரையும்**

**நின் பார்வையால் காக்கவேண்டும் நெடுமாலே"**

என்ற வரம் கேட்டு பாதப் பிணிப்பை நீக்க, வரமளித்த கண்ணன் நடந்ததை இரகசியமாக வைக்கும்படி நியமித்தார்.

**இராமாயணம்**

இராமாயணத்தில் அனுமான் பக்தியின் சிகரமாகத் திகழ்கின்றான். அவன் அசோக வனத்தில் சீதா பிராட்டியைக் கண்டு உயிர் காத்தான். பின் இராம இலக்குமணரை தனது தோளில் தாங்கினான். பிரமாஸ்திரத்தால் மயங்கிய இலக்குவனையும் சேனையையும் மருத்து மலை தாங்கி வந்து காத்தான். இராவணனின் குலத்தலைவன் மாலியவான் இராவணனுக்கு அறிவுரை கூறும்போது,

**"இறைவர்கள் மூவர் என்பது எண் இலார் எண்ணமே தான்**

**அறை கழல் அனுமனோடும் நால்வரே முதல்வர் அம்மா"**

என்று பாராட்டுகிறான்.

அயோத்தியில் முடிசூட்டு விழா முடிந்த பின், இராமர் படைத்தலைவர் சுக்கிரீவன், அங்கதன் முதலியோரை அழைத்து பரிசுகள் அளித்து, கட்டி அணைத்து விடை கொடுத்த பின் அருகே பணிவுடன் நின்ற மாருதியை நோக்கினார்.

பொருந்துறப் புல்லுக மாருதி தன்னை ஐயன் மகிழ்ந்து இனிது அருளின் நோக்கி

**"ஆர் உதவிடுதற்கு ஒத்தார் நீ அல்லால்**

**அன்று செய்த பேர் உதவிக்கு**

**யான் செய் செயல் பிறிதில்லை**

**பைம்பூண் போர் உதவிய**

**திண் தோளாய் பொருந்துறப் புல்லுக" என்றான்.**

வாய் புதைத்து வணங்கி நின்ற அனுமனுக்கு, சீர்களை வழங்கிய இராம பிரான், தேவியை நோக்க, சீதா பிராட்டி, கலைமகள் தனக்கு பரிசாக வழங்கிய முத்து மாலையைக் கழற்றி ஈந்தாள். பாடல் பின் வருமாறு

**"பூ மலர்ந்த விசை நீத்து**

**பொன் மதில் மிதிலை பூத்த**

**சே மொழித் திருவை ஐயன்**

**திருவருள் முகத்து நோக்க**


**மா மறைக் கிளத்தி ஈந்த**

**பரு முத்து மாலை கைக்கொண்டு**

**ஏமுறக் கொடுத்தாள், அந்நாள்**

**இடர் அறிந்து உதவினானை"**

பாரதமும் இராமாயணமும் இந்திய பண்பாட்டின் இரு கண்கள். ''பத்துடை அடியவர்க்கு எளியன் பிறர்க்கு அரிய வித்தகன்'' என்று ''திருவாய் மொழி'' இறைவன் விளம்புகின்றது.


எனது குடும்பம்

எனது பெயர் நிர்த்திகாடனீ.
எனக்கு 6 வயது. நான் ஆண்டு
1ல் படிக்கிறேன். எனது
குடும்பத்தில் 4 பேர் உள்ளனர்.
என் அம்மா யசோ, அப்பா நிமால்,
மற்றும் என் ஆசை தம்பி
கார்த்திகேயன். எனது பெற்றோர்
வேலைக்கு போகும் போது
எங்களை எங்கள் அப்பப்பா
மிகவும் கண்ணும் கருத்துமாக
பார்த்துக் கொள்வார்.
எனக்கு என் குடும்பத்தை மிகவும்
பிடிக்கும்.

நிர்த்திகாடனீ
ஆண்டு 1

# இலக்கிய கட்டுரை - இன்ப கீதம்

**- சங்கரி அப்பன் -**

மனசில் அமைதியை கொண்டு வருகிற திறன் இசைக்கு உண்டு. தேனினும் இனிய இசை. தெவிட்டாத தெள்ளமுதம். உள்ளத்தில் பாலை வார்க்கும் சுகம். இவையெல்லாம் நாட்டுப் பாடல்கள் மூலம் நாம் பெறலாம். கடலலைகள் தாளம் போடுகிறது. மழை பாடுகின்றது. மரங்கள் சலசலத்து கீதமிசைக்கிறது. காற்று தன் பங்குக்கு சீட்டியடிக்கிறது. இந்த இயற்கை கலைஞர்களின் பக்க வாத்திய இசையில் நாம் மனசை பறிகொடுப்பது போல் நாட்டுப் பாடல்களிலும் நாம் நம் மனதை பறிகொடுக்கலாம். காரணம் அதுவும் இயற்கையானது என்பதால். மக்களின் உணர்வுகள் மக்களால், மக்களுக்காக எளிய வரிகளில் பாடப்படுகிறது. வேறு யாரும் அவர்களுக்காகப் புனையவில்லை. அவர்களே அவர்களுக்காக பாடுகிறார்கள். இது சிறப்பல்லவா! செவி வழியாகவே தலைமுறைதோறும் இப்பாடல்கள் தொடர்ந்து வருகின்றன. இன்றளவும் நீடிக்கிறது.

காற்றில் மிதந்து வந்த ஒரு இனிய பாடலைக் கேட்டு மயங்கிய முண்டாசு கவிஞர் தன் பாஞ்சாலி சபதத்தில் அதனைக் கொண்டு வந்துள்ளார்.

“மாயக் காரணம்மா!—கிருஷ்ணன் மகுடிக் காரணம்மா..” என்ற நாட்டுப்புறப் பாடல் “மாயச் சூதினுக்கே—ஐயன் மனமினைங்கி விட்டான்.” என்று கொண்டு வந்துள்ளார். நாட்டுப் பாடல்கள் அவரையும் ஈர்த்துவிட்டிருக்கிறது.

மிக இன்பமான சந்தங்கள் உடைய பலப் பாடல்கள் எங்கிருந்து வந்திருக்கிறது என்று பார்த்தால் நமக்கு ஆச்சரியமாக இருக்கும். நெல்குத்துவோர், சுண்ணாம்பு இடிப்போர், குறிகாரி, தொம்பச்சி ஆகிய வகுப்பினரிடமிருந்து வந்திருக்கின்றன என்பது வியப்பை அளிக்கிறது.

குழந்தை அழுகிறது. தாய் தாலாட்டுகிறாள். அப்படியும் குழந்தை அழுகையை நிறுத்தவில்லை. யாராவது அடித்தார்களா? கலங்கிப் போன அன்னை படுகிறாள்.

“அத்தை அடிச்சாளோ அல்லிப்பூ தண்டாலே

அடிச்சாரை சொல்லியழு ஆக்கினையும் செஞ்சிடுவோம்.”

அந்தக் குறும்புக்கார குழந்தை பதில் கூறுவதாக ஒரு கற்பனை.

“ஆரும் அடிக்கவில்லை, ஐவிரலும் தீண்டவில்லை

மாதா மடி தேடி—மயங்கி அழுதேனம்மா

தாயார் மடிதேடி—தவிச்சு அழுதேனம்மா!

தாய்மடி சுகத்தினை அனுபவிக்க யாரோ அடித்தது போல் அழுது பெற்றவளை கலங்க வைத்த குறும்பு இப்பாடலில் அழகாக அமைந்துள்ளது. இப்படித்தான் தமிழ் மண்ணில் எல்லா இடங்களிலும் நாட்டுப் பாடல்கள் மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து உள்ளன. ஒரு கிராமத்து மங்கையின் காதல் உணர்வுகள் மலர் மலருவது போல் மென்மையாக மலர்வதை ஒரு நாட்டுப் பாடல் சொல்கிறது.

“மன்னர் வருவாரென்று மல்லிகைப் பூ வாங்கி வைச்சேன்

மன்னர் வரவில்லை மல்லிகைப் பூ வாடிப் போச்சே!

ராசா வருவாரென்று ரோசாப்பூ வாங்கி வச்சேன்

ராசா வரவில்லை ரோசாப்பூ வாடிப் போச்சே.!”

மங்கை மனதோடு நம் மனமும் அல்லவா வாடி விடுகிறது.!

ஏற்றப் பாடல்களில் ஒரு சின்ன நாடகத்தையே பார்க்கலாம். களைப்பு தெரியா வண்ணம் அவர்கள் பாடுகிறார்கள்.

“முன் மிதிக்கும் தோழா, என்ன வேணும் பாலா?”---இது கேள்வி

மோரும் கூழும் ஆனா, மொந்தை ஆனா போதும்”.---இது பதில்.

சோர்வை நீக்கும் புத்துணர்ச்சி இவ்வரிகளில் காணப்படுகிறது அல்லவா!

நாட்டுப்புற பாடல்கள் ஏழை எளிய மக்களின் இலக்கியம். இவற்றின் சந்த இசை யாப்பிலக்கணச் சலங்கையிலிருந்து வந்ததல்ல. இதய துடிப்பிலிருந்து வந்தவை. ஒரு கிராமத்துக் காதலன் கள்ளிப் பூச்சாரலில் தன் காதலியின் தடத்தைப் பார்த்துவிடுகிறான். ஒரு புதிய கிரகத்தை கண்டுபிடித்த விஞ்ஞானியின் சந்தோசம் அவனுக்கு! உணர்வு பூர்வமான அவன் கொந்தளிப்பு நம்மை அயர வைக்கிறது.

“அள்ளட்டா மெள்ளட்டா..அடி மடியில் கட்டட்டா?

குச்சி கட்டி காக்கட்டா? குணமயிலே உன் தடத்தை?”

தலை கால் புரியாத அவன் சந்தோஷத்தில் நாம் அவன் தூய காதலை உணருகிறோம். காதலியின் தடம் என்றால் சும்மாவா? அதிகம் சொல்வானேன்..கவிச்சக்கரவர்த்தி கம்பன் கூட இந்த நாட்டுப்புற கவிஞனிடம் தன் மகுடத்தை இழந்தவர் தான்.

“மூங்கில் இலை மேலே தூங்கும் பனிநீரே..”

என்ற ஏற்றக்காரன் பாடிவிட்டு நிறுத்தி விடுகிறான். பொழுது சாய்ந்துவிட்டது. அடடா..அடுத்த வரி என்னவாக இருக்கும்? இரவெல்லாம் சிந்தித்தும் ஒன்றும் பிடிபடாமல் விடிந்ததும் அந்த வரிகளை அவன் வாயால் கேட்க ஓடோடி வருகிறார். நாட்டுப்புற கவிஞன் முடிக்கிறான்

“தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே..” எளிமையான தமிழில் உயர்ந்த கருத்தும் சந்தமும் கேட்டு மனம் பரவசப்பட்டு நிற்பது கம்பர் மட்டும் தானா?

நாமும் தான். ஏனென்றால் இது நமக்கான பாட்டு.

ஒரு காதலி தன் காதலனை நினைத்துப் பாடுகின்றாள். மனம் நிறைய அவன் நினைவுகள்! அவன் மனதோடு அவள் மனம் சதா உரசுகிறது. அது கண்டு பலரும் புறம் பேசுகிறார்கள். அவளுக்கு கடுப்பாகிறது. கல்லோடு கல் உரசுகிறது யாரும் நிந்திக்கவில்லை. கடல் நீரோடு மீன் உரசி உயிர் வாழ்கிறது. அதையும் யாரும் தவறாக எண்ணவில்லை. ஆனால் அவள் தன் காதலனின் மனசோடு உரசும் போது மட்டும் பொங்கி எழுகிறார்களே என்ன அநியாயம்! என்று பொருமுவதாக அமைகிறது இந்தப் பாட்டு.

“கல்லோடு கல்லுரச, கடலுத் தண்ணி மீனுரச

உன்னோடு நானுரச உலகம் பொறுக்கலையே!”

அவள் எரிச்சல் நியமானது தானே!

ஒரு தேசத்தின் ஆணிவேர் நாட்டுப் பாடல்கள். பழமையானது. வாய் வழி வந்தது. இயற்றியவர் விவரம் இல்லை. ஆனாலும் வழி வழியாக பாடப்பெற்று நிலைத்து நிற்கிறது. நம் பண்பாட்டை, கலாச்சாரத்தை, மக்களின் போராட்டத்தை, ஆசைகளை, கனவுகளை, விதிமுறைகளை, மேன்மையை, வாழ்க்கைத் தத்துவங்களை அழகாக எளிய வரிகளில் துடிப்பாக கொண்டு வந்திருக்கிறது. இன்னமும் புதுமையுடன் திகழ்கிறது.

திருமணத்தின் போது மாப்பிள்ளையை கேலி செய்யும் நகைச்சுவை பாடல்கள் ரசிக்கத்தக்கவை.

“கோவைப் பழம் போல் எங்கள் பெண்ணழகு— இந்த

கோணமூஞ்சி மாப்பிள்ளைக்கு நலங்கிட வாரும்

எலுமிச்சை பழம் போல் எங்கள் பெண்ணழகு— இந்த

எரிமூஞ்சி மாப்பிள்ளைக்கு நலங்கிட வாரும்.

கும்பகோணத்து ஜட்ஜ் என்று பெண் கொடுத்தோம்

குப்பை லாரி மேஸ்திரி என்று தெரியாம போச்சே!”

ஒரு மனைவியின் ஆதாங்கத்தை அற்புதமாக படம் பிடித்து காட்டும் பாடல்—

“பாட்டு படிச்சு வச்சேன். பை நிறைய போட்டு வச்சேன்

பாட்டறியா சக்களத்தி பையோடு தூக்கிக்கிட்டா.”

மாதவியிடம் தன் கணவனை பறிகொடுத்த கண்ணகி கூட தன் ஆதாங்கத்தை இவ்வளவு சரியாக சொல்லியிருக்கவில்லை. நாட்டுப்புற மனைவி சொல்லிவிட்டாள். எவ்வளவு நயம்! எவ்வளவு எளிமை! பை நிறைய கொட்டி வச்சேன் என்பது அவள் தன் கணவனோடு வாழ்ந்த காதல் வாழ்க்கை. அவள் கணவனின் அருமை அவளுக்கல்லவா தெரியும்! அவன் அருமை தெரியாத இன்னொருத்தி முழுசாக தூக்கிக் கொண்டு போய்விட்டாள். வலிக்காதா அவளுக்கு? அவள் சேர்த்து சேர்த்து வைத்திருந்த இனிமையான தருணங்களை எல்லாம் களவு கொடுத்துவிட்டாள்...காதலின் அருமை தெரியாதவளிடம்! என்ன ஒரு ஏமாற்றம்!

ஒரு தாய் தன் சிறுகுழந்தையை விட்டு விட்டு வேலைக்கு வந்து விட்டாள்.

குழந்தை பசியால் அழுதிட்டிருக்கும் என்று பதறும் தாய், வேலை முடித்து வீட்டுக்கு போக அனுமதி கேட்கிறாள். கல்நெஞ்சுடைய எஜமானுக்கு அவள் குழந்தையின் பசி பற்றி தெரியுமா? அவள் தவிப்பு பற்றி தெரியுமா? அனுமதி மறுக்கிறான். வேறு வழியில்லாமல் அவனை புண்ணியரே என்று அழைக்கிறாள். பாவம் செய்பவனை புண்ணியரே என்று அழைக்க வேண்டிய நிர்பந்தம் அவளுக்கு. இந்தப் பாடலின் வரிகள் கண்களில் நீரை வரவழைக்கும். அவள் வலி பாடலாக வெளிப்படுகிறது.

“தண்ணி கருத்திருச்சு தவளை சத்தம் கேட்டிருச்சு

புள்ள அழுதிருச்சி புண்ணியரே வேலை விடு.”

குழந்தை பாடல்கள் சிற்றிலக்கியம் போல் இனிமையானவை.

“தோள் வீசம்மா தோள் வீசு. சந்தனக் கிளியே தோள் வீசு.

பச்சைக் கிளியே தோள் வீசு. பவளக் கொடியே தோள் வீசு.’

இப்படிப் பாட குழந்தை தன் தோளை ஆட்டும்.

மீன் விற்றவள் அந்தக் காசில் தன் குழந்தைக்கு அரை சவரன் அரைஞான் பண்ணிப் போட்டு அழகு பார்க்கிறாள். எல்லோரும் குழந்தையின் அழகைப் பார்க்க ஓடி வருகிறார்கள் என்று பெருமையாகப் பாடுகிறாள்.

“அத்தைமாரும் அண்ணன்மாரும்—கண்ணே உன்

அழகைப் பார்த்து அரண்டார்களே!

அரண்மனையார் ஓடி வந்து—கண்ணே உன்னை

அதிசயமாகப் பார்த்தார்களே!”

அந்தப் பெருமிதத் தாயின் பாடல் கேட்டு நமக்கும் அக்குழந்தையைப் பார்க்க ஆசை வருகிறதல்லவா!

நிலவை குற்றம் சொல்லும் காதலி பற்றி கேள்விப் பட்டிருக்கிறீர்களா? அப்படியொரு காதலி இருக்கிறாளே! காரணமிருக்கிறது. இரவு வேளையில் காதலனை ரகசியமாக சந்திக்க வருகிறாள். நிலா வெளிச்சம் காட்டிக் கொடுத்துவிடுமோ என்ற அச்சம் அவளுக்கு. நிலாவை சாமியாக பாவித்து கெஞ்சிக் கேட்கிறாள்.

“வெள்ளை வெள்ளை நிலாவே—சாமி

வெளிச்சமான பால் நிலவே

கள்ள நிலாவே நீ—சாமி

கருகிவிட்டால் ஆகாதோ?”

நாட்டுப் புறப் பாடல்கள் சங்க இலக்கியம் தோன்றுவதற்கு முன்னமையே தோன்றியவை. கிராமத்து கலைஞன் என்று தோன்றினானோ அன்றே நாட்டுப்புற இலக்கியம் தோன்றிவிட்டது. நாட்டுப் பாடல் சிலப்பதிகாரத்தில் இலக்கிய நிலை அடைந்தது. நாட்டுப் பாடல்கள் உணர்ச்சி மிகுந்தவை. விழுமிய கருத்துக்கள் கொண்டவை. நயமான ஓசையும், வளமான சொற்களும், உயர்தர கற்பனையும் கொண்டவை. இலக்கிய சுவை நிறைந்த இப்பாடல்களின் தனிச் சிறப்பு---இவை கல்லாதவர் பாடிய அற்புத பாடல்கள்


என்பதே! ஏடறியாதவர்கள் எழுத்தறியாதவர்கள் எழுதும் வகை அறியாதவர்கள் புனைந்த வாய்

வழிப் பாடல்கள், நாட்டின் பண்பாட்டு இலக்கியமாக அமைந்து போனதில் நாம் தலை நிமிர்ந்து கர்வப்படலாம்.

நாட்டுப் பாடல்களின் அருமை தெரியாதவர்களுக்கு ஒரு பாடல்—

“பாடும் குயில் நான் இருக்க
பனங்காட்டை தேடலாமோ?
சித்திரம் போல் நான் இருக்க
தேச வழி போகலாமோ?”

இயற்கையோடு ஒன்றி, மனசிலிருந்து வெள்ளமாக வெளிப்படும் இந்தப் பாடல்களின் இன்ப கீதத்தை செவிமடுகாமல் இருக்கலாமோ? காசு தேவைவில்லை. ரசனையான மனசே போதும்.



# ஊருக்குப் போகலாமே.......

- சியாமளா யோகேஸ்வரன், பிறிஸ்பேன் -

ஊருக்குப் போவதென்றால் யாருக்குத்தான் ஆசையில்லை. காத்திருந்து, காத்திருந்து, மாதங்களை எண்ணி, பின்னர் நாட்களை எண்ணி இறுதியில் மணித்துளிகளை எண்ணி விமானத்தில் ஏறி அமர்ந்த அந்த நிமிடம் இருக்கிறதே, வாழ்க்கையில் எதையோ சாதித்த உணர்வு. சொந்த மண்ணை, தவழ்ந்து வளர்ந்த வீட்டை, எம் உறவுகளைச் சந்திக்கபோகிறோம் என்ற உணர்வில், 15 மணி நேர நீண்டபொழுதுகளில் தூக்கம் கூடப் பக்கத்தில் வரமாட்டேன் என்று அடம் பிடிக்கும் போது, பரவாயில்லை மறுநாள் என்ன வேலைக்கா போக வேண்டும் என்று நம்மை நாமே சமாதானப்படுத்திக் கொண்டு, கொட்டக்கொட்ட விழித்திருந்ததை மறக்க முடியாது.

வார நாட்கள் என்றால் காலை ஐந்தரை மணிக்கு கிணுகிணுக்கும் அலாரம் எங்கள் மன அழுத்தத்தை கூட்டி எங்களிடம் வாங்கிய திட்டுக்கு அளவேயிருக்காது. வாயிருந்திருந்தால் வடிவேல் பாணியில் எங்களை நாக்கைப் பிடுங்கிறது மாதிரி இரண்டு கேள்வி கேட்டிருக்கும். " நானா கேட்டேன்? சிவனே இருந்த என்னை செற் பண்ணி அடிக்க வைச்சிட்டு, பிறகு "குத்துதே, குடையுதே, கிணுங்குதே" என்றால் நான் என்ன செய்வன் எண்டு கேட்டிருக்கும். இல்லையெண்டா பழைய பாணியில "நானா கேட்டேன், இருக்காதே" என்று வாய் விட்டுக் கதறி அழுதிருக்கும். பாடசாலை, வேலை, வகுப்புகள் என்று காலில் சக்கரம் கட்டாத குறையாய் ஓடி விட்டு, அப்பாடி என்று வார இறுதியில்தான் ஓய்வெடுக்க முடியுமா? அதுவும் முடியாது. வார நாட்களை விட வார இறுதி இன்னமும் பிசியாயிருக்கும். விளையாட்டு, வகுப்புகள் என்றதை விட பார்ட்டி, பார்ட்டி என்று அலையுறதில வேணாம் எண்டு போயிடும்.

பார்ட்டிக்குப் போகாட்டி என்ன? விட்டு விடலாம் எண்டாலும், விட மனம் வராது ஏனென்றால் எல்லாரும் போவினம், நாங்கள் போகாட்டி என்னத்தையோ மிஸ் பண்ணுறது மாதிரி இருக்கும், சொல்லாமல் விட்டால் பரவாயில்லை எண்டு நினைக்கிற குரங்கு மனம், உடன கொப்புத்தாவி ஊருக்குள்ள மவுசு குறைஞ்சு போட்டுதோ அதுதான் சொல்லேல்லையோ எண்டும் நினைக்க வைக்கும். பார்ட்டிக்குப் போறதெண்டால் சும்மா இல்லை. வீட்டில் இருக்கிற எல்லா ஜீவனுக்கும் உடுப்பை ரெடி பண்ணவேணும். அது மட்டுமில்ல, "என்ன செய்து கொண்டு வாறது" எண்டு கேட்டு அதையும் ரெடி பண்ண வேணும். நல்ல குளோஸ்பிரண்ட்ஸ் எண்டால் அதையும் இதையும் சேர்த்து அடிச்சுப் பிறிட்ஜுக்குள்ள வைச்சுட்டு, வாயில நுழையாத ஒரு டிசேட் எண்டு கதை விடலாம். அதுவும் முதல்ல எங்களுக்குத்தான் எடுத்துச் சொல்லுறினம் எண்டால், முந்திக்கொண்டு டிசேட் கொண்டு வாறம் எண்டு சொல்லித்தப்பிப் போடலாம். இல்லையென்றால் " ரோல்ஸ், கட்லெட், வடை எண்டு கஸ்டமானதுகள்தான் பட்டியல்ல கடைசி மிஞ்சியிருக்கும். வேற வழியில்லாமல் மாட்டுப்பட்டுட்டு, ஒரு 25– 30ஐக் கொண்டு வாறன் எண்டு, முந்திக்கொண்டு நாங்களே குறைச்சுச் சொல்லிப் போட்டு வைக்க வேண்டியதுதான். சரி, இந்த வம்பு தும்பில இருந்தெல்லாம் கொஞ்ச நாளைக்கு ஓய்வு என்றால் யாருக்குத்தான் பிடிக்காது, ஊருக்குப் போறமே , போறமே என்ற சந்தோஷத்திலை பிளைட்டிலை இருந்த அத்தனை மணி நேரத்தில பொட்டுத் தூக்கம் கூட வர மாட்டன் எண்டிட்டுது. குடுக்கிறதை எல்லாம் குடுத்திட்டு வேலையை முடிச்சிட்டம். "இனிப்படுங்கோ" எண்ட ரீதியில லைட்டை எல்லாம் நிப்பாட்டி விட, சரிஞ்சும் படுக்க முடியாம நிமிர்ந்தும் படுக்க முடியாம எல்லாரும் அங்க முட்டி இங்க முட்டிக்கொண்டு கோழித்தூக்கம் போடுறதும் காணாது எண்டு, குறட்டையும் சிலபேர் விட்டுக்கொண்டிருக்க நான் மட்டும் அங்கபாத்து இங்க பாத்து கடைசியா பக்கத்தில பிள்ளை பாத்துக் கொண்டிருந்த கொமெடி "சோ" ஓண்டில ஐக்கியமாகிட்டன். திரும்பவும் லைட்டைப்போட்டாங்க, சாப்பாட்டையும்,

குடிக்கிறதுக்கு எல்லா ஐட்டத்தையும் தந்தாங்கள். லைட்டை அணைச்சிட்டு நித்திரையைக் கொள் எண்டு திரும்ப விட்டுட்டாங்கள். பிள்ளைக்காப்பகத்தில் என்ன செய்யுறாங்களோ அதைத்தான் நம்மளுக்கும் செய்யுறாங்கள் எண்டு திட்டிக்கொண்டு மறுபடியும் கண்களை மூடிக்கொண்டேன். முடியுமா, முடியாதா என்று நினைத்துக்கொண்ட நீண்ட பயணம் ஒருவழியா முடிவுக்கு வந்தது. உள்ளிருக்கும் போதே சொந்தமண்ணின் சுகமான நினைவுகள் இதமாய் மனதுள் வருட, மண்ணின் காற்றுக்காய் சுவாசம் காத்திருந்த அந்த சில நிமிடங்கள் மிக நீண்டதாய்த் தோன்றியது. முன்னால் நீண்டிருந்த மனிதத் தலைகள் அசைந்து முன்னே போகின்றனவா என்று பார்த்துப் பார்த்துச் சலித்துப்போன நிமிடத்தில் வரிசை மெல்ல நகரத் தொடங்கியது. நன்றி சொன்ன விமானப்பணிப்பெண்ணுக்கு அவசரமாகத்தலை அசைத்துவிட்டு ஆமை போல மெல்ல நகரும் மனிதர்களை தவிர்த்துக் கொண்டு அவசரமாக வெளியே ஓடிவந்து முடிக்க வேண்டியவற்றை முடித்து, கொண்டு வந்த பெட்டிகளை எடுத்துப்போட்டுக்கொண்டு எமக்காகக் காத்து நின்ற உறவுகளைத் தூரத்திலேயே காணும் போது சந்தோசத்தில மனது துள்ளாட்டம் போட நாமும் குழந்தைகளாகிக் குதூகலித்த சந்தோசத்தை வர்ணிக்க வார்த்தைகள் தான் இல்லை.

ஒருமாதிரி வீட்டுக்குப்போய்ச் சேர்ந்து பொட்டிகளைத் திறந்து மாதக்கணக்கா தேடித் தேடி வாங்கிக்கொண்டு வந்த சாமான்களைப் பரப்பிப்போட்டுப் பார்த்தா, முகத்தில ரியாக்சன் ஒண்டையும் காணேல்லை. வெளி நாட்டில இருந்து நிறையச் சாமான்களை எல்லாரும் கொண்டு வந்து கொடுக்கிறதாலையோ, அல்லது இப்ப அது எல்லாம் அங்கயே கிடைக்கிறதாலயோ என்னமோ நாங்கள் எதிர்பார்க்கிற ரியாக்சன் கிடைக்காததால கொஞ்சம் உற்சாகத்தில பலூன் குத்தினது மாதிரித்தான் போட்டுது, ஏனென்றால் சில சாமான்கள் விலை எண்டு, நாங்களே எங்களுக்கு வாங்கினது இல்லை எண்டபடியால எங்கட மனசும் கொஞ்சமாவது ஒரு ரியாக்சனை எதிர்பார்த்தது பிழையில்லைத்தானே?

சரி, விடியக்காலம புட்டை, இடியப்பத்தைச் செஞ்சி தருவாங்கள் எண்டு பார்த்தா, அதுகள் எல்லாம் இப்ப நம்மள மாதிரி பாலிலை சீரியலைப் போட்டு ஊறப்போட்டுட்டு பல்லில்லாத கிழவன் மாதிரித்தான் சாப்பிட்டுட்டுப் போகுதுகள், இல்லையென்றால் பாணைக்கடிச்சுப் போட்டுப் பறக்குதுகள். அடடா, ஆசைப்பட்டா நாங்கள்தான் சமைச்சுச் சாப்பிடோணும் போல, நேரமும் தாராளமாக் கிடக்குது தானே எண்டு களத்தில இறங்கியாச்சு. ஹொலிடே எண்டு ஓய்வு எடுத்து, வித்தியாசமா சாப்பிடலாம் எண்டு வந்தால், இங்கயும் என்ர கையாலதானோ சாப்பிடவேண்டி இருக்குது எண்டு எங்கட வீட்டுக்காரர் உள்ளுக்குள்ள அழுதிருப்பார், வெளியில சொன்னா பிறகு நிரந்தரமா கஞ்சிக்கு பங்கம் வந்திடும் எண்டு சொல்லாமல் விட்டிருப்பார். அவரிண்ட பயத்திலயும் கொஞ்சம் நியாயம் இருக்குத்தானே?

காசைக் கையில எடுக்கிறது எண்டா, எங்களுக்கு என்னவெல்லாம் நினைவுக்கு வரும் தெரியுமே? இது எத்தனை மணி நேர உழைப்புக்குச் சமன், மாத்திப் பார்த்தா எவ்வளவு வரும் எண்டது மாதிரியான கணக்கெல்லாம் மனசுக்குள்ள ஒருக்கா ஓடிப் போட்டு ஒரு பெருமூச்சோடதான் நிக்கும். காசுக்குக் கணக்குப் பாக்கிற கஞ்சத்தனமில்லை, ஆனா இந்தக் காசுக்குப் பின்னால வெள்ளைக்காரனோட போராடி எங்கட இருப்பைத் தக்க வைக்கிறதுக்கு மாடா உழைக்கிற எங்கட மூலதனம், ஒரு நிமிசம் எங்கட ஞாபகத்துக்கு வராமல் போகாது. வெளி நாட்டுல இருந்து வந்தா, காசைப் பின்னால காய்க்கிற மரத்தில இருந்து எடுத்து வந்திருக்கினம் எண்ட எங்கட ஊர்க்காரரிண்ட நினைப்பு எப்ப மாறுமோ தெரியாது. அதைச் சுட்டிக்காட்டி நக்கலா ஏதாவது சொல்லும் போது நெஞ்சுக்குள்ள நிண்டு நெருடித் துப்பத் துடிக்கும் வார்த்தைகளைக் கட்டுப்படுத்தப் பெரும்பாடு படவேண்டி இருக்கும். அவையளைச் சொல்லியும் குற்றமில்லை. இங்க இருந்து போற ஆக்கள் அங்க காட்டுற பந்தாவில அவையள் அப்பிடி நினைக்கிறது ஒண்டும் அதிசயமில்லைத்தானே?

முந்தியெண்டா வீட்டுக்கு வீடு, ஆடு, மாடு எண்டு ஏதாவது ஒரு சீவனிருக்கும். கடைசி,

ஒரு கோழியாவது வீட்டில அங்க இங்க எண்டு கிளறிக் கொண்டு திரியும், ஆனா இப்ப நேரம் கிடைக்கிறது இல்லை எண்டதால பாதிப்பேரிட வீட்டில அது மிஸ்ஸிங். முந்தி வீட்டுக்கு வீடு பிள்ளைகள் சேர்ந்து கொண்டு பள்ளிக்குப் போறதே அழகு, வீட்டுக்கதவைத் திறந்து கொண்டு றோட்டில இறங்கினா, அது எங்கட களத்தில இறங்கினது மாதிரித்தான். வம்பளத்துக் கொண்டு, வீட்டுக் கதை எல்லாம் அவிழ்த்து விட்டுக்கொண்டு அங்க இங்க திரிஞ்சிட்டு ஆடு, மாடு வீட்டுக்கு வர்ற நேரம்தான் நாங்களும் அதுகளோட நாங்களும் ஒருவராக வீட்டுக் கதவை மிதிப்பம். கொஞ்சம் வளர்ந்த பொடியள் எண்டா, இப்பிடி பிள்ளைகள் போற நேரம் தானே சைட் அடிக்கவும் சாடை கதைக்கவும் உதவியிருக்குது. இப்ப என்னடா எண்டா, வீட்டுக்கு வீடு ஸ்கூட்டி. அப்பாவோ அம்மாவோ,அண்ணனோ, அல்லது யாரோ சொந்தமோதான் பாலர் படிக்கிற பிள்ளையில இருந்து பன்னிரண்டு படிக்கிற பிள்ளை வரைக்கும் ஏத்தி இறக்குது. பாவம் நம்மட பொடியளுக்கு அங்க இங்க எண்டு இந்த அழகான பிள்ளைகளைப் பாக்கிறதுக்கு சான்சே கிடைக்காது போல இருக்குது.

அதைவிட குழந்தை குட்டி தொடக்கம் பல்லில்லாத கிழடுகள் வரை இந்தத் தொழில் நுட்பம் பாடாய்ப் படுத்தி வைச்சிருக்குது. ஆச்சி டாய்லெட்டுக்கும் போனைக் கொண்டு போறா, பொடியன் கூப்பிடுற நேரம் மிஸ் பண்ணக்கூடாது எண்டு விளக்கம் வேற. கையில போன், மேசையில போன், கட்டில்ல போன் எண்டு எங்க பார்த்தாலும் விதவிதமா போன் மயம் தான். நாங்கள் இங்க கொஞ்சம் பரவாயில்லையோ எண்டுதான் நினைச்சுக்கொண்டன்.

மார்க்கெட்டில பத்து மணிவாக்கில, நண்பன் ஒருவனைப் பார்த்தேன். முந்தின காலம் மாதிரி, அதுவும் கவர்ன்மெண்ட் வேலையெண்டால் மதியவாக்கில அத்தனை வேலை விசுவாசிகளையும் மார்க்கெட் வழிய காணலாம். வீட்டுக்கு மரக்கறியை, மீனை வாங்கிக் குடுத்துட்டு பிறகு ஒரு இரண்டு மணிவாக்கில சாப்பிடுறதுக்கு எண்டு தலைமறைவாய்ப் போடுவினம். திரும்ப வேலைக்கு வாறதும் விடுறதும் அவையவையின்ர விருப்பம். நானும் அந்த நினைப்பிலதான் என்ன சமையலுக்கோ எண்டு கேட்டன். அவர் சொன்ன பதிலிலை “அட பரவாயில்லை நாங்கள் இங்கயே இருக்கலாம்” எண்ட முடிவுக்கு வந்திடுவியள் பாருங்கோ.

“ நாங்கள் சனி ஞாயிறில மீனையும் மரக்கறியையும் மொத்தமா வாங்கி வைச்சிடுவம். மீனைச் சின்ன சின்ன பார்சல் கட்டி வைச்சா, காலையில எழும்பி சமைச்சிட்டுப் போடுவா மனிசி. மரக்கறி எல்லாம் காய்ச்சி பிறிட்ஜ்சுக்குள்ள வைச்சிட்டா இருக்குந்தானே. அவையவை வர்ற நேரம் சூடாக்கிச் சாப்பிடலாம் தானே எண்டு” விளக்கமாய்ச் சொன்னதைக் கேட்டு தலை கிறுகிறுத்துப் போட்டுது. அடப்பாவிகள் சூடாச் சமைச்சு, சூடாய்ச் சாப்பிடலாம் எண்ட என்ர சில்லறை ஆசைக்கு இவங்கள் ஆப்பு வைக்கிறாங்களே? இந்த மைக்கிரோவேவ் இல்லாம, பெயர் சொல்லேலாத வருத்தங்களில இருந்து இவங்களாவது தப்புவாங்கள் எண்டு பார்த்தா அதுக்கும் வழியில்லையே எண்டு நொந்து கொண்ட மனசு “பரவாயில்லை, ஊரில இல்லாததாலை நாங்கள் ஒண்டையும் மிஸ் பண்ணேல்ல” எண்டும் ஆறுதல் பட்டுக் கொண்டுது. இது நடந்தது கொழும்பில எண்டு நினைச்சா பாவம் நீங்க, நம்ம யாழ்ப்பாணத்திலதான்.

தமிழைத்தான் தாய்நாட்டு ரேஞ்சுக்குக் கட்டிக் காக்க முடியேல்லை கலாச்சாரத்தையாவது அழியவிடாமல் காக்க வேணும் எண்டு இங்க நாங்கள் அதைக்கட்டிக் காக்க பிள்ளைகளோட அப்பப்ப மல்லாடுறம். அதுகளும் என்ன செய்யிறது எண்டு, எங்களை உள்ளுக்குள்ள திட்டிப்போட்டுட்டு வெளியில பின்பற்றுதுகள். ஆனா ஊரில வெளிநாட்டுக்கலாச்சாரத்தை சிலபேர் அப்பிடியே பின்பற்றுகிறார்களோ என்றுதான் தோன்றியது. ஒட்டுமொத்தமாக அத்தனை பேரையும் குறை சொல்லவில்லை, பாலில் விழுந்த விஷம் போல அத்தனை பேரும் மாற்றிக் கொள்ள அதிகநேரம் எடுக்கப்போவதில்லை. ஏனெனில் நாம் வளர்ந்த காலத்தில் அத்தனை உடம்பையும் மூடி அணியும் சல்வாரே கொஞ்சம் அதிகப்படியாய்த்தான் காணப்பட்டது ஆனால் 2–3 வருடத்துக்குள்ளாகவே அது மிகச் சர்வசாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு

விட்டது. இதுவும் அப்பிடித்தான் ஆகுமோ தெரியாது.

ஆட்கள் மாறியிருக்கலாம், ஊரும் மாறியிருக்கலாம். ஆனால் நட்ட நடுவீதியில் தூண்டாமணி விளக்கின் அணையாச் சுடரொளியில் காவல் தெய்வமாய் நித்தம் தரிசித்த நரசிம்மரும், மண்ணில் நடந்து அதே தூசியுடன் அருவருப்பின்றி படுத்துறங்கிய வீடுமாய்க் கிட்டத்தட்ட ஒரு மாதகாலத்தைக் கழித்து விட்டுக் கிளம்ப வேண்டுமே என்று நினைத்தபோது துக்கம் ஒரு பந்துக்குண்டாய் நெஞ்சுக்குள் அடைத்துத்தான் கொண்டது. சொந்தமண்ணிருந்து பிடுங்கி எடுத்து எங்கே நட்டிருந்தாலும், அதேமண்ணில் மீண்டும் வேரோடி விட ஒரு வாரமே போதும் என்பது போல் மனதும் உணர்வும் அங்கேயே நிலை கொண்டு விட, அதைப் பிடுங்கி எடுத்து வந்து இங்கே ஒட்டிக்கொள்ளப் பல நாட்கள் ஆகி விட்டன. மீண்டும் இரண்டு வருடத்தின் பின் ஊருக்குச் செல்லலாம் என்ற ஒரே நம்பிக்கையில் அந்த நாளுக்காக மீண்டும் நாட்களை எண்ணிக் கொள்ளத்தொடங்கி விட்டேன். நாட்கள் கொஞ்சம் நீண்டவைதான் என்றாலும் அதைவிட என் நம்பிக்கை மிக நீண்டது.

## குடும்பம் ஒன்று சேர்ந்து வரும் எப்போதும்

நோய் மற்றும் ஆரோக்கியம்
வறுமை அல்லது செல்வம்
குடும்பம் ஒன்று சேர்ந்து வரும் எப்போதும்

எந்த காரணமும் இல்லாமல்
எந்த நேரத்திலும் அல்லது எந்த பருவத்திலும்
குடும்பம் ஒன்று சேர்ந்து வரும் எப்போதும்

இழப்பில் அல்லது வாழ்க்கையில்
மகிழ்ச்சியில் அல்லது துன்பத்தில்
குடும்பம் ஒன்று சேர்ந்து வரும் எப்போதும்

கோபத்தில் அல்லது இரக்கத்தில்
பலர் போற்றலில் அல்லது துரற்றலில்
குடும்பம் ஒன்று சேர்ந்து வரும் எப்போதும்

வேலை அல்லது வேடிக்கையில்
துணையாக அல்லது அணையாக
குடும்பம் ஒன்று சேர்ந்து வரும் எப்போதும்

**கவின் சத்தியசுதன்**
***VTA Glen Waverley* பள்ளி**

# தமிழ் பாடசாலைகள் - விக்டோரியா

| | | | | |
|---|---|---|---|---|
| Australian Tamil Academy | Carrum Downs Campus | Carrum Downs Secondary College | 0434 013 993 | info@australiantamilacademy.org |
| | Narre Warren Campus | Fountain Gate Secondary College | | |
| | Clyde North Campus | Wilandra Rise Primary School | | |
| | Cranbourne East Campus | Balla Balla Community Centre | | |
| AVVAI Tamil Palli | Oakleigh south | Huntingdale Primary School | 0401 076 615 | AvvaiTamilPalli@gmail.com |
| Bharathi Academy | East burwood | Forest Hill College | 0411 304 402 | info@bharathi.org.au<br><br>1300 933 922<br><br>0433 354401 |
| | Dandenong | Dandenong High School (Ann St. Campus) | 0417 139 629 | |
| | South morang, | The Lakes South Morang P – 9 School, | 0487 888 226 | |
| | Clayton south | Westall Secondary College | 0416 032 585 | |
| | Berwick | Kambrya College | 0403 436 970 | |
| Eelam Tamil Association Victoria Inc. | Brimbank | Taylors Lakes Secondary College | 0415 846 805 | m.paraman@gmail.com |
| | Box hill | Kingswood College | 0488 747 757 | |
| | Glen waverley | Wesley College, | 0403 089 451 | |
| | Mill park | St. Francis of Assisi, | 0452 536 009 | |
| | Wyndham | Hoppers Crossing Secondary College | 0458 500 570 | |
| | Narre warren | Narre Warren South P-12 College | 0409 858 478 | |
| | Sunshine | 6 South Road<br><br>BrayBrook, VIC 3019 | 0412 479 209 | |
| | Doveton | 10 Laurel Avenue<br><br>Doveton, VIC 3177 | 0433 032 932 | |
| Tamizh Pallikoodam | Ashwood | Ashwood High School | 0386 409 610 | info@tamizhpallikoodam.org.au |
| | Cranbourne | Lyndhurst Secondary College | | |

# தாய் மண்ணே நீ நலமா?

*ஒரு கூட்டுக்கிளியாக ஒன்றித்து எமை வளர்த்த*
*தனி வீடே நீ நலமா?*
*ஒரு கால் பின் இழுக்க முழங்கால் தேய்த்தபடி*
*நான் தவழ்ந்த மண்ணே நீ நலமா?*
*முகரும் நாசிக்கு மூச்சுக்குள் வாசமிட்ட*
*முற்றத்து மல்லிகையே முழுமதியே நீ நலமா?*

*தென்றல் சுமந்து என் தேசத்தைக் குளிர்வித்த*
*விருட்சப் பெருநிலவே வேம்பே நீ நலமா?*
*வெப்பம் உணர்ந்து என் தாகம் தணித்திட்ட*
*நீரே நீ நலமா? நீ வாழும் கிணறும் நலமா?*
*தோரணம் நான் செய்ய குருத்தோலை கொடுத்த*
*என் வீட்டுத் தென்னையே நீ நலமா?*

*குரும்பட்டித் தேர் செய்து விளையாட இடம் தந்த*
*மரநிழலே நீ நலமா?*
*காலை உணவை என் கையிலிருந்து பறித்திட்ட*
*காக்கா நீ நலமா? கதவோரப் பல்லியே நீ நலமா?*
*மாலை வர வீடு வரும் ஆநிரையே நீ நலமா?*
*மாமரமே நீ நலமா? மாங்கிளியே நீ நலமா?*

*அகரம் எனக்களித்து அச்சம் தவிர்த்திட்ட*
*அன்புப் பள்ளியே நீ நலமா?*
*ஒன்றாய்கூடி ஓடி விளையாடி*
*ஓசை எழுப்பிய மைதானம் நலம் தானா?*
*நான் நடந்து பள்ளி சென்ற வரம்பே நீ நலமா?*
*வளரும் பயிருக்கு வழி கொடுத்த வயலே நீ நலமா?*

*குடசம்பூ காற்றாடும் குளக்கரையே நீ நலமா?*
*குயிலே நீ நலமா? கோயில் மணியே நீ நலமா?*
*இசையே நீ நலமா? என் பண்பாடே நீ நலமா?*
*திசை தெரியாத் தூரத்தில் திக்கெட்டும் பார்த்தபடி*
*அசை போடும் மனதுக்கு ஆறுதல் சொல்லடி நீ!*
*தமிழே நீ நலமா? என் தாய் மண்ணே நீ நலமா?*

**ஆக்கம் : நித்யா தர்மசீலன் (தர்மதா)**

Mortgage IP



Your space.
Your time.

1300 647 111
info@mortgageip.com.au
www.mortgageip.com.au

Simple Path
Financial Solutions

- ✓ Superannuation
- ✓ Self-Managed Super Fund
- ✓ Debt Management (Loans)
- ✓ Personal Insurances
- ✓ Business Insurances
- ✓ Tax Planning
- ✓ Retirement Planning
- ✓ Estate Planning
- ✓ Wealth Management
- ✓ Investment Planning
- ✓ Centrelink Strategies



Yvonne Parasuraman

FREE Financial Consultation
0405 321 001
info@simplepathfs.com.au
48 McIntyre Street Burwood 3125

TOGETHER we can do great things...

*Yvonne Parasuraman and Simple Path Financial Solutions Pty Ltd ATF SPFS Trust are Authorised Represntatives of GWM Adviser Services Limited ABN 96 002 071 749 trading as Garvan Financial Planning, an Australian Financial Services Licensee, Registered office at 105 –153 Miller St North Sydney NSW 2060 and a member of the National Australia group of companies.*

# CRESTON ®

## REAL ESTATE

changing dreams into reality

உரிமையாளர்களே உங்கள் பணத்தை இழக்காதீர்

$$$$

# வாடகை வீடுகள் அவசரமாக தேவை!!!



**தொடர்புகளுக்கு Ashton Ashokkumar**

**0405 559 766**




*Burwood Hwy, Burwood*




*Cyan Crescent, Officer*




*Graham-Michele Pl, Keysborough*




*Bourke Road, Clayton South*

**www.crestonrealestate.com.au PH: 03 9792 0042**

**264 Lonsdale St, Dandenong – 3175.**